# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2025 - 2026

### மானியக் கோரிக்கை எண். 42


## திரு. உதயநிதி ஸ்டாலின்

துணை முதலமைச்சர்



©
தமிழ்நாடு அரசு



2025

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| **1.** | **முன்னுரை** | 1 |
| **2.** | **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (TNCDW)** | 9 |
| 2.1 | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வரலாறு | 11 |
| 2.2 | நிறுவன அமைப்பு | 13 |
| **3** | **சுய உதவிக் குழு இயக்கம் மற்றும் மகளிர் திட்டம்** | 17 |
| 3.1 | பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) திட்டம் | 19 |
| 3.2 | மகளிர் திட்டம் | 20 |
| **4** | **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்** | 23 |
| 4.1 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) | 26 |
| 4.2 | தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY) | 27 |
| 4.3 | தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM) | 28 |

| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| **5.** | **தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)** | 29 |
| 5.1 | சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்பு | 31 |
| 5.2 | திறன் வளர்ப்பு | 47 |
| 5.3 | நிதி உள்ளாக்கம் மற்றும் நுண் கடன் பெறுவதற்கான வழி முறை | 52 |
| 5.4 | கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் சமூக உள்ளீடுகள் | 74 |
| 5.5 | வாழ்வாதார மேம்பாடு | 97 |
| 5.6 | விருதுகள் | 142 |
| 6. | **திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு** | 147 |
| 6.1 | திறன்மிக்க பணியாளர்களை உருவாக்குதல் | 149 |
| 6.2 | தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY) | 151 |
| 6.3 | ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs) | 157 |
| 6.4 | உன்னதி (UNNATI) | 160 |
| 6.5 | இளைஞர் திறன் திருவிழாக்கள் (Youth Skill Festivals–YSF) | 161 |

| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 6.6 | வேலைவாய்ப்பு முகாம்கள் மூலமாக நேரடி வேலைவாய்ப்பு | 163 |
| 6.7 | சொந்த வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்கள் | 164 |
| **7.** | **தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)** | 167 |
| 7.1 | சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID) | 171 |
| 7.2 | திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி | 177 |
| 7.3 | சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP) | 178 |
| 7.4 | தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி | 183 |
| 7.5 | கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு | 184 |
| **8.** | **தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP) @ வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP) 2.0** | 189 |
| 8.1 | திட்ட மேம்பாட்டு நோக்கங்கள் | 193 |
| 8.2 | நிதி முறை | 194 |
| 8.3 | திட்டத்தின் முக்கியக் கூறுகள் | 194 |
| 8.4 | திட்டத்தின் முக்கிய செயல்பாட்டு நுணுக்கங்கள் | 195 |
| 8.5 | குழு நிறுவனங்கள் | 196 |

| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 8.6 | தனிநபர் தொழில் நிறுவனம் | 201 |
| 8.7 | சமுதாயத் திறன் மற்றும் பண்ணைப் பள்ளிகள் | 202 |
| 8.8 | தொழில் முனைவுக்கான நிதியை முறைப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களின் மூலம் வழங்குதல் | 208 |
| 8.9 | வணிகப் புதிய முயற்சிகளை ஊக்குவித்தல் | 215 |
| 8.10 | நிறுவனங்களை நிறுவுதல் | 217 |
| 8.11 | தனிநபர் தொழில் முனைவோருக்கு திறன் வளர்ப்பு | 221 |
| 8.12 | கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | 228 |
| 8.13 | தகவல் மேலாண்மை அமைப்பு | 230 |
| **9** | **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் உள்ள சங்கங்கள்** | 239 |
| 9.1 | தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) | 241 |
| 9.2 | முற்றம் மாத இதழ் | 244 |
| 9.3 | தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் (TNSSMS) | 247 |
| **10** | **முடிவுரை** | 249 |

# 1. முன்னுரை

**முன்னுரை**

"ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்தினால், அதைக்கொண்டு ஆயிரம் விளக்குகளை ஏற்ற முடியும். அறிவொளி பெற்ற ஒரு பெண்ணாலும் அது முடியும்."

**முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்கள்
மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர்

மகளிரின் மகிழ்ச்சி தான் நமது செயலாக்கத்திற்கான உண்மையான அளவுகோல்!

மகளிர் மகிழ்ச்சி அடைந்தால், அவர்களது மனது நிறைந்தால் போதும்.

நாம் சரியான பாதையில் பயணிக்கிறோம் என்பதற்கு அதுவே நற்சான்று.

இல்லத்தை மட்டுமின்றி, உலகத்தையும் இயங்கச் செய்யும் ஆற்றல் மிக்கவர்கள் மகளிர்.

**மு.க. ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

தொலைநோக்குப் பார்வை கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், நல்லாட்சி புரிந்து வரும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் உரைத்த பொருளார்ந்த வார்த்தைகள், பெண்களின் தொடர்ச்சியான அதிகாரமளிப்புக்கான தமிழ்நாடு அரசின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கின்றன. பெண்களுக்கான பொருளாதார சுதந்திரம், சமூக மேம்பாடு மற்றும் அரசியல் அதிகாரமளித்தல் ஆகியவற்றிற்கான தொலைநோக்கு கொள்கைகளை உருவாக்குவதில் தமிழ்நாடு எப்போதும் முன்னோடியாகவும், வழிகாட்டுதலாகவும் இருந்து வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1989 ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் சிறிய அளவில் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழு (SHG) இயக்கமானது, தற்போது மாநிலத்தின் அனைத்து

மாவட்டங்களையும் உள்ளடக்கிய ஒரு மகத்தான இயக்கமாக வளர்ந்துள்ளது. சுய உதவிக் குழு இயக்கமானது ஏழைக் குடும்பங்கள் மற்றும் சமூகத்தின் நலிவுற்ற பிரிவு மக்களை முன்னேற்றமடையச் செய்வதை இலக்காகக் கொண்டு, 10 முதல் 20 பெண்களை சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து, அவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து, நிதி சுதந்திரத்தை வளர்பதற்காக நிதி உதவிகளை வழங்கி வருகிறது.

பல ஆண்டுகளாக சுய உதவிக் குழு மகளிர் பல்வேறு திட்டங்கள் மூலம் வாழ்வாதார மேம்பாடு அடைந்து வருகின்றனர். தற்போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (TNCDW) ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்களை செயல்படுத்துவதோடு, உலக வங்கியின் நிதி உதவியுடன் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம் மூலம் சுய உதவிக் குழுக்களை வளர்த்து வருகிறது.

சுய உதவிக் குழு இயக்கமானது, சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, பின்னர் அவற்றை ஊரகப் பகுதிகளில் ஒரே குடையின் கீழ் கிராம ஊராட்சி அளவில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (PLF) மற்றும் வட்டார அளவில் வட்டார அளவிலான கூட்டமைப்புகளை (BLF) அமைப்பதில் கவனம் செலுத்துகிறது. இதேபோல், நகர்ப்புர சுய உதவிக் குழு இயக்கம் மூலம் நகர்புர உள்ளாட்சி அமைப்பு அளவில் பகுதி அளவிலான கூட்டமைப்பு (ALF) மற்றும் நகர அளவில், நகர அளவிலான கூட்டமைப்பு (CLF) ஆகியவற்றை உருவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள், சுய உதவிக் குழுக்களை உருவாக்குவதிலும், சுழல் நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதியை கடனாக விடுவிப்பதன் மூலம் அவர்களை கடன் வழங்குபவர்களின்

பிடியிலிருந்து தடுத்து பொருளாதார சுதந்திரத்தை மேம்படுத்துவதிலும் முக்கிய கவனம் செலுத்துகிறது.

சுய உதவி குழு உறுப்பினர்களாக உள்ள மகளிருக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கடன் இணைப்புகள் மற்றும் தொழில் முனைவோர் திறன் பயிற்சி அளிப்பதன் மூலம் நுண் நிறுவனங்கள் மற்றும் தொகுப்புகள் உருவாக்கி பெண்களின் வாழ்க்கையையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு உதவி செய்து, மேலும் பொருளாதார தன்னிறைவு பெற்றவர்களாகவும், நிலைத்த தன்மை உடையவர்களாகவும் உருவாக்குகிறது.

சமுதாயம் சார்ந்த அமைப்புகளும் மற்றும் சமுதாய வல்லுநர்களும் பெண்கள் மற்றும் குறிப்பாக பொருளாதார ரீதியான ஏழைகளை இலக்காகக் கொண்டு திட்ட பயன்கள் மற்றும்

அரசு சேவைகளை வழங்குவதற்கான வழியாக செயல்படுகின்றன.

துவக்கத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் சேமிப்பு மற்றும் கடன் பெறுவதை வழக்கமாக கொண்ட குழுக்கள், பின்னர் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து விழிப்புணர்வை உருவாக்குதல், நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் பாலின அடிப்படையிலான பாகுபாடுகள் தொடர்பான சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்தல் ஆகியவைகளை உள்ளடக்கியதாக விரிவடைந்துள்ளன. காலப்போக்கில், தமிழ்நாட்டின் சமூக–பொருளாதார மாற்றத்திற்கான ஒரு சக்தி வாய்ந்த அமைப்பாக சுய உதவிக் குழுக்கள் உருவாகியுள்ளன.

# 2. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (TNCDW)

## 2.1 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வரலாறு

தமிழ்நாடு அரசானது, பெண்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்ற ஒரு தனி நிறுவனத்தை 1983–ஆம் ஆண்டு டிசம்பர் 9 – அன்று இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, தொடங்கியதன் மூலம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளில் ஏழைகள், நலிவுற்றோர் மற்றும் விளிம்புநிலை மக்களின் முன்னேற்றத்திற்கான பல்வேறு வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனமாகும்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து 2006ஆம் ஆண்டு

வரை சமூக நலத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்தது. அடித்தட்டு அளவிலான ஊராட்சி நிறுவன அமைப்புகளின் பயனுள்ள ஒருங்கிணைப்புடன் மகளிருக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கு ஏதுவாக, ஜுலை 2006ஆம் ஆண்டு முதல் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சமுதாயம் சார்ந்த அமைப்புகளான (CBOs) ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் (PLFs) மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் (BLFs) மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் (ALFs) போன்றவற்றின் வாயிலாக பயிற்சிகள், வங்கி சேவைகள், அரசு சேவைகள் போன்றவற்றிற்கு முறையான வழிகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம் பெண்களின்

ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக சுய உதவிக் குழு (SHG) இயக்கத்தை வளர்த்தது.

## 2.2 நிறுவன அமைப்பு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவராக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் உள்ளார். இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை முன்னெடுக்க மேலாண்மை இயக்குநரும், அவருக்கு உறுதுணையாக செயல் இயக்குநர், மேலும் ஒவ்வொரு கருப்பொருட்களுக்கு தலைமையாக கூடுதல் இயக்குநர்கள், அவர்களுக்குத் துணையாக இணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், நிறுவனப் பணியாளர்கள் மற்றும் திட்டப் பணியாளர்கள் ஆகியோர் மாநில இயக்க மேலாண்மை அலகில் உள்ளனர். மேலும், திறன் வளர்ப்பு, சமூக மற்றும் நிறுவன கட்டமைப்பு, கூட்டாண்மை மற்றும்

ஒருங்கிணைப்பு, நிதி உள்ளாக்கம், வாழ்வாதாரம் மற்றும் தொழில் மேம்பாடு போன்ற கருப்பொருட்களுக்கான வல்லுநர்கள் ஆலோசகர்களாக செயல்படுகிறார்கள்.

மாவட்ட அளவில், இணை இயக்குநர் நிலையில் உள்ள திட்ட இயக்குநரின் (மதி) தலைமையின் கீழ் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு செயல்படுகிறது. மாவட்டத்தில் கள அளவிலான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து நிறைவேற்றுவதற்கு திட்ட இயக்குநரின் கீழ் ஒவ்வொரு கருப்பொருளுக்கும் உதவித் திட்ட அலுவலர்கள் செயல்படுகிறார்கள்.

வட்டார அளவில் உள்ள வட்டார இயக்க மேலாண்மை அலகில் திட்ட செயல்பாட்டினை வட்டார மேலாளர் வழி நடத்துகிறார். திட்ட செயலாக்கத்தின் ஒவ்வொரு கருப்பொருளுக்கும் ஒரு வட்டார ஒருங்கிணைப்பாளர்

செயல்படுகிறார். இதேபோல், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பில், சமுதாய அமைப்பாளர்கள் (CO) திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்கின்றனர்.

# 3. சுய உதவிக் குழு இயக்கம் மற்றும் மகளிர் திட்டம்

## 3.1 பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) திட்டம்

1980–ஆம் ஆண்டின் ஆரம்பக் காலகட்டத்தில் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் பெண்களை குறிப்பிட்ட இலக்காகக் கொண்டு செயல்படுத்தப்படவில்லை. முதல் முறையாக பொருளாதார மேம்பாட்டையும் கடந்து மகளிரின் வளர்ச்சிக்கான ஒரு முழுமையான அணுகுமுறை பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) மூலமாக உருவாக்கப்பட்டது.

சுய உதவிக் குழுக்கள் மூலமாக ஜனநாயக, சமத்துவ, கூட்டுறவு சமூக கட்டமைப்பை உருவாக்குவதற்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி (IFAD) திட்டத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டது. முதலில், IFAD திட்டம் விவசாயம் மற்றும் நில மேம்பாட்டுத் திட்டமாக

உருவாக்கப்பட்டது. ஆனால் மெதுவாக அது சுய உதவிக் குழுக்களை உருவாக்கி வளர்ப்பதன் மூலம் பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான இயக்கமாக பரிணமித்தது.

இந்த திட்டம் தர்மபுரியில் துவங்கப்பட்டு, 1992–ம் ஆண்டு சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களுக்கும், 1993–ம் ஆண்டு மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் மாநில அரசின் அங்கமான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் கொண்டுவரப்பட்டு மகளிர் திட்டம் (மதி) என அறியப்பட்டது.

## 3.2 மகளிர் திட்டம்

பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) திட்டத்தின் மகத்தான வெற்றியானது, மாநிலம் முழுவதும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை மற்றும் மிகவும் பின்தங்கிய

மகளிரிடம் சென்றடைவதற்கு அடித்தளமிட்டது. இந்தத் திட்டம் படிப்படியாக அனைத்து மாவட்டங்களின் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் (TNCDW) மகளிர் திட்டம், தாமாகவே முன்வந்து சேமிப்பு மற்றும் சிக்கனத்தை மேற்கொள்ளும் மகளிரின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது பொருளாதாரத் தடைகள் மற்றும் சமூகத் தடைகளைத் தாண்டி, தங்கள் திறனை உணர்ந்து மாற்றத்தின் சக்தியாக மாறுவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவர்களின் திறனை வளர்க்கவும் ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டது.

தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் சுய உதவிக் குழு இயக்கம் பத்து ஆண்டுகளுக்கு

மேலாக வெற்றிகரமாக செயல்பட்டதன் அடிப்படையில், ஊரக வறுமை ஒழிப்பு மற்றும் பெண்களின் பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு 1999 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு ஸ்வர்ண ஜெயந்தி கிராம் ஸ்வரோஸ்கர் யோஜனா (SGSY) என்கின்ற புதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

# 4. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

## 4. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் வறுமை ஒழிப்பினை முதன்மை நோக்கமாக கொண்டு ஒருங்கிணைந்த சமூக பொருளாதார முன்னேற்றத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது, மகளிருக்கான சமூக – பொருளாதார மற்றும் அரசியல் பங்களிப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் மகளிருக்கான பல்வேறு வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார திட்டங்களை செயல்படுத்தப்படுவதன் மூலம் இவை சாத்தியமாகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் :

i) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

ii) தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் பயிற்சித் திட்டம் (DDU–GKY)

iii) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)

## 4.1 தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

தமிழ்நாடு அரசானது, ஒன்றிய அரசின் தீன்தயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தை (DAY–NRLM) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமாக ஒன்றிய மற்றும் மாநில அரசின் 60:40 என்ற நிதி பகிர்வு அடிப்படையில் 2012–13–ம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. ஊரகப்பகுதிகளில் ஏழைகளைக் கொண்டு வலுவான மற்றும் துடிப்பான மக்கள் அமைப்புகளுக்கான அடித்தளத்தை உருவாக்கும் பொருட்டு, வறுமை ஒழிப்பு திட்டங்களை செயல்படுத்தி இத்திட்டத்தின் மூலம் வாழ்வாதார முன்னெடுப்புகள், வங்கி கடன் இணைப்பு மற்றும் நிதி சார்ந்த பிற சேவைகளை பெறுவதற்கான

வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டு அக்குடும்பங்களின் வருமானம் உயர்த்தப்படுகிறது. மகளிருக்கு நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதற்காக இலக்கு மக்களை சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டு சமுதாயம் சார்ந்த அமைப்புகளில் இணைக்கப்படுகிறார்கள்.

## 4.2 தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY)

தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU – GKY) கிராமப்புற ஏழை இளைஞர்களின் உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்கு ஒன்றிய மற்றும் மாநில அரசு, 60:40 என்ற நிதி பகிர்வு முறையை கொண்ட வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி திட்டமாகும். இத்திட்டமானது, கிராமப்புற வேலையற்ற இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து

NSQF சான்றிதழுடன் கூடிய குறைந்தபட்சம் 70% பணியமர்வு அளிக்கப்படுவதை உறுதி செய்கிறது.

## 4.3 தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)

நகர்ப்புர ஏழைகளைக் கொண்டு வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி திறன் பயிற்சி வழங்குதல், நுகர்வு மற்றும் தொழில் நிறுவனம் அமைக்க வட்டி மானியத்துடன் கூடிய கடன் இணைப்பு பெற வழிவகை செய்வதின் மூலமாக அவர்களின் வறுமை மற்றும் நலிவு நிலையை குறைப்பதே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

# 5. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

## 5.1 சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்பு

சமூக ஒருங்கிணைப்பானது தகுதியுள்ள மகளிர்களை கண்டறிந்து சுய உதவிக் குழுக்களில் இணைக்கப்படுவதையும், அவர்கள் நிதி கட்டுப்பாடு மற்றும் ஜனநாயக ரீதியாக முடிவு எடுப்பதன் மூலம் ஏழைகளுக்கான நிறுவனமாக மேம்படுத்துவதை உறுதிசெய்கிறது. இக்குழுக்களால் முறையான கூட்டங்களை நடத்துதல், முறையான சேமிப்பு, உள்கடன் வழங்குதல், முறையான உள்கடன் திருப்பம் மற்றும் முறையாக கணக்கு பதிவேடுகளை பராமரித்தல் ஆகிய 5 முக்கிய கோட்டுபாடுகள் கடைபிடிக்கப்படுகிறது.

### 5.1.1 சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்ட 12 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக்

குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குறைந்த பட்சம் 5 மற்றும்  அதிகபட்சம் 8 மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களை உறுப்பினர்களாக கொண்டு அமைக்கப்பட்ட குழுக்கள் சிறப்பு சுய உதவிக் குழுக்கள் ஆகும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு தரவுகளை பயன்படுத்தி நலிந்த குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களை சுய உதவிக் குழுக்களில் இணைக்கிறது.

### 5.1.2 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்குவதில் தன்னிறைவு

தமிழ்நாட்டில் 2005 முதல் 2014–ஆம் ஆண்டு வரை நலிவுற்ற குடும்பங்கள் மக்கள் நிலை ஆய்வு (PIP) மூலம் பல்வேறு கட்டங்களில் அடையாளம் காணப்பட்டு கோவிட்–19 தொற்றுநோயினை தொடர்ந்து 2022ம் ஆண்டு

மக்கள் நிலை ஆய்வு பட்டியல் புதுப்பிக்கப்பட்டது. தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம், இறப்பு மற்றும் இடம்பெயர்வு அடிப்படையில் மக்கள் நிலை ஆய்வு பட்டியலை புதுப்பித்து, அப்பட்டியல் அக்டோபர் 2022 அன்று கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறப்பட்டது. இதன்மூலம் ஊரகப் பகுதிகளில் இதுநாள் வரை 37.76 இலட்சம் தகுதியான நலிவுற்ற குடும்பங்கள் சுய உதவிக் குழுக்களில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர்.

### 5.1.3 சமுதாயம் சார்ந்த அமைப்புகள்

#### 5.1.3.1 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (PLF)

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு குறைந்தபட்சம் 20 சுய உதவிக் குழுக்கள் அதிகபட்சமாக ஊராட்சியில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களையும் உள்ளடக்கியது. இது தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975–இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் உள்ள

அனைத்து சுய உதவிக் குழுக்களையும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

சுய உதவிக் குழுக்களின் நிலைத்த தன்மையை கருத்தில் கொண்டு, அரசு கிராம ஊராட்சி அளவில் நிதி மற்றும் நிதி சாரா சேவைகளை மேற்கொள்வதற்காக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பை ஒரு நிறுவன கட்டமைப்பாக வலுப்படுத்துவதற்கு 2008ம் ஆண்டு அரசாணை வெளியிட்டது. பல்வேறு நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு வட்டார அளவில் ஒரு உயர் மட்ட அமைப்பை கொண்டிருக்கும். ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு திறன் வளர்ப்பு பயிற்சிகள் மற்றும் பல்வேறு திட்டங்களை கையாளுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சுய உதவிக்

குழுக்கள் உருவாக்கம் மற்றும் வலுப்படுத்துதல், கடன் இணைப்பு மற்றும் கண்காணிப்பு, வாழ்வாதார மேம்பாடு மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் போன்ற நான்கு துணைக் குழுக்களை கொண்டுள்ளது. சமுதாய உறுப்பினர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு இத்துணைக் குழுக்கள் உதவுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளை கண்காணிக்க பொது குழுவால் அமைக்கப்பட்ட சமூக தணிக்கை குழுவும் உள்ளது.

### 5.1.3.2 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்

- கிராமத்தில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களும் கூட்டமைப்பில் இணைவதை உறுதி செய்தல்.
- சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்துதல் மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துதல்.

- அரசின் பல்வேறு திட்டங்களின் தகவல்களைப் பரிமாறுதல்.
- அனைத்து சுய உதவிக் குழுக்களும் நுண் கடன் திட்டம் தயாரிப்பதை உறுதி செய்தல்.
- சுய உதவிக் குழுக்களின் புத்தக பதிவேடுகள் பராமரித்தலை கண்காணித்தல்.
- ஜனநாயக முறைப்படி பிரதிநிதிகளை தேர்வுசெய்தல்.
- சுய உதவிக் குழுக்களின் திறனை வளர்த்து கொள்ள உதவுதல்.
- சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் சுழல் நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதிகளின் பயன்பாட்டினை கண்காணித்தல்.
- முறையான உள் மற்றும் வெளிக் கடன் திரும்ப செலுத்துவதை உறுதி செய்தல்.
- சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான நிதி சார்ந்த இணைப்பு நிறுவனமாக செயல்படுதல்.

### 5.1.3.3 வட்டார அளவிலான கூட்டமைப்பு (BLF)

வட்டார அளவிலான கூட்டமைப்புகள் ஒவ்வொரு வட்டாரங்களிலுள்ள அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளை கொண்டு உருவாக்கப்படுகிறது. தமிழகத்தில் உள்ள 388 வட்டாரங்களிலும் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வட்டார அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள் :**

1. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல்.
2. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் திறனை வளர்த்து வங்கிக் கடன் பெற வழிவகுத்தல்.

3. முறையான கடன் திருப்பத்தை உறுதி செய்தல்.
4. சமுதாய அமைப்புகளுக்கு சாத்தியமான மற்றும் நிலையான வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளை அடையாளம் காணுதல்.
5. சமூக உள்ளாக்கம், பாலினம், உரிமைகள் மற்றும் உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் (FNHW) உள்ளிட்ட சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை உறுதி செய்தல்.
6. அனைத்து திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் நடத்துவதற்கான வட்டார அளவிலான பயிற்சி மையமாக செயல்படுதல்.

### 5.1.4 மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு

மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பின் நோக்கமானது உறுப்பினர்களுக்கு சொந்தமான, உறுப்பினர் நிர்வகிக்கும் மற்றும் உறுப்பினர்

கட்டுப்பாட்டில் உள்ள நிலையான நிதிதன்மையுடைய சுய உதவிக் குழுக்கள் மற்றும் அவற்றின் கூட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் மூலம் கிராமப்புற வறுமையை ஒழிப்பதே ஆகும்.

### 5.1.4.1 நோக்கங்கள்

- நிலையான நிதிதன்மையுடைய கூட்டமைப்புகளை ஊக்குவித்தல்.
- சுய உதவிக் குழு கூட்டமைப்புகளை செயல்விளக்க தளங்களாக உருவாக்குதல்.
- பயிற்சி மையமாக திகழ்ந்து மற்ற வட்டார கூட்டமைப்புகளுக்கு ஒரு முன் மாதிரியாக செயல்படுதல்.
- சமூக மூலதனத்தை மேம்படுத்துதல்.
- சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் பயிற்சி தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வள மையமாக திகழுதல்.

## 5.1.4.2 தொலை நோக்கு பார்வையை உருவாக்குதல் பயிற்சி (VBE)

வட்டார மாதிரி அளவிலான கூட்டமைப்பினை சுய சார்புடைய நிறுவனமாக உருவாக்குவதற்கு, முக்கோண பரிமாணங்கள் அடங்கிய தொலை நோக்கு பார்வை, ஆண்டு செயல் திட்டம், தொழில் வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்கு பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

தொலைநோக்கு பார்வை என்பது சுய உதவிக் குழு உறுப்பினர்களின் கனவுகள், குடும்பம் மற்றும் கிராம ரீதியான தேவைகள் என பல கோணங்களை உள்ளடக்கியது. ஆண்டு செயல் திட்டம் என்பது குறிப்பிட்ட கால அளவுகளை கொண்டு சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தொலைநோக்கு பார்வை திட்டத்தை அடைவதற்கு தயாரிக்கப்படுகிறது. மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பை சுய

சார்பு அடைய செய்ய தொழில் வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

### 5.1.4.3 மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பின் எதிர்பார்க்கப்படும் செயல்பாடுகள்

- மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு நிலையான அமைப்பாக நிருபித்தல்.
- இவை தகுதியான நலிந்தோரை சுய உதவிக் குழுக்களில் இணைத்து அவர்களுக்கான பயன்கள் மற்றும் சேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்குதல்.
- மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு சட்டபூர்வ அடையாளம் கொண்டு சட்ட ரீதியான தேவைகளை நிறைவேற்றுதல்,
- மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு உயரிய சமூக மூலதனத்தை உருவாக்குதல்.

- மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு திறன்பட செயல்பட அனைத்து திட்ட பணியாளர்களுக்கும் பயிற்சிகள் வழங்குதல்.

### 5.1.5 சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நிதி உதவிகள்

#### 5.1.5.1 சுழல் நிதி

குழு ஆரம்பிக்கப்பட்டு மூன்று மாதம் நிறைவடைந்து, பயிற்சி பெற்று, தரமதிப்பீட்டிலும் தேர்ச்சி பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக குழு ஒன்றுக்கு ரூ.15,000/- வீதம் வழங்கப்படுகிறது. இச்சுழல் நிதியானது அவர்களை ஊக்குவிப்பதற்கு ஒரு காரணியாகவும், அவர்களின் சேமிப்போடு மூலதன நிதியை உயர்த்தி அதிகமான உறுப்பினர்கள் உள்கடன் பெறுவதற்கும் வங்கிக் கடன் பெறுவதற்கும் வழிவகை செய்கிறது.

2024-25 ஆம் ஆண்டில், 10,000 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.15.00 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில ஊரக

வாழ்வாதார இயக்கம் தகுதியான சுய உதவிக் குழுக்களுக்கு 2025-26ம் ஆண்டிலும் சுழல் நிதியை தொடர்ந்து வழங்கும்.

### 5.1.5.2 சமுதாய முதலீட்டு நிதி (CIF)

சமுதாய முதலீட்டு நிதியானது (CIF) ஒரு வருடம் நிறைவடைந்த சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் கடனாக வழங்கப்படுகிறது. சமுதாய முதலீட்டு நிதியானது வாழ்வாதார செயல்பாடுகள் மேற்கொள்ளும் சுய உதவிக் குழுவிற்கு அவர்களின் முறையான கடன் திருப்பத்தை கருத்தில் கொண்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் வழங்கப்படுகிறது.

ஒரு சுய உதவிக் குழுவிற்கு அதிகபட்சமாக சமுதாய முதலீட்டு நிதி ரூ.1.50 இலட்சம் கடன் தொகையாக குறைந்த வட்டி (9%)

விகிதத்தில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் வழங்கப்படுகிறது. சுய உதவிக் குழு திரும்ப செலுத்தும் சமுதாய முதலீட்டு நிதியில் அவர்களின் தேவைக்கேற்ப ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் சுழற்சி முறையில் வழங்கப்படுகிறது. 2022-23-ஆம் ஆண்டு முதல் சமுதாய முதலீட்டு நிதி சுய உதவிக் குழுக்களுக்கு NRLM இணையதளத்தின் நிதி விடுவிப்பு முறை (FDM) மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

2024-25 ஆண்டில் மாண்புமிகு துணை முதலமைச்சர், சட்டமன்றத்தில் 7,000 சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும் என்ற அறிவிப்பை மிஞ்சும் அளவிற்கு 11,532 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.172.06 கோடி சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்பட்டுள்ளது. சமுதாய முதலீட்டு நிதி தகுதியான சுய உதவிக் குழுக்களுக்கு 2025-26ம் ஆண்டிலும் வழங்கப்படும்.

### 5.1.5.3 சமுதாய முதலீட்டு நிதி கண்காணிப்பு முறை

சமுதாய முதலீட்டு நிதிக்கான கடன் கண்காணிப்பு வரைவு பட்டியல் (DCB) சுய உதவிக் குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து பெறப்பட்டு மாவட்ட மற்றும் மாநில அளவில் கண்காணிக்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்கள் கடன் தொகையை நியாயமான முறையில் பயன்படுத்துவதை வழக்கமாக கொண்டு, கட்டுப்பாட்டுடன் திரும்ப செலுத்துவதை உறுதி செய்வதே இந்த கண்காணிப்பின் நோக்கமாகும். இதனால் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலதன நிதியும் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து, வலுவான கூட்டமைப்பாக உருவாக்காப்படுகிறது.

**5.1.5.4 நலிவு நிலை குறைப்பு நிதி (VRF)**

நலிவு நிலை குறைப்பு நிதி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாக **இலக்கு மக்களான மிகவும் ஏழை, ஏழை, மாற்றுத் திறனாளிகள் மற்றும் பழங்குடியினர் பிரதிநிதிகளை உள்ளடக்கிய 11 முதல் 19 உறுப்பினர்களைக் கொண்ட கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கு மூலதன நிதியாக வழங்கப்படுகிறது.**

நலிவு நிலை குறைப்பு நிதியானது (VRF), நலிந்தோர் மற்றும் மாற்றுதிறனாளிகளுக்கான உணவு, பாதுகாப்பு, மற்றும் எதிர்பாராத செலவினங்களான உடல் நலக்குறைவு, இயற்கை பேரிடர், எதிர்பாரா மருத்துவ செலவு போன்றவைகளுக்கு 6% வட்டி விகிதத்தில் கடன் தொகையாக அதிகபட்சமாக ரூ.25,000/– ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாக கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கு வழங்கப்படுகிறது.

2024–25 ஆம் ஆண்டில், நலிவு நிலை குறைப்பு நிதியாக ரூ.55.83 கோடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலமாக முதல்கட்டமாக 5,687 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களில் உள்ள நலிந்தோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நலிவு நிலை குறைப்பு நிதி நலிந்தோர்களுக்கு வரும் நிதியாண்டிலும் வழங்கப்படும்.

## 5.2 திறன் வளர்ப்பு

திறன் மேம்பாடு சமூக வளர்ச்சிக்கு முக்கியமானது. மேலும் சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான நிலையான முயற்சிகள் மூலம் அடையப்படுகிறது.

### 5.2.1 சமுதாய சார்ந்த அமைப்புகளுக்கு திறன் வளர்ப்பு

சமுதாயம் சார்ந்த அமைப்புக்கள் மற்றும் அனைத்து நிலையிலான திட்ட பணியாளர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி வழங்கப்படுகிறது. ஏழைகளின் அமைப்புக்களான சுய உதவிக் குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, வட்டார அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் மக்கள் கற்றல் மையம் (மகமை) ஆகியவற்றிற்கு திட்ட குறிக்கோளை அடைவதற்காக தேவையான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. சமுதாய சார்ந்த அமைப்புகளுக்கான பயிற்சிகளில் நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை முதன்மையான பயிற்சியாக வழங்கப்படுகிறது.

சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது:

- புதிதாக உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கான பயிற்சி.
- சுய உதவிக் குழுக்களின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகளுக்கு நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை குறித்த பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி.
- வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கான பயிற்சி.
- தர மதிப்பீட்டில் குறைந்த மதிப்பெண்கள் பெற்ற சமுதாய சார்ந்த அமைப்புகளை மேம்படுத்துவதற்கான பயிற்சி.

- அனைத்து சுய உதவிக் குழு மற்றும் அதன் உறுப்பினர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி.
- சுய உதவிக் குழுக்கள் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் கணக்காளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி.

**5.2.2 புத்தாக்க பயிற்சி**

தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் 2024–25 ஆம் ஆண்டில் அனைத்து சுய உதவிக் குழுக்களின் உள்ள உறுப்பினர்களுக்கு அனைத்து கூறுகளிலும் ஒரு நாள் புத்தாக்க பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 388 வட்டார வள பயிற்றுநர்களை கொண்டு 1,09,678 அணிகளுக்கு (BATCHES) 3,29,000 சுய உதவிக் குழுக்களில் உள்ள உறுப்பினர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மதிகளம்

இணையதளம் மூலம் இப்பயிற்சிகள் கண்காணிக்கப்பட்டது.

### 5.2.3 தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய பணியாளர்கள்:

சமூக மூலதனம் என்பது எந்தவொரு சமூக மேம்பாட்டுத் திட்டத்திற்கும் மிகப்பெரிய சொத்துக்களில் ஒன்றாக அமைந்துள்ளது. பல்வேறு வகையான திட்ட செயல்பாடுகளை மாநில, மாவட்ட, வட்டார மற்றும் கிராம அளவில் நடைமுறைபடுத்தவும் கண்காணிக்கவும் பல்வேறு கருப்பொருட்களில் வளப் பயிற்றுநர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்.

### 5.2.4 மக்கள் கற்றல் மையம் / சமுதாயத்தால் நிர்வகிக்கும் பயிற்சி மையம் (CMTC)

மக்கள் கற்றல் மையமானது (மகமை) ஏற்கனவே 26 மாவட்டங்களில் வாழ்ந்து காட்டுவோம் என்ற திட்டத்தால்

உருவாக்கப்பட்டது. இவை தமிழ்நாடு சங்கப்பதிவு சட்டம் 1975–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மக்கள் கற்றல் மையம் என்பது கிராமப்புறங்களிலுள்ள அனுபவம் வாய்ந்த சமுதாய வல்லுநர்களை கொண்டது. இவர்கள் ஏற்கனவே வறுமை குறைப்பு திட்ட செயல்பாடுகளை முறையாக செயல்படுத்திய அனுபவம் கொண்டவர்கள். தற்பொழுது, இம்மையமானது சமுதாயத்தால் நிர்வகிக்கும் பயிற்சி மையமாக (CMTC) உள்ளது. மேலும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கான அனைத்து வகையான திறன் வளர்ப்பு பயிற்சிகளையும் மேற்கொள்கிறது.

## 5.3 நிதி உள்ளாக்கம் மற்றும் வங்கிக் கடன் பெறுவதற்கான வழி முறை.

நிதி உள்ளாக்கம் என்பது கிராமப்புற ஏழைகளுக்கு குறைந்த செலவில் சரியான நிதிச் சேவைகள் கிடைப்பதை உறுதி செய்யும் செயல்பாடாகும். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

நிறுவனமானது, சுய உதவிக் குழுக்களில் உள்ள மகளிருக்கு, வங்கியில் சேமிப்பு கணக்கு துவங்குதல், வங்கிக் கடன் பெற வழிவகை செய்தல், காப்பீடு மற்றும் ஓய்வூதிய திட்டங்களில் இணைத்தல் போன்ற சேவைகள் கிடைக்க உதவுகிறது.

### 5.3.1 நிதிசார் கல்வி

நிதிசார் கல்வி என்பது செலவு, சேமிப்பு, முதலீடு, கடன், காப்பீடு, ஓய்வூதியம் மற்றும் பணம் அனுப்புதல் போன்ற நிதி சேவைகள் குறித்து சுய உதவிக் குழு உறுப்பினர்கள் முடிவெடுப்பதற்கு தேவையான அறிவு மற்றும் திறன்களை வழங்குகிறது.

நிதிசார் கல்வியானது கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் முன்னிலைப்படுத்தப்படுகிறது.

i) **நிதிசார் திட்டமிடல்**: வாழ்க்கை சுழற்சி நிகழ்வுகள், தேவைகள், விருப்பங்கள் போன்றவை.

ii) **சேமிப்பு**: எங்கு சேமிப்பது, எப்படி சேமிப்பது, தனிப்பட்ட வங்கி சேமிப்பு கணக்கை செயல்படுத்துதல், வங்கி சேமிப்பு கணக்கு மூலம் பண பரிவர்த்தனை மேற்கொள்ளுதல் போன்றவை.

iii) **கடன்:** வங்கிக் கடன் பெறுதல், அதன் பயன்பாடு, வாராக்கடன் பற்றிய விழிப்புணர்வு போன்றவை.

iv) **காப்பீட்டு கல்வியறிவைப் பரப்புதல்**: ஒன்றிய மற்றும் மாநில அரசின் பல்வேறு காப்பீடு திட்டங்களில் பதிவு செய்ய வசதிகளை ஏற்படுத்துதல்.

v) **ஓய்வூதியம்**: நீண்ட கால நிதி திட்டமிடலின் தேவை மற்றும் பல்வேறு ஓய்வூதிய திட்டங்கள் எளிதில் கிடைக்கச் செய்தல்.

vi) **மின்னணு நிதி சேவை**: பணமில்லா பரிவர்த்தனையை ஊக்குவித்தல் மற்றும் வங்கி வணிக தொடர்பாளர்கள் மூலம் இருப்பிடம் அருகாமையில் நிதி சேவைகளை பெறுதல்.

vii) **பெண்கள் தலைமையிலான நிறுவனங்களுக்கு நிதியளித்தல்:** சுய உதவிக் குழு உறுப்பினராக உள்ள மகளிர், வங்கி கடன் பெற்று தொழில் முனைவோராக உயர வழிவகை செய்தல்.

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நிதிசார் கல்வியறிவை வழங்குவதற்கும் பல்வேறு நிதி சேவைகள் குறித்த

கருத்துகளை விளக்குவதற்கும் 31.01.2025 வரை 2,758 நிதிசார் கல்வி சமுதாய வளப் பயிற்றுநர்களுக்கு (FLCRPs) பயிற்சி வழங்கப்பட்டு பிளிப் சார்ட்கள், பயிற்சியாளர்கள் கையேடு, அச்சிடப்பட்ட விளையாட்டு பொருட்கள் போன்றவற்றைக் கொண்ட தமிழிலான பயிற்சிக் கருவி பெட்டகம் (Kit) வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதிசார் கல்வி சமுதாய வளப் பயிற்றுநர்கள் (FLCRPs) 2024-25-ம் ஆண்டில் 11,425 நிதிசார் கல்வி முகாம்களை நடத்தி 5.55 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நிதி சார் கல்வி வழங்கியுள்ளனர்.

சுய உதவிக் குழு உறுப்பினர்களின் நிதி சார்ந்த செயல்பாடுகளில் மாற்றத்தை கொண்டுவர நிதிசார் கல்வி காரணமாக இருப்பதால், மீண்டும் நிதிசார் கல்வி பயிற்சி

2025–26 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து வழங்கப்படும்.

### 5.3.2 சுய உதவிக் குழு – வங்கிக் கடன் இணைப்பு திட்டம் (SHG – BLP)

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு (SHG – BLP) திட்டமானது சுய உதவிக் குழு மகளிரை வங்கி அமைப்புடன் இணைத்து, பெரிய அளவில் நிதி உள்ளாக்கத்தை ஊக்குவிக்கிறது. சுய உதவிக் குழு வங்கிக் கடன் இணைப்பு திட்டம் மூலம் கிராமப்புற ஏழை மக்களிடையே, நிதி உள்ளாக்கத்தை ஊக்குவிக்கும் பணியினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது மேற்கொண்டு வருகிறது. இது சுய உதவிக் குழுக்களும் அதன் உறுப்பினர்களும் குறைந்த வட்டி விகிதத்தில் எளிதாக கடன் பெறுவதை உறுதி செய்கிறது.

சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பு திட்டத்தின் கீழ், சுய உதவிக் குழுக்கள் கடன் பெறுவதற்கான தகுதிகள் பின்வருமாறு.

- சுய உதவிக் குழுக்கள், அவர்களின் கணக்குப் புத்தகங்களின்படி, குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கு செயல்பாட்டில் இருக்க வேண்டும் (சேமிப்பு கணக்கு துவங்கிய நாளிலிருந்து அல்ல)
- சுய உதவிக் குழுக்கள் "பஞ்சசூத்திரங்கள்" அதாவது தொடர்ச்சியாக கூட்டம் நடத்துதல், முறையான சேமிப்பு, தொடர் உள் கடன், உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்துதல் மற்றும் கணக்கு புத்தகங்களை முறையாக பராமரித்தல் ஆகியவற்றை கடைபிடிக்க வேண்டும்.

- நபார்டு (NABARD) நிர்ணயித்த தர நிர்ணய விதிமுறைகளின்படி, சுய உதவிக் குழுக்கள் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

மேலும், தற்பொழுது செயல்பாட்டில் இல்லாத சுய உதவிக் குழுக்கள், மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு, குறைந்தபட்சம் மூன்று மாதங்கள் செயல்பாட்டில் இருந்தால் வங்கி கடன் இணைப்பு பெற தகுதி பெறும்.

சுய உதவிக் குழுக்கள் அவர்களின் தேவைகளின் அடிப்படையில், தவணை கடன் (Term Loan) அல்லது ரொக்கக் கடன் (Cash Credit limit) அல்லது இரண்டு வகை கடன்களையும் பெற்றுக்கொள்ளலாம். தவணை கடனானது குறிப்பிட்ட தவணைகளில் செலுத்தப்பட வேண்டும். ரொக்கக் கடனானது, குறைந்தபட்சம் ரூ.6.00 இலட்சம் என்ற அளவில் நிர்ணயம் செய்யப்பட்டு, வருடத்திற்கு ஒருமுறை

வரையறுக்கப்பட்ட அளவின்படி (Yearly Drawing Power) 3 ஆண்டுகள் வரை திரும்ப செலுத்த அனுமதிக்கப்படுகிறது.

முதிர்ச்சியடைந்த சுய உதவிக் குழுக்கள் வங்கிகளிடமிருந்து அதிக அளவு கடன் பெறுவதை ஊக்குவிப்பதற்காக, ரூ.10 இலட்சத்திற்கும் மேல் ரூ.20 இலட்சம் வரையிலான கடன் தேவைகளுக்கு, குறு தொழில்களுக்கான கடன் உத்தரவாத நிதி திட்டத்தின் (CGFMU) கீழ் கடன் வழங்கப்படுகிறது. முதல் ஆண்டில், சுய உதவிக் குழுக்கள் உத்தரவாத கட்டணமாக கடன் தொகைக்கு 0.25%–ம், அடுத்தடுத்த ஆண்டுகளில் நிலுவைத் தொகைக்கு 0.50%–ம் செலுத்த வேண்டும். கடன் வாராக்கடனாக மாறினால், வங்கிகள் கடன் தொகையில் 75% வரை கடன் உத்தரவாத நிதி திட்டத்தின் (CGFMU) கீழ் இழப்பீடு பெற முடியும்.

இதனால் வங்கிகள் குறைந்த அபாயத்துடன் கடன் கொடுக்க ஊக்குவிக்கப்படுகின்றன.

மேலும், சுய உதவிக் குழு உறுப்பினர்களின் நிதி தேவைகளை பூர்த்தி செய்யும் நிதி இடையீட்டாளராக (financial intermediaries) ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் செயல்படும் பொருட்டு வங்கிகளிலிருந்து பெருங்கடன் வழங்கப்படுகிறது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சுய உதவிக் குழுக்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்குவதன் மூலம் அதிக வட்டியில் கடன் வழங்கும் தனி நபர்களின் பிடியிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பின் கீழ் 2021–22 ஆம் ஆண்டு ரூ.21,392.52 கோடியும் 2022–23–ம் ஆண்டு ரூ.25,642.01 கோடியும் 2023–24–ம் ஆண்டு

ரூ.30,074.76 கோடியும் கடன் வழங்கப்பட்டு அந்தந்த வருடங்களின் இலக்கை விட அதிகமாக சாதனை எய்தப்பட்டுள்ளது.

2024–25 ஆம் ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பின் கீழ் ரூ.35,000 கோடி இலக்கீட்டிற்கு எதிராக 4,71,974 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.34,200.12 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. ஒரு சுய உதவிக் குழுவிற்கான சராசரி கடன் அளவு ரூ.7.22 இலட்சம் ஆகும்.

2025–26–ஆம் ஆண்டிலும் தகுதியான அனைத்து சுய உதவிக் குழுக்களும் கடன் இணைப்பு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 5.3.2.1 சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம்

2022–23–ஆம் ஆண்டு முதல் சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம் திட்டமானது

அனைத்து மாவட்டங்களிலும் ஒரே மாதிரியாக செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மட்டுமே கீழ்க்கண்டவாறு வட்டி மானியம் திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

- ரூ.3.00 இலட்சம் வரையிலான கடன்களுக்கு மண்டல கிராமப்புற வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகள் உட்பட அனைத்து வங்கிகளும் ஆண்டுக்கு 7% வட்டி விகிதத்தில் கடன் வழங்கும்.
- ரூ.3.00 இலட்சம் முதல் ரூ.5.00 இலட்சம் வரையிலான கடன்களுக்கு மண்டல கிராமப்புற வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் உட்பட அனைத்து வங்கிகளும் ஆண்டுக்கு 10% வட்டி விகிதத்தில் அல்லது வங்கியின் ஒரு வருட கடன் விளிம்பு தொகை (MCLR) இதில் எது

குறைவோ அந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டி மானியத்தைப் பெறுவதற்காக, சுய உதவிக் குழுக்களின் வங்கி கணக்குகள் (சேமிப்பு மற்றும் கடன் இரண்டும்) ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தனிப்பட்ட குறியீடுகளுடன் வங்கி உள்ளக அமைப்பில் (Core Banking System) அடையாளப்படுத்தப்படுவது வங்கி அளவில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

### 5.3.3 காப்பீடு மற்றும் ஓய்வூதிய திட்டங்கள்

சுய உதவிக் குழு உறுப்பினர்களை, ஆயுள், விபத்து மற்றும் மருத்துவக் காப்பீட்டில் இணைப்பதன் மூலம் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பங்களை பல்வேறு

பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பது அரசின் முக்கியமான கொள்கையாகும்.

தகுதியுள்ள அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களையும் பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY), பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY), பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (PMJAY) மற்றும் அடல் ஓய்வூதியத் திட்டம் (APY) போன்ற ஆயுள், விபத்து, மருத்துவ காப்பீடு மற்றும் ஓய்வூதிய திட்டங்களில் இணைப்பதன் மூலம் எதிர்பாராத நிகழ்வுகளிலிருந்து அவர்களை பாதுகாக்கும் பொருட்டு அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சுவரோவியங்கள் போன்ற பரவலான விளம்பர செயல்பாடுகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தகுதியுள்ள அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களையும் இத்திட்டங்களில்

இணைக்கும் பணியில், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களாக பயிற்சி பெற்ற சுய உதவிக் குழு உறுப்பினர்கள் திறம்பட ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

2024-25-ம் ஆண்டில், 23.17 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆயுள் காப்பீட்டிலும், 33.40 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் விபத்துக் காப்பீட்டிலும், 2.47 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மருத்துவக் காப்பீட்டிலும் மற்றும் 1.81 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஓய்வூதிய (APY) திட்டத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

2024-25-ஆம் ஆண்டில் விபத்து காப்பீட்டின் கீழ் 37 கோரிக்கைகளுக்கும், ஆயுள் காப்பீட்டின் கீழ் 169 கோரிக்கைகளுக்கும் இழப்பீட்டுத் தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளதுடன், இறந்த சுய உதவிக் குழு

உறுப்பினரின் வாரிசுதாரருக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்படுவதால் அவர்கள் குடும்பங்களின் நிதி பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

2025–26 ஆம் ஆண்டில், காப்பீட்டில் இணைத்தல் மற்றும் கோரிக்கைகளுக்கு இழப்பீட்டுத் தொகை பெற்று வழங்குவதிலும் அதிக கவனம் செலுத்தப்படும்.

### 5.3.4 ஒரு கிராம ஊராட்சி ஒரு வணிக தொடர்பாளர் தோழி இயக்கம்:

ஒரு கிராம ஊராட்சி ஒரு வணிக தொடர்பாளர் தோழி இயக்கம் என்பது ஊரக பகுதிகளில் அடிப்படை வங்கி சேவைகளை வழங்குவதற்காக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை வணிக தொடர்பாளர்களாக (BC) ஈடுபடுத்துவதற்கான ஒரு திட்டமாகும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது தகுதியான சுய உதவிக் குழு உறுப்பினர்களை கண்டறிந்து, ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் (RSETI) அவர்களுக்கு பயிற்சி வழங்கி, மும்பையில் உள்ள இந்திய வங்கி மற்றும் நிதி நிறுவனத்திடம் (IIBF) இருந்து சான்றிதழ் பெற்று, வணிக தொடர்பாளர்களாக (BC), வங்கிகளின் பெருநிறுவன வணிக தொடர்பாளர்களால் (Corporate BC) பணியமர்த்தப்படுவதை எளிதாக்குகிறது.

2024–25–ஆம் ஆண்டில், 640 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயிற்சியளிக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு வங்கிகளில், வணிக தொடர்பாளர் தோழிகளாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

2025–26 ஆம் ஆண்டில், 500 சுய உதவிக் குழு உறுப்பினர்களை பல்வேறு வங்கிகளில் வணிக தொடர்பாளர் தோழிகளாக பணியமர்த்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 5.3.5 பெண்கள் தலைமையிலான நிறுவனங்களுக்கு நிதியளித்தல்:

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பின் மூலம் கிடைக்கப்பெறும் நிதி சேவையானது, ஏழை மகளிர் தங்கள் திறனை ஆராய்ந்து பயன்படுத்த மிகப்பெரிய வாய்ப்புகளை வழங்கியுள்ளது. பல சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வெற்றிகரமான தொழில் நிறுவனங்கள் (enterprises) மற்றும் வணிகங்களின் அனுபவம், மற்ற உறுப்பினர்களுக்கு வணிக நடவடிக்கைகளைத் தொடங்கவும் விரிவுபடுத்தவும் நம்பிக்கையை அளித்துள்ளது. ஆனால், கடன் குறைவாக கிடைத்தால், அவர்களால் தொழிலை விரிவுபடுத்தவோ,

தொழிலில் முன்னேறவோ முடிவதில்லை. எனவே, சுய உதவிக் குழுக்களில் உள்ள பெண் தொழில்முனைவோர், குறைந்தபட்ச கடன் செயலாக்க நடைமுறையுடன், குறைந்த வட்டி விகிதத்தில் வங்கிகளிடமிருந்து அதிக அளவு கடன் பெறுவதற்கு உரிய முன்முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

**5.3.5.1 தகுதிகள்:**

கீழ்க்கண்டவற்றை பூர்த்தி செய்யும் சுய உதவிக் குழுக்களிடமிருந்து கடன் விண்ணப்பங்கள் பெறப்படும்.

- சுய உதவிக் குழு ஆரம்பித்து குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் செயல்பாட்டில் இருக்க வேண்டும்.
- ஒரு முறையாவது வங்கி கடன் பெற்று திருப்பி செலுத்தி இருக்க வேண்டும்.

### 5.3.5.2 தகுதியான தொழில் நிறுவனங்கள்:

பின்வரும் தொழில்கள் இதன் கீழ் தகுதியுடையவை:

- வாழ்வாதார விவசாய நடவடிக்கைகள் தவிர அனைத்து விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள்
- வேளாண் சார்ந்த மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில் (ABFPI)
- கனிமம் சார்ந்த தொழில் (MBI)
- ஆரோக்கியம் மற்றும் அழகுசாதன பொருட்கள் தொழில் (WCI)
- கையால் செய்யப்பட்ட காகிதம், தோல் மற்றும் பிளாஸ்டிக் தொழில் (HMPLPI)
- ஊரக பொறியியல் மற்றும் புதிய தொழில்நுட்பத் தொழில் (RENTI)
- சேவைத்துறை.

**5.3.5.3 பெண்கள் தலைமையிலான நிறுவனங்களுக்கு நிதியளிக்கும் திட்டத்தின் பயன்கள்:**

**(i) கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாத கட்டணங்களை திருப்பி செலுத்துதல்**

தீன்தயாள் அந்தியோதயா யோஜனா – மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் (DAY – NRLM) கீழ் செயல்படும் சுய உதவிக் குழுவில் உள்ள உறுப்பினர்கள், இத்திட்டத்தின் கீழ் ரூ.5.00 இலட்சம் வரை பெறும் கடனுக்குரிய கடன் உத்தரவாத கட்டணத்தை, அதிகபட்சமாக 5 ஆண்டுகள் வரை, மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது வங்கிகள் / கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு திரும்ப செலுத்தும்.

**(ii) முறையாக திரும்ப செலுத்தும் கடனுக்கு வட்டி மானியம்**

முறையாக கடனை திரும்ப செலுத்தும் சுய உதவிக் குழுக்களுக்கு நிலுவையில் உள்ள கடன் தொகையில் ரூ.1.50 இலட்சம் வரை 2% வட்டி மானியம் வழங்கப்படும். தனிப்பட்ட பெண் தொழில் முனைவோருக்கு அதிகபட்சமாக மூன்று ஆண்டுகள் வரை வட்டி மானியம் வழங்கப்படும் மேற்காணும் அனைத்து பலன்களும் ஒரு தனிநபருக்கு ஒரு முறை மட்டுமே வழங்கப்படும்.

2024–25–ஆம் ஆண்டில், 34,839 பெண் தொழில்முனைவோருக்கு வங்கிகளிடமிருந்து ரூ.392.15 கோடி கடன் உதவி பெற வழிவகை செய்யப்பட்டது.

2025–26–ஆம் ஆண்டில் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தொழில் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக தொழில் கடன்கள் வழங்கப்படும்.

## 5.4 கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் சமூக உள்ளீடுகள்

சமூக உள்ளாக்கம் மற்றும் சமூக மேம்பாட்டின் (SISD) கீழ், எந்த ஒரு ஏழைக் குடும்பமும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, முன்னுரிமை அளித்து மிகவும் ஏழைகள், ஏழைகள் மற்றும் சமூகத்தின் பிற நலிவுற்ற பிரிவினரை சிறப்பு சுய உதவிக் குழுக்களாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்துடன் இணைக்க சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. பிற அரசுத் துறை மற்றும் அதன் திட்டங்களுடன் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஒருங்கிணைப்பு முயற்சிகள் செய்து நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs), உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து நிலையான வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாக்குதல்(LSDGs) மூலம் மகளிர், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் நேய

ஊராட்சிகளாக அமைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 5.4.1 சமூக உள்ளாக்கம் மற்றும் சமூக மேம்பாடு

இத்திட்டத்தின் கீழ் விடுபட்ட, நலிவுற்ற மற்றும் பின்தங்கிய குடும்பங்களை முறையான அணுகுமுறை மூலம் அடையாளம் கண்டு சிறப்பு குழுவாக ஒருங்கிணைக்கப்படுகிறது. இந்த சிறப்பு சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, தொடர் சேமிப்பு, தொடர் கூட்டங்களை நடத்தவும், அவர்களின் ஈடுபாட்டின் அடிப்படையில் வாழ்வாதார நடவடிக்கைகளை தொடங்கி செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள பழங்குடியினர் குழுக்கள் (PVTGs), பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST), திருநங்கைகள் ஆகியோரை

ஒரு சிறப்பு குழுவிற்கு 5 முதல் 8 உறுப்பினர்களைக் கொண்டு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கத்தின் கீழ் உருவாக்கப்படுகிறார்கள். சிறப்பு சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் ஓராண்டு முடிவடைந்த முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி சுய உதவிக் குழுக்களின் பொருளாதார செயல்பாடுகள் மேம்பாட்டிற்காக குழுவிற்கு ரூ. 1.00 இலட்சம் வீதம் வழங்கப்படுகிறது.

### 5.4.1.1 தேவை கண்டறியும் முகாம்

முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளின் சிறப்புத் தேவைகளைக் கண்டறிவதற்காக, ஆண்டுக்கு இரண்டு முறை, வட்டார அளவில் பிற துறைகளுடன் இணைந்து, தேவை கண்டறியும் முகாம்கள் நடத்தப்பட்டு, பல்வேறு அரசுத் திட்டங்களின் திட்டப் பயன்கள் மற்றும் தேவைகளை, விளிம்புநிலை மற்றும் நலிவுற்ற குடும்பங்களுக்கு கிடைக்கச் செய்திட

சிறப்பு மதிப்பீட்டு முகாம்கள் நடத்தப்படுகின்றது. சமூக உள்ளடக்கம் மற்றும் சமூக மேம்பாட்டுக் கூறுகளின் கீழ் ஒரு வட்டாரத்திற்கு ஆண்டிற்கு இரண்டு முகாம்கள் வீதம் 388 வட்டாரங்களிலும் 37 மாவட்டங்களிலும் தேவை கண்டறியும் முகாம்கள் 2024–2025 நிதி ஆண்டில் ரூ. 38.80 இலட்சம் ஒதுக்கீட்டில் நடத்தப்பட்டுள்ளது.

மேலும் 2025–26ம் நிதி ஆண்டிலும் தேவை கண்டறியும் முகாம்கள் அனைத்து வட்டாரங்களில் நடத்தப்படும்.

### 5.4.1.2 மனநலத் திட்டம்

2024–25 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 200 வட்டாரங்களைச் சேர்ந்த 6,083 கிராம ஊராட்சிகளில் மனநலத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. பயிற்சி, திறன் மேம்பாடு, உளவியல் பிரச்சினைகள் உள்ள நபர்களைக் கண்டறிதல் மற்றும் ஆலோசனை

வழங்குதல், பரிந்துரைத்தல் மற்றும் தொடர் கண்காணிப்பு ஆகியவை சுகாதாரத் துறை மற்றும் மருத்துவம் மற்றும் பொது சுகாதாரப் பிரிவு (DMPH) உடன் இணைந்து மாவட்ட அளவில் செயல்படுத்தப்படுகிறது.

மாநில வள பயிற்றுநர், மாவட்ட வள பயிற்றுநர், வட்டார வள பயிற்றுநர் மற்றும் சமுதாய வளப் பயிற்றுநர்களுக்கு மருத்துவ நிபுணர்கள், கீழ்ப்பாக்கம் மனநல நிறுவனம் மற்றும் SCARF–சென்னை நிறுவனத்தின் மனநல மருத்துவர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 200 வட்டாரங்களில் 3.31 இலட்சம் சுய உதவிக் குழுக்களின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு மனநலப் பிரச்சினைகள், மனச்சோர்வு, பதட்டம், பிற பதட்டக் கோளாறுகள், வெறித்தன பாதிப்பு கோளாறு (OCD), நரம்பியல் பாதிப்புகள் மற்றும் கால்–கை வலிப்பு போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பயிற்சி

கையேடுகள் தயாரிக்கப்பட்டு, களப்பணியாளர்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் திறன் வளர்ப்பை மேம்படுத்தும் வகையில் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2025–2026 ஆம் ஆண்டில், மேலும் அதிகமான வட்டாரங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களின் ஊக்குநர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இதில் போதைப்பொருள் மற்றும் மதுப்பழக்கம் குறித்த தீவிர விழிப்புணர்வு மற்றும் பிரச்சாரமும் அடங்கும்.

### 5.4.1.3 J–Pal ஆய்வுகள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் 2023–24 ஆம் ஆண்டில் J–Pal ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து, திருச்சி

மாவட்டத்தின் 2 வட்டாரங்களில் சமூக உள்ளாக்கம் மற்றும் சமூக மேம்பாடு (SISD) மூலம் உருவாக்கப்பட்ட முதியோர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான அறிவுசார் நடத்தை சிகிச்சை (CBT) குறித்து ஒரு முன்னோடி ஆய்வை நடத்தியது. அதன் வெற்றியை தொடர்ந்து, 2024–25 ஆம் ஆண்டில் தர்மபுரி, திருச்சி மற்றும் திருவண்ணாமலை ஆகிய 3 மாவட்டங்களில் உள்ள 7 வட்டாரங்களின் 239 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகள் காரணமாக, வயதான பெண்கள் தங்கள் மன நலனுக்காகவும், உடல் நலனுக்காகவும் சிரிப்பு சிகிச்சை மற்றும் எளிமையான உடல் பயிற்சி பின்பற்றிட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 5.4.2 உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் (FNHW)

கடந்த 3 ஆண்டுகளாக, மகளிர் குழு மற்றும் கூட்டமைப்புகள் மூலம் அடிமட்டத்தில் ஒரு உறுதியான கட்டமைப்பு உருவாக்கப்பட்டு, ஊரகப் பகுதிகளில் அடையாளம் காணப்பட்ட பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தவும், பல்வேறு ஊட்டச்சத்து உணவுகளை உட்கொள்வதற்கான நடத்தை மாற்றங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்களிடையே உருவாக்கவும் தொடர்ந்து பணியாற்றி இரத்த சோகை / ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத தமிழகத்தை உருவாக்கிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், 16 வகையான பயிற்சித் தொகுப்புகள் அடங்கிய உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதார (FNHW) வழிகாட்டிக் கையேடு

உருவாக்கப்பட்டு, சமுதாயம் சார்ந்த அமைப்புகளிலுள்ள செயல்பாட்டாளர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சிக்காக கள அளவிலான களப்பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 5.4.2.1 சுய உதவிக் குழு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு விழிப்புணர்வு பயிற்சி

2024-25 நிதி ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 188 வட்டாரங்களில் 3.31 இலட்சம் சுய உதவிக் குழுவின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் அளிக்க ரூ.2.32 கோடி நிதி ஒதுக்கீட்டில் உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2025-26ம் நிதி ஆண்டில் கூடுதலான வட்டாரங்களில் சுய உதவிக்

குழுவின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கும் விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்படும்.

### 5.4.2.2 உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதார விழிப்புணர்வு பேரணி.

சத்தான உணவுகளை உட்கொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும், மக்களிடையே இரத்த சோகையைக் குறைக்கவும், 2024-25 ஆம் ஆண்டில் ஊராட்சி / வட்டாரம் /மாவட்ட அளவில் கிராமப்புற பெண்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கு ரூ.1.75 கோடி செலவில் உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் (FNHW) விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டுள்ளது.

மேலும் 2025-2026 ஆம் ஆண்டில் உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் விழிப்புணர்வு பிரச்சாரம் தொடர்ந்து நடத்தப்படும்.

### 5.4.2.3 மாதவிடாய் சுகாதார மேலாண்மை

மாதவிடாய் சுகாதார மேலாண்மை மற்றும் கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோய் தொடர்பான பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும் மாநிலம் முழுவதும் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சுய உதவிக் குழு பெண்கள் மத்தியில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை சார்ந்த விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பள்ளிகள், கல்லூரிகள், வட்டார அளவிலான கூட்டமைப்பு, மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அளவில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை மன்றம் மற்றும் அறிவு சார் மையங்கள் அமைக்கப்பட்டு தொடர்ச்சியான விழிப்புணர்வை ஏற்படுத்திட கட்டுரை, கவிதை,

பேச்சு, ஓவியம் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

2024-25 ஆம் ஆண்டில், 13,280 பள்ளிகள், 2,080 கல்லூரிகளின் வளரிளம் பெண்களுக்கு மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு 19,160 பயிற்சி அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

மேலும் 2025-26 ஆம் ஆண்டில் மீதமுள்ள பள்ளிகள், கல்லூரிகளில் பயிலும் மாணவிகளுக்கு மாதவிடாய் சுகாதார மேலாண்மை சார்ந்த விழிப்புணர்வு பயிற்சி நடத்தப்படும்.

## 5.4.2.4 உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்

### 5.4.2.4.1 மக்களைத் தேடி மருத்துவம்

மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையால், சுய உதவிக் குழுக்களில் உள்ள பெண்களை மகளிர் சுகாதார தன்னார்வலர்களாக (Women Health Volunteers – WHV) ஈடுபடுத்தி தொற்றா நோய்கள் கண்டறிவதற்கான பரிசோதனைகள் நடத்தப்படுகிறது. கிராமப்புறங்களில் உள்ள சுகாதார துணை மையங்களுடன் (Health Sub Centres – HSC) 8,713 மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் நாள்பட்ட

நோயாளிகளின் வீட்டிற்கே சென்று தொற்றா நோய்(Non–Communicable Diseases – NCD)க்காக பரிசோதித்து அதற்கான ஆலோசனை மற்றும் மருந்துகளை வழங்குகிறார்கள்.

### 5.4.2.4.2 முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் (CMBFS)

முன்னோடித் திட்டமான ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கான முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் (CMBFS) அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் நிறுவனத்துடன் இணைந்து சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் செயல்படுத்தப்படுகிறது. கிராமப்புறம் மற்றும் நகர்ப்புரங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / பகுதி அளவிலான கூட்டமைப்பு மூலம் அதே பள்ளியில் பயிலும் மாணவர்களின் தாய்மார்களான சுய

உதவிக் குழுப் பெண்கள்(SHG) தேர்வுசெய்யப்பட்டு சமையற்கூட பொறுப்பாளர்களாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இத்திட்டம் கிராமப்புறபகுதி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் 32,375 பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு, பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவை சமைத்து வழங்குவதில் 50,895 சுய உதவிக் குழு பெண்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தினமும் காலை உணவு சமைத்த மற்றும் குழந்தைகளுக்குப் பரிமாறப்பட்ட விவரங்களை முதலமைச்சரின் காலை உணவுத்திட்ட கைப்பேசி செயலியில் (CMBFS Mobile APPல்) பதிவு செய்கிறார்கள். இத்திட்டம் சுய உதவிக்குழு பெண்களுக்கு வாழ்வாதாரமாக அமைந்துள்ளது.

2024–2025 நிதி ஆண்டில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்காக சுய உதவிக் குழு சமையற்கூட

பொறுப்பாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி ரூ.13.81 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் அளிக்கப்பட்டுள்ளது.

### 5.4.3 பாலின உள்ளீடுகள்

குழந்தை திருமணம், பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை, பாலியல் துன்புறுத்தல் போன்றவற்றை தடுக்க பாலினம் குறித்த பல்வேறு அணுகுமுறைகள் மாநிலத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு சுய உதவிக் குழுவிலும் பாலினம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு பிரதிநிதி நம்தோழி–ஆக (Gender Point Person) தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவர்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால், மேற்கொள்ளப்படும் பாலினம் தொடர்பான அனைத்து செயல்பாடுகள் மற்றும் விழிப்புணர்வை மேற்கொள்வார்கள். இத்திட்டத்தின் கீழ் 2023–24 மற்றும் 2024–

2025 ஆம் ஆண்டில் பாலினம் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக மாநிலம் முழுவதும் 37 மாவட்டங்களில் வட்டார அளவில் 158 பாலின வள மையங்கள் (வானவில் மையம்) நிறுவப்பட்டுள்ளன. மேலும் 16 பாடப் பிரிவுகளை கொண்ட பயிற்சி மற்றும் வழிகாட்டி கையேடுகள் முதன்மை பயிற்றுநர், களப்பணியாளர்கள், சுய உதவிக் குழு ஊக்குநர், பிரதிநிதிகள் மற்றும் நம்தோழி (GPP), ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு –சமூக நடவடிக்கைக் குழு (PLF–SAC), வட்டார அளவிலான பாலின மன்றங்கள் (BLGF), பாலின வள மையங்கள் (GRC) போன்ற பாலின நிறுவன அமைப்புகளுக்கும் பயிற்சி வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளன.

நம்தோழி (GPP), ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு –சமூக நடவடிக்கைக் குழு (PLF–SAC), வட்டார அளவிலான பாலின மன்றங்கள் (BLGF), பாலின வள மையங்கள் (GRC) போன்ற

பாலின நிறுவன அமைப்புகளின் பங்கேற்புடன் பாலினப் பிரச்சனைகள் குறித்த தீவிர பிரச்சாரம் மாநிலம் முழுவதும் கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. மேலும், நடப்பாண்டில், கூடுதல் வட்டாரங்களில் பாலின வள மையங்கள் அமைக்கப்படும்.

### 5.4.3.1 பாலின விழிப்புணர்வு – GBV–3.0

2024–25 ஆம் ஆண்டில், பாலின அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான பிரச்சாரம் 3.0 குழந்தை திருமணம், பாலியல் வன்கொடுமை, குடும்ப வன்முறை, மதுப்பழக்கம் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு, பெண் குழந்தை பிறப்பு விகிதத்தை உயர்த்துதல் ஆகிய ஐந்து கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது, இதில் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வட்டார அளவிலான

கூட்டமைப்புகள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு–சமூக செயல்பாட்டுக் குழுக்கள், நம் தோழியர், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் அதிக எண்ணிக்கையில் மாநிலம் முழுவதும் 388 வட்டாரங்களில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளில் பேரணிகள், மனித சங்கிலி, மெழுகுவர்த்தி நடைப்பயணம், போட்டிகள், விளையாட்டு போட்டிகள் போன்ற பல்வேறு நிகழ்வுகள் ரூ.4.37 கோடி செலவில் 2.69 இலட்சம் நிகழ்வுகள் நடத்தப்பட்டு, பாலின விழிப்புணர்வு வலை தளப் பதிவில் தேசிய அளவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது.

### 5.4.3.2 சட்ட விழிப்புணர்வு பயிற்சி

POSH, திருமணச் சட்டங்கள், இந்திய அரசியலமைப்பு, பாரதிய நியாய சன்ஹிதா (BNS), POCSO, குழந்தை திருமண தடைச் சட்டம்

போன்ற 23 வகையான சட்டங்கள் அடங்கிய பயிற்சி கையேடு தயாரிக்கப்பட்டு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்புச் சட்டங்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்திட மாவட்ட மற்றும் வட்டார அளவில் 35,000 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் ஊராட்சி அளவில் இதுவரை 12,525 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், சமுதாய வளப் பயிற்றுநர்கள், சுய உதவிக் குழு பயிற்றுநர்கள், ஊராட்சி / வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் செயற்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட 3.76 இலட்சம் நபர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

### 5.4.4 ஊராட்சி நிறுவனங்கள் (ம) சமுதாய சார்ந்த அமைப்புகள் ஒருங்கிணைப்பு

ஊராட்சி நிறுவனங்கள் (ம) சமுதாய சார்ந்த அமைப்புகள், நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை உள்ளூர்மயமாக்கல் குறியீடுகளை ஊராட்சி நிறுவனங்கள் (ம) சமுதாய சார்ந்த அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு செய்து, ஊராட்சி மற்றும் வட்டார அளவில் உள்ள பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் பயனாளிகளை தேர்வு செய்வதிலும், பல்வேறு அரசு திட்டங்களை செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஊராட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சி/வட்டார அளவிலான உறுப்பினர்களுக்கு கிராம செழுமை மீட்சித் திட்டம் தயார் செய்வதற்கான சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 5.4.4.1 கிராம செழுமை மீட்சித் திட்டம்

ஊராட்சி நிறுவனங்கள் (ம) சமுதாய சார்ந்த அமைப்புகளின் ஒருங்கிணைப்பு முயற்சிகளின் கீழ், அனைத்து சுய உதவிக் குழுக்களும் அவற்றின் கூட்டமைப்புகளும் கீழ்க்காணும் நான்கு கூறுகளின் கீழ் கிராம செழுமை மீட்சித் திட்டத்தை (VPRP) தயாரிக்கின்றன:

i) உரிமைச் சார்ந்த திட்டம்

ii) வாழ்வாதாரத் திட்டம்

iii) பொது சொத்துக்கள், சேவைகள் மற்றும் வள மேம்பாட்டு திட்டம்

iv) சமூக மேம்பாட்டுத் திட்டம்

கடந்த மூன்று ஆண்டுகளில் 12,524 கிராம ஊராட்சிகளில் இத்திட்டமானது தயார் செய்யப்பட்டு கிராம வளர்ச்சி திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஊராட்சி

அமைப்புகள் மற்றும் பிறத்துறைகளின் மூலம் சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

### 5.4.4.2 ஊராட்சி நிறுவனங்கள் (ம) சமுதாய சார்ந்த அமைப்பு ஒரே மாதிரியான அணுகுமுறைகள்

ஊராட்சி நிறுவனங்கள் (ம) சமுதாய சார்ந்த அமைப்பு முன்மாதிரி அணுகுமுறைகளுக்காக ஊராட்சி நிறுவனம் மற்றும் சமுதாய சார்ந்த அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு அணுகுமுறையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ஏழை மகளிரை திட்டமிடுதல், செயல்முறைகள் மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்தில் மிகவும் ஆர்வமாக பங்கேற்க உதவுகிறது. இத்திட்டம் 6 மாவட்டங்களில் (தருமபுரி, சேலம், தஞ்சாவூர், தேனி, திருநெல்வேலி, திருச்சி) 75 வட்டாரங்கள் மற்றும் 1,963 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. தேசிய அளவிலான ஒரே

மாதிரியான அணுகுமுறை, சமூகத்தின் தேவைகளைப் பெறுவதில் கட்டமைக்கப்பட்ட செயலாக்கத்தை எதிர்பார்க்கிறது மற்றும் 18 மாத காலத்திற்கு சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 2025–26ம் ஆண்டில் 10 மாவட்டங்களில் (அரியலூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கடலூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், திருவண்ணாமலை, திருவள்ளூர், தென்காசி மற்றும் விருதுநகர்) 111 வட்டாரங்களில் உள்ள 4,224 ஊராட்சிகளில் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது.

## 5.5 வாழ்வாதார மேம்பாடு

பண்ணை சார்ந்த, பண்ணை சாராத மற்றும் விற்பனைப் பணிகள் போன்ற பல்வேறு வாழ்வாதார உத்திகளை செயல்படுத்துவதின் மூலம் கிராமப்புற சுய உதவிக் குழு மகளிர்க்கு வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கத்தில்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்பட்டு வருகிறது. சுய உதவிக் குழு மகளிர்கள் உற்பத்தி செய்கின்ற பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத பணிகளில் தரமான விளைபொருட்களை உற்பத்தி செய்து, நுகர்வோர் சந்தையில் அத்தகைய விளைபொருட்கள் இலாபகரமான விலையினை ஈட்டும் வகையில், பல்வேறு நவீன சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டப் பணிகள் அனைத்தும் மகளிர் சுய உதவிக் குழு பெண்களின் வருமானத்தை கூட்டுவதோடு, அவர்களை தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும் வலுப்படுத்தும்.

## 5.5.1 பண்ணை வாழ்வாதார பணிகளும் அதற்கான உத்திகளும்

இயற்கைப் பண்ணையம், ஒருங்கிணைந்த பண்ணையம் போன்ற வேளாண் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவல்ல தொழில் நுட்பங்களை மேம்படுத்துவதற்காக, பயிர் சாகுபடி மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களை உள்ளடக்கி, பண்ணை எல்லைக்குட்பட்ட பணிகள், பண்ணை எல்லைக்கு அப்பாற்பட்ட பணிகள் என இருவகையான பண்ணை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விளைபொருட்களை ஒன்றுசேர்த்து, மதிப்புக்கூட்டி, ஒரே இடத்தில் ஒட்டுமொத்தமாக விற்பனை மேற்கொள்ளும் வகையில், அனைத்து வகையான பண்ணைப் பணிகளிலும் தொகுப்பு அணுகுமுறை பின்பற்றப்படுகிறது.

### 5.5.1.1 பண்ணை வாழ்வாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகள்

ஊரகப் பகுதிகளிலும், நகர்ப்புரங்களிலும் உள்ள சுய உதவிக் குழு மகளிர்களுக்கு கிடைக்கும் வருமான இடைவெளியினை குறைப்பதற்காக மாநிலம் முழுவதும் பண்ணை வாழ்வாதார உத்திகள் பிரபலப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்தின் பணி துவங்கிய நாள் முதல், சென்னை தவிர அனைத்து மாவட்டங்களிலும் 381 வட்டாரங்களில் பண்ணை வாழ்வாதார உத்திகளை பிரபலப்படுத்தும் வகையில் பல்வேறு சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள 388 வட்டாரங்களில், நான்கு மாவட்டங்களில் ஏழு நகரமயமான வட்டாரங்கள் தவிர 381 வட்டாரங்களில் 2024-25 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 5.5.1.2 பண்ணை உத்திகள்

வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, சர்க்கரைத் துறை, வனத் துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை, மீன் வளத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தின் பணிகளை அனைத்து நிலைகளிலும் ஒருங்கிணைத்து, பல்வேறு பண்ணை சார் உத்திகள் 2024-25 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டன.

ஒவ்வொரு பண்ணை சார்ந்த உத்திகளிலும், நவீன முறைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் பற்றி பயிற்சி தருவதோடு, இத்தகைய நவீன தொழில்நுட்பங்களை சுய உதவிக் குழு மகளிர்கள் தொகுப்பு அணுகுமுறையில் பின்பற்றும் வகையில், சுழல் நிதியும் தந்து ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### 5.5.1.2.1 தரமான நெட்டை தென்னை இரகக்கன்றுகள் உற்பத்தி

தமிழ்நாட்டில் தென்னை ஒரு முக்கிய வணிகப்பயிராகும் என்பதால், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் தென்னங்கன்றுகள் உற்பத்தி மேற்கொள்வதின் மூலம் தென்னை சாகுபடி பிரபலப்படுத்தப்படுகிறது. கடந்த 2023–24 ஆம் ஆண்டில் 241 வட்டாரங்களில் உள்ள 723 சுய உதவிக் குழு மகளிர்களுக்கு மாநில தென்னை நாற்றுப் பண்ணைகளில் தோட்டக்கலை துறை மூலமாக தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்வது தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டது.

தொடர்ந்து, 2024–25 ஆம் ஆண்டில், பயிற்சி பெற்ற சுய உதவிக் குழு பெண்களை ஒருங்கிணைத்து, ஒவ்வொரு குழுவுக்கும் ரூ.4 இலட்சம் வீதம் 60 சுய உதவிக் குழுக்களுக்கு

ரூ.2.40 கோடி நிதி செலவில் தென்னை நாற்று உற்பத்திக்காக வழங்கப்பட்டுள்ளது.

2025–26 ஆம் ஆண்டில், இத்தகைய சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த தென்னங்கன்றுகள் தோட்டக்கலைத்துறை மூலம் விநியோகம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 5.5.1.2.2 கரும்பில் பருசீவல் நாற்று உற்பத்தி மையங்கள்

கரும்பு பருசீவல் நாற்றுத் தொழில்நுட்பத்தில், பருசீவல் கரும்பு நாற்றுகள் நெகிழி குப்பிகளில் கட்டுப்பாடான சூழ்நிலையில் உற்பத்தி செய்யப்பட்டு, கரும்பு நடவு வயலில் நடவு செய்யப்படுவதால், கரும்பு சாகுபடியில் மகசூலை அதிகரிக்கிறது. சர்க்கரைத்துறையுடன் ஒருங்கிணைந்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்து, நன்கு

வளர்ந்த கரும்பு பருசீவல் நாற்றுக்களை உற்பத்தி செய்து, தற்போது, விநியோகம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2024-25 ஆம் ஆண்டில், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் கரும்பு பருசீவல் நாற்று உற்பத்தி மையங்கள் 50 இடங்களில் மொத்தம் ரூ. 1 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. நிழல் வலைக்குடில்கள் நிறுவப்பட்டு, கரும்பு பருசீவல் நாற்று உற்பத்திப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

2025-26 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழு மகளிர்கள் உற்பத்தி செய்த கரும்பு பருசீவல் நாற்றுக்களை கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் ஒத்துழைப்புடன், விநியோகம் செய்வதற்கும், அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை மீண்டும் முதலீடு

செய்து, இதுபோன்று தொடர்ந்து நாற்று உற்பத்திப்பணி மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 5.5.1.2.3 விதை உற்பத்தித் தொகுப்புகள்

பயிர்களில் மகசூலை அதிகரிப்பதில் தரமான விதை விநியோகம் அதிக பங்காற்றுகிறது. தரமான விதைகள் அதிகளவில் விவசாயிகளுக்கு கிடைப்பதற்காக, சுய உதவிக் குழு மகளிர் விவசாயிகள் வேளாண்மைத் துறை மற்றும் விதைச்சான்றுத் துறையுடன் ஒருங்கிணைந்து, சான்று விதை உற்பத்தி மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

2024–25 ஆம் ஆண்டில், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களில் 100 விதை உற்பத்தித் தொகுப்புகள் ரூ.2 கோடி செலவில் அமைக்கப்பட்டன.

2025–26 ஆம் ஆண்டில் பயறுவகை விதை உற்பத்திக்கு முக்கியத்துவம் தந்து இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**5.5.1.2.4 தேனீ வளர்ப்புத் தொகுப்புகள்**

தேனீ வளர்ப்பினால் சுய உதவிக் குழுப் பெண்கள் கூடுதல் வருமானம் ஈட்ட முடியும் என்பதோடு, இயற்கைப் பண்ணையத்திற்கும் உதவிபுரிவதால், தேனீ வளர்ப்பு என்பது மிக முக்கியமான வாழ்வாதாரப் பணியாகும்.

கடந்த 2024–25 ஆம் ஆண்டில், தேனீ வளர்ப்பில் தொகுப்பு அணுகுமுறையில், 20 பெண் விவசாயிகள் ஒன்றிணைந்து ஒரு தொகுப்பு அமைக்கப்படுகிறது. மொத்தம் 37 மாவட்டங்களில் 74 தேனீ வளர்ப்புத் தொகுப்புகள் ரூ.2.22 கோடி செலவில் அமைக்கப்பட்டன.

2025–26 ஆம் ஆண்டில், இத்தேனீ வளர்ப்புத் தொகுப்புகளிலிருந்து தொடர்ந்து தேன்

கிடைப்பதை உறுதி செய்திடும் வகையில், இத்தொகுப்புகள் கண்காணிக்கப்படும்.

**5.5.1.2.5 ஆடு வளர்ப்புத் தொகுப்புகள்**

ஆடுகள் ஏழைகளின் பசுவாகக் கருதப்படுகின்றன. சிறிய முதலீட்டில், குறைந்த கவனம் செலுத்தினாலே ஆடு வளர்ப்பில் அதிக வருமானம் ஈட்ட இயலும் என்பதோடு, குடும்ப உறுப்பினர்களின் ஊட்டச்சத்து பாதுகாப்புக்கும் உதவுகிறது.

கடந்த 2024-25 ஆம் ஆண்டில், ஆடு வளர்ப்பில் தொகுப்பு அணுகுமுறையில், 20 மகளிர் விவசாயிகளைக் கொண்டு, ஒரு தொகுப்பு உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு மகளிர் விவசாயிக்கும் 9 பெண் ஆட்டுக்குட்டிகளும் ஓர் ஆண் ஆட்டுக்குட்டியும் வழங்கப்பட்டன. மொத்தம் 37 மாவட்டங்களில் 74 ஆடு வளர்ப்புத்

தொகுப்புகள் ரூ.14.80 கோடி செலவில் அமைக்கப்பட்டன.

2025-26 ஆம் ஆண்டில், கூடுதலாக ஆடு வளர்ப்புத் தொகுப்புகள் அமைக்கப்படும்.

**5.5.1.2.6 சமுதாயப் பண்ணைப் பள்ளிகள்**

உள்ளூரில் உள்ள முன்னோடி விவசாயிகளைக் கொண்டு, வயல்மட்ட அளவில், நேரடியாக பயிற்சி தந்து, செயல்முறை அனுபவத்தையும் சுய உதவிக் குழு மகளிர்களுக்கு வழங்கும் வகையில் சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் நடத்தப்படுகிறது. அனைத்து நவீன பண்ணை நடைமுறைகள் பற்றி சுய உதவிக் குழு மகளிர் விவசாயிகள் நன்கு தெரிந்துகொள்ளும் வகையில், பயிர்க் காலம் முழுவதும் வயல்களிலேயே செயல்விளக்கங்கள் நடத்தப்படுகின்றன.

கடந்த 2024–25 ஆம் ஆண்டில், 500 சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் ரூ.5 கோடி செலவில் நடத்தப்பட்டன.

2025–26 ஆம் ஆண்டில் இச்சமுதாயப் பண்ணைப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற மகளிர்களைக் கொண்டு முன்னோடி விவசாயிகளின் உதவியுடன் இதர விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்படும்.

**5.5.1.2.7 மஞ்சள் தொகுப்புகள்**

மஞ்சள் இந்திய குங்குமம் என்றழைக்கப்படுகிறது. மேலும், நறுமணப் பொருள், சாயப் பொருள், மருந்து மற்றும் அழகூட்டும் பொருளாகவும் பயன்படுவதோடு, மதரீதியான விழாக்களிலும் மஞ்சள் முக்கியமாகக் பயன்படுகிறது. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மஞ்சளில் குர்குமின் அதிகளவில் இருக்கிறது. மகசூல் மற்றும் சந்தை வாய்ப்பினை

உயர்த்துவதற்காக, மஞ்சள் தொகுப்பு மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

கடந்த 2024-25 ஆம் ஆண்டில், மஞ்சள் சாகுபடி மற்றும் மதிப்புக்கூட்டுப் பணிகளில் தொகுப்பு அணுகுமுறை பின்பற்றப்பட்டு, 20 சுய உதவிக் குழு மகளிர் விவசாயிகளைக் கொண்டு ஒரு மஞ்சள் தொகுப்பு உருவாக்கப்படுகிறது. சேலம், ஈரோடு மாவட்டங்களில் இரண்டு மஞ்சள் தொகுப்புகள் ரூ.0.4 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன.

2025-26 ஆம் ஆண்டில் இவ்விரு மஞ்சள் தொகுப்புகளில் அறுவடை செய்த மஞ்சளை ஒன்று சேர்த்து, மதிப்புக்கூட்டி, மதிப்புக்கூட்டிய பொருட்களாக பல்வேறு விற்பனை மையங்களில் விற்பனை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 5.5.1.2.8 பயறு வகைத் தொகுப்புகள்

பயறு வகைப் பயிர்கள் சாகுபடி, நீடித்த வேளாண்மைக்கு வழிவகுக்கும் என்பதோடு, குறைந்த நீரில் குறைவான நாட்களில், மண் வளத்தை மேம்படுத்தும். பயறுவகைகளில் புரதச்சத்து, நார்ச்சத்து, பல்வேறு வைட்டமின்கள் மற்றும் அமினோ அமிலங்கள் அதிகளவில் இருப்பதால், அனைத்து வயதினரும் ஏற்ற மதிப்புள்ள உணவு ஆதாரமாக பயறு வகைகள் விளங்குகின்றன.

கடந்த 2024–25 ஆம் ஆண்டில், 50 பயறு சாகுபடி மேற்கொள்ளும் சுய உதவிக் குழு பெண் விவசாயிகளை ஒன்றிணைத்து பயறு தொகுப்பு உருவாக்கப்பட்டது. மயிலாடுதுறை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களில் மூன்று பயறு தொகுப்புகள் ரூ.0.6 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன.

2025–26 ஆம் ஆண்டில் இப்பயறு தொகுப்புகளில் அறுவடை செய்த பயறுவகைகளை ஒன்று சேர்த்து, மதிப்புக்கூட்டி, மதிப்புக்கூட்டிய பொருட்களாக பல்வேறு விற்பனை மையங்களில் விற்பனை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 5.5.1.2.9 மரமில்லா வனப் பொருட்கள் தொகுப்புகள்

வனப்பகுதிகளில் விளையக்கூடிய மரம் அல்லாத கொட்டைகள், விதைகள், பழங்கள், காளான்கள், எண்ணெய், தாவரச் சாறுகள், இலைகள், மருந்து வகைப் பயிர்கள், எரிபொருட்கள், சுவைதாளிதப் பயிர்கள் போன்றவை மரமில்லா வனப் பொருட்களில் அடங்கும். வனப் பகுதிகளில் இத்தகைய பொருட்களை சேகரிப்பதில் மகளிர்கள் அதிகமாக ஈடுபட்டுவருவதால், அவர்களின்

வாழ்வாதாரத்திற்கு இத்தொழில் முக்கிய பங்காற்றுகிறது. இத்தகைய வனம் சார்ந்த பொருட்களை சேகரித்து, மதிப்புக்கூட்டி, சந்தைகளுக்கு கொண்டு சேர்த்தால், இப்பொருட்களில் மதிப்பு உயர்ந்து, அதன் மூலம் இப்பணிகளில் ஈடுபடும் மகளிர்களின் பொருளாதார நிலை மேம்படும்.

கடந்த 2024-25 ஆம் ஆண்டில், வனப் பகுதிகளில் 50 ஆர்வமுள்ள சுய உதவிக் குழு பெண் விவசாயிகளை ஒன்றிணைத்து மரமில்லா வனப்பொருட்கள் தொகுப்பு உருவாக்கப்பட்டது. கோயம்புத்தூர், திண்டுக்கல், நாமக்கல், நீலகிரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் 9 மரமில்லா வனப்பொருட்கள் தொகுப்புகள் ரூ.0.90 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டன.

2025-26 ஆம் ஆண்டில் இத்தொகுப்புகளில் மரமில்லாத வனப்பொருட்கள்

சேகரிப்பும், மதிப்புக்கூட்டுப் பணிகளும் வலுப்படுத்தப்படும்.

### 5.5.1.2.10 புளித் தொகுப்புகள்

வெப்ப மண்டலப் பகுதிகளில் விளையக்கூடிய புளியில், ஊட்டச் சத்துக்கள் இருப்பதோடு, நமது மாநிலத்தில் பெரும்பாலான பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது. புளிச் சாறு, புளிக் கொட்டையினை அகற்றுதல் மற்றும் புளிக் குழம்பு, பேஸ்ட் மற்றும் மிட்டாய் வகைகள் தயாரிப்பில் கிராமப்புறங்களில் உள்ள மகளிர்கள் ஆர்வமுடன் பங்கேற்கிறார்கள். எனவே, உள்ளூர் சந்தை தேவைக்காக சுத்திகரிப்பு செய்து, மதிப்புக்கூட்டி உருவாக்கும் புளி வகைகளினால் பொருளாதார திறன் மேலும் உயரும். புளியை ஒன்று சேர்த்து, சுத்திகரித்து, விற்பனை செய்யும் பணிகளில் சுய உதவிக் குழு பெண்களை ஒருங்கிணைத்தால், அவர்களின் வருமானம்

உயருவதோடு, தொழில் நிறுவனத்திற்காக வாய்ப்பு அதிகரித்து, அதன் மூலம் அவர்களின் வாழ்வில் நிதி சுதந்திரம் வலுப்படுகிறது.

கடந்த 2024-25 ஆம் ஆண்டில், 50 சுய உதவிக் குழு பெண் உறுப்பினர்களை ஒன்றிணைத்து புளித் தொகுப்பு உருவாக்கப்பட்டது. தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் மூன்று புளித் தொகுப்புகள் ரூ.0.60 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன.

2025-26 ஆம் ஆண்டில் இப்புளித் தொகுப்புகளில் சேகரித்த புளியை ஒன்று திரட்டி, சுத்திகரித்து, பல்வேறு புளி சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்து, மாநிலத்தில் உள்ள பல்வேறு விற்பனை மையங்களில் விற்பனை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 5.5.1.2.11 வாழைத் தொகுப்புகள்

சுவை, ஊட்டச்சத்துடன் ஆண்டு முழுவதும் கிடைக்கக்கூடிய பழம் என்பதால், வாழை மதிப்பு உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. கிராமப்புறங்களில் வாழும் பெண்களின் வாழ்வாதார உயர்வுக்கு, வாழை சார்ந்த நிறுவனங்கள் உதவும் என்பதோடு, அவர்களுக்கு நிலையான வருமானம் ஈட்டுவதற்கு வழிகாட்டுகிறது. வாழை சிப்ஸ், வாழை மாவு உற்பத்தி, வாழை சார்ந்த சிற்றுண்டி தயாரிப்பு, கைவினைப் பணிகளில் வாழை நார் பயன்பாடு போன்ற பல்வேறு மதிப்புக்கூட்டுப் பணிகளில் பெண்கள் பங்கேற்க முடியும். மேலும், அறுவடை பின் மேலாண்மை, பேக்கேஜிங், பிராண்டிங் போன்ற இனங்களில் பயிற்சி அளித்தால், சந்தை வாய்ப்பு அதிகரித்து, அதிக இலாபம் ஈட்ட முடியும் என்பதோடு, பெண்களுக்கு நிதிச்சுமையிலிருந்து விடுதலை கிடைக்கும்.

கடந்த 2024–25 ஆம் ஆண்டில், 50 சுய உதவிக் குழு பெண் விவசாயிகளை ஒன்றிணைத்து வாழைத் தொகுப்பு உருவாக்கப்பட்டது. தேனி, திருச்சி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மூன்று வாழைத் தொகுப்புகள் ரூ.0.60 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன.

2025–26 ஆம் ஆண்டில் இவ்வாழைத் தொகுப்புகளில் மதிப்புக்கூட்டிய பொருட்களின் எண்ணிக்கையினை அதிகரித்து, பல்வேறு விற்பனை மையங்களில் விற்பனை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 5.5.1.2.12 கருவி வங்கிகள்

கிராமப் பகுதிகளில் பண்ணைப் பணிகளை மேற்கொள்ளும் பெண்களுக்கு பண்ணைக் கருவிகள் மிகவும் பயனுள்ளதாக இருப்பதுடன், பண்ணை உற்பத்தித்திறனை உயர்த்துகிறது.

சாகுபடி நிலம் தயாரிப்பு, விதைப்பு, களையெடுத்தல், அறுவடை மற்றும் அறுவடை பின்செய் மேலாண்மை போன்ற பணிகளில் பெண் விவசாயிகளுக்கு இப்பண்ணைக் கருவிகள் மிகவும் உதவிகரமாக இருப்பதுடன், அவர்களின் பண்ணையை திறம்பட நிர்வகிக்க முடிகிறது.

2024–25 ஆம் ஆண்டில், 114 வட்டாரங்களில் மொத்தம் 456 கருவி வங்கிகள் ரூ.6.84 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன.

2025–26 ஆம் ஆண்டில் இக்கருவி வங்கிகளில் கொள்முதல் செய்யப்பட்டுள்ள பண்ணைக் கருவிகளை திறம்பட பயன்படுத்துவதற்கும், அதன் மூலம் கிராமப் பகுதிகளில் வாடகை பணிகளை வலுப்படுத்திடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

### 5.5.2 பண்ணை சாரா வாழ்வாதார நடவடிக்கைகள்

உற்பத்தி, வர்த்தகம் மற்றும் சேவைப் பிரிவுத் தொழில்களை மேம்படுத்தும் பண்ணை சாரா வாழ்வாதார நடவடிக்கைகள் சுய உதவிக் குழு பெண்களின் வருமானத்தை உயர்த்துவதற்கான வாய்ப்புகளை தருகின்றன. பண்ணை சாரா செயல்பாடுகள் ஊக்குவிப்பதன் மூலம் பெண்கள் தங்கள் பொருளாதார பணிளை பல்வகைப்படுத்தவும், விவசாயம் சார்ந்திருப்பதைக் குறைக்கவும், நிதி நிலைத்தன்மை அடையவும் உதவுகிறது. இதுபோன்ற உத்திகள் புதிய நிறுவனங்களை ஊக்குவிக்கவும், ஏற்கெனவே இயங்கி வரும் நிறுவனங்களை மேம்படுத்திடும் நோக்கத்தில் கீழ்க்காணும் திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. குறு நிறுவன மேம்பாடு (MED)
2. தொடக்க கிராம தொழில் முனைவோர் திட்டம் (SVEP)

3. ஓரிட சேவை மையம் (OSF)
4. தொகுப்பு மேம்பாடு – கைவினைஞர் & துறை சார்ந்த தொகுப்புகள்.
5. சமுதாயத் திறன் பள்ளி (CSS)
6. பிரதம மந்திரியின் குறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (PMFME)

### 5.5.2.1 குறு நிறுவன மேம்பாடு (MED)

சுய உதவிக் குழுக்கள் (SHGs) மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை பண்ணைச் சாராத பிரிவில் உள்ள குறு நிறுவனங்களை நடத்தும் நோக்கத்தில் குறு நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர் பயிற்சியுடன் சமுதாய முதலீட்டு நிதி மற்றும் வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவியும் வழங்கப்படுகிறது.

2024-25 ஆம் ஆண்டில் 8 மாவட்டங்களில் 8 வட்டாரங்களில் 1,050 புதிய

நிறுவனங்களுக்கும், ஏற்கெனவே இயங்கிவரும் 350 நிறுவனங்களுக்கும் வணிகத் திறன், நிதி மற்றும் சந்தை மேலாண்மை பற்றிய பயிற்சிகள் வழங்கி ரூ.0.36 கோடி மதிப்பீட்டில் குறு நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2025-26 ஆம் ஆண்டில், இத்திட்டம் கூடுதலான வட்டாரங்களில் செயல்படுத்தப்படும்.

### 5.5.2.2 தொடக்க கிராம தொழில் முனைவோர் திட்டம் (SVEP)

புதிய நிறுவனங்களை நிறுவுவதற்கும், ஏற்கனவே இயங்கிவரும் நிறுவனங்களை விரிவுபடுத்துவதற்கும் கிராமப்புற ஏழைகளுக்கு உதவுவதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சமுதாய வளப் பயிற்றுநர்கள் (நிறுவன மேம்பாடு) மற்றும் முன்அனுபவம் கொண்டவர்கள் மூலம் வழிகாட்டுவதோடு வணிகத் திட்டம்

தயாரிப்பதற்கும், நிதி ஆதரவைப் பெறுவதற்கும் இத்திட்டம் உதவுகிறது. இத்திட்டமானது 2019ஆம் ஆண்டு முதல் நடைமுறைபடுத்தப்பட்டு 4 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2024-25 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.6.50 கோடி நிதி மதிப்பில் ஒரு வட்டாரம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2025-26 ஆம் ஆண்டில், இத்திட்டம் கூடுதலான வட்டாரங்களில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.5.2.3 ஓரிட சேவை மையம் (OSF)

கருத்தாக்கம், எண்ணம், துவக்கம், திறன் மேம்பாட்டு பயிற்சி, மதிப்புச் கூட்டுதலுக்கான இணைப்பு, சட்ட இணக்கங்கள் சந்தை விபரங்களை சேகரித்து, சந்தை வாய்ப்புகளை ஆராய்தல் மற்றும் நிதி இணைப்புகள் போன்ற முழுமையான வணிக வளர்ச்சி சேவைகளை

ஏற்கெனவே இயங்கிவரும் நுண் மற்றும் குறு நிறுவனங்களுக்கு முன்அனுபவம் கொண்டவர்கள் மூலம் வழங்கும் நோக்கத்தில் ஓரிட சேவை மையங்கள் செயல்படுகின்றன.

2024-25 ஆம் ஆண்டில் 6 மாவட்டங்களில் 15 வட்டாரங்களில் 2,250 நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக ஓரிட சேவை மையங்கள் ரூ.4.61 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன.

2025-26 ஆம் ஆண்டில், இத்திட்டம் கூடுதலான வட்டாரங்களில் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.5.2.4 தொகுப்பு மேம்பாடு – கைவினைஞர் & துறை சார்ந்த தொகுப்புகள்

உற்பத்திச் செலவுகளைக் குறைத்து, தொழில்நுட்ப ஆதரவைப் வழங்கி, பேரம் பேசும் திறனை வலுப்படுத்தி, உற்பத்தியை அதிகரிக்கும்

போது, செலவு குறையும் தன்மை மூலம் சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்துவதே தொகுப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் நோக்கங்களாகும். பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெண் தொழில்முனைவோர்களை தொகுப்புகளாக ஒருங்கிணைத்து, உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நடைமுறை மூலதனம் போன்ற இனங்களில் இத்திட்டம் நிதியினை வழங்குகிறது.

2024-25 ஆம் ஆண்டில் இரண்டு தொகுப்புக்கான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, விரிவான செயல் திட்டம் (DSR) தயாரிக்கப்பட்டு வருகிறது.

2025-26 ஆம் ஆண்டில், இவ்விரு தொகுப்புகளிலும் வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 5.5.2.5 சமுதாயத் திறன் பள்ளி

ஒவ்வொரு பள்ளியிலும் 20 உறுப்பினர்களைக் கொண்ட சமுதாயத் திறன் பள்ளியானது அனைத்து மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. வெற்றிகரமாக செயல்படும் நிறுவனங்களை இயக்கும் அனுபவம் வாய்ந்த உள்ளூரில் உள்ள திறமையான பயிற்சியாளர்களின் வழிகாட்டுதலின் மூலம் நேரடியாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த பள்ளிகள் மூலம் ஆதரவான ஒரு சூழலை வழங்கி, தனது திறமையை ஆராய வேண்டும் என்ற நம்பிக்கை பயிற்சியாளர்களுக்கு கிடைக்கின்றன. மேலும், ஒரு நிறுவனத்தை இயக்கும்போது எதிர்கொள்ளும் சவால்களை நிர்வகிப்பதற்கும், பங்கேற்பாளர்களுக்கு நேரடி அனுபவம் மற்றும் சிக்கல் தீர்வு திறன்களை இந்த பள்ளிகள் வழங்குகின்றன.

2024–25 ஆம் ஆண்டில், 1,000 சமுதாய திறன் பள்ளிகள் அமைக்கப்பட்டு, 17,000 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.9.97 கோடி மதிப்பில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

2025–26 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**5.5.2.6 பிரதம மந்திரியின் குறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்துவதற்கான திட்டம்**

இந்த திட்டம், உணவு பதப்படுத்தும் துறையில் முறைப்படுத்தப்படாத குறு நிறுவனங்களை அதிகாரபூர்வமாக மாற்றி, அவற்றின் போட்டித் திறன்களை மேம்படுத்த உதவுகிறது. விதை மூலதன நிதி, பெண்கள் வணிகங்களுக்கு சிறிய கருவிகள் மற்றும் உபகரணங்களை வாங்கவும், தயாரிப்புகளை சிப்பமிடுதல் (Packaging), தரத்தை மேம்படுத்துதல்,

சந்தைக்கு கொண்டு செல்லும் திறனைப் பெறவும் உதவுகிறது.

2024-25 ஆம் ஆண்டில், சுய குழுக்களால் நடத்தப்படும் 16,000 உணவு தொடர்பான நிறுவனங்கள், மாநில முகமைக்கு (SNA) ரூ.66.22 கோடி மதிப்பில் விதை மூலதன நிதி பெறும் வகையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

2025-26 ஆம் ஆண்டில், கூடுதலான குறு நிறுவனங்களுக்கும், விதை மூலதன நிதி வழங்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 5.5.3 சுய உதவிக் குழு மகளிர் தயாரிப்புகளை சந்தைப்படுத்துதல்

விளம்பர முகாம்கள், கண்காட்சிகள் மற்றும் மின் வணிக முறை மூலம் வணிக முத்திரை பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகள்

மற்றும் சேவைகளை மேம்படுத்தும் ஒரு முக்கிய உத்தி சந்தைப்படுத்தல் ஆகும். தரப்படுத்துதலில் உள்ள நெறிமுறைகளை தவறாது பின்பற்றுவதால் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகளில் தர உத்தரவாதம் உறுதி செய்யப்படுகிறது. இந்த முயற்சிகள் மூலம், சந்தைகளில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகளை அதிகப்படுத்தி, நுகர்வோர்களிடம் நம்பிக்கையை அதிகரிப்பதற்காக, ஒரேமாதிரியான பொட்டலமிடுதலுக்கும் (Packaging) அடையாள குறியீட்டு (Labelling) இணைக்கத்திலும் அதிகக் கவனம் செலுத்தி, 'மதி' எனும் வணிக முத்திரையின் பெயரில் ஊக்குவிக்கப்படுகின்றன.

### 5.5.3.1 விளம்பரப் பணிகள்

மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகளின் விற்பனையினை

ஊக்குவிப்பதற்காக, கண்காட்சிகள், சந்தை இணைப்புகள் மற்றும் வணிகர்களுக்கிடையிலான (வணிகர்–வணிகர்) சந்திப்புகள் மற்றும் பரிசுப் பெட்டகங்கள் மூலம் விளம்பரப் பணிகளை மேற்கொள்வதற்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. சுய உதவிக் குழு பெண்களின் தயாரிப்புகளை காட்சிப்படுத்தி, தயாரிப்புகளின் விற்பனையை அதிகரிப்பதில் விற்பனை உள்கட்டமைப்பை வலுப்படுத்துவது முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் மூலம் அவர்களின் பொருட்கள் அதிகளவில் சந்தைகளில் கொண்டுவரப்பட்டு, அவர்களுக்குக் கிடைக்கும் இலாபத்தை அதிகரிக்கிறது.

2024–25 ஆம் ஆண்டில், ரூ.300 கோடி விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ரூ.194.57 கோடி எட்டப்பட்டது.

2025-26 ஆம் ஆண்டில், மின் வணிக, அனுபவ அங்காடிகள் போன்ற புதிய விற்பனை வாய்ப்புகளை உருவாக்கி, மேற்காணும் விற்பனைப் பணிகள் யாவும் நெறிமுறைப்படுத்தப்பட்டு வலுப்படுத்தப்படும்.

### 5.5.3.2 கண்காட்சிகள் மற்றும் விழாக்கள்

பரந்த சந்தைகளின் இயக்கம் குறித்த சுய உதவிக் குழு உறுப்பினர்களின் புரிதலை மேம்படுத்துவதற்காக, சர்வதேச, தேசிய மற்றும் மண்டல அளவிலான கண்காட்சிகளில் பங்கேற்பது, ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், நகர்ப்புர நுகர்வோர் விருப்பங்களையும் சந்தை தேவையையும் புரிந்துகொள்ளும் வகையில், மாநில மற்றும் மாவட்ட அளவிலான கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுபோன்ற விற்பனைத் தளங்கள் சிறந்த அனுபவத்தை வழங்குவதுடன், சுய உதவிக்

குழுக்கள் தங்கள் தயாரிப்புகளை மேம்படுத்தவும், தங்கள் எல்லையினை விரிவுபடுத்தவும் உதவுகின்றன. சுய உதவிக் குழுக்கள் தங்களின் சந்தை இருப்பை மேலும் வலுப்படுத்திடும் வகையில், சர்வதேச கண்காட்சிகளில் தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்தி வெற்றிகரமாக விற்பனை செய்துள்ளனர்.

2024-25 ஆம் ஆண்டில், 234 கண்காட்சிகள் நடத்தப்பட்டு, ரூ.10.81 கோடி மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2025-26 ஆம் ஆண்டில், மாநிலத்திற்குள்ளேயும், அயல் மாநிலங்களிலும் கூடுதலான கண்காட்சிகள், சந்தைகளை நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

#### 5.5.3.3 இயற்கை சந்தைகள்

இயற்கை முறையில் தயாரிக்கப்படும் பொருட்கள் குறித்த நுகர்வோர்களிடையே விழிப்புணர்வு அதிகரித்து வருவதால், நீடித்த வேளாண் தொழில்நுட்பங்களை பின்பற்றி, இயற்கை விவசாய தொகுப்புகளை உருவாக்குவதற்கு, பெண் விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

சந்தைப்படுத்துதலையும் விற்பனையையும் எளிதாக்குவதற்காக, மாநில தலைமையகத்தில் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையும், பல்வேறு மாவட்டங்களில் வாரந்தோறும் 'இயற்கை சந்தைகள்' நடத்தப்பட்டு, விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை நேரடியாக விற்பனை செய்வதற்கான தளத்தை வழங்குகிறது.

2024-25 ஆம் ஆண்டில், 58 இயற்கை சந்தைகள் நடத்தப்பட்டு, ரூ.6.15 கோடி மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

2025-26 ஆம் ஆண்டில், மாநில அளவில் மாதத்திற்கு இருமுறையும், மாவட்ட அளவிலும் இயற்கை சந்தைகள் நடத்தப்படும்.

**5.5.3.4 மின்னணு வர்த்தக இணையதளம்**

சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகளின் பாரம்பரிய கைவினைத்திறன், தரம் மற்றும் தனித்துவத்தை எடுத்துக்காட்டி, மின்னணு வர்த்தகத் தளங்கள் மூலம் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. உலகெங்கிலும் உள்ள வாடிக்கையாளர்கள் www.mathisandhai.com என்ற பிரத்யேக வலைத்தளம் மூலம் இந்த தயாரிப்புகளை வாங்கலாம்.

2024–25 ஆம் ஆண்டில், வெவ்வேறான பல்நோக்கு வணிகத் தளங்களில் 5,202 தயாரிப்புகள் பதிவேற்றம் செய்யப்பட்டு, இதன் மூலம் ரூ. 1.2 கோடி மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2025–26 ஆம் ஆண்டில், மின்னணு வர்த்தக இணையதளத்தை வலுப்படுத்தி, மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்களை விற்பனையாளர்களாக பதிவு செய்து, சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகளை பல்வேறு மின்னணு வர்த்தகத் தளங்களில் பதிவேற்றம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.5.3.5 மதி அங்காடி மற்றும் நடமாடும் விற்பனை வாகனங்கள்:

சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகள் பற்றி அனைவரும் நன்கு தெரிந்து கொள்வதற்காகவும், விற்பனையை

மேம்படுத்துவதற்காகவும், மக்கள் அதிகம் கூடும் பொது இடங்களில் மதி அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், நகர்ப்புர சந்தைகளில் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களிலும், மலைப்பகுதிகளிலிருந்தும் கொண்டுவரப்படும் பொருட்களின் விற்பனையினை எளிதாக்குவதற்காக, மதி நடமாடும் விற்பனை வாகனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

2024-25 ஆம் ஆண்டில், 100 நடமாடும் விற்பனை வாகனங்களும் (e-Carts), 100 மதி அங்காடிகளும் உருவாக்கப்பட்டு, ரூ.5.77 கோடி மதிப்புள்ள தயாரிப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2025-26 ஆம் ஆண்டில், முக்கிய சுற்றுலா தளங்களில் சுற்றுலா தள அங்காடிகள்

அமைக்கப்பட்டு, சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகளை காட்சிப்படுத்தப்படும்.

### 5.5.3.6 மதி அனுபவ அங்காடி

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன அலுவலகத்தில் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மதி அனுபவ அங்காடி நிறுவப்பட்டுள்ளது. பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த கிராமப்புற, நகர்ப்புர சுய உதவிக் குழு பெண்களால் தயாரிக்கப்படும் பொருட்களை காட்சிப்படுத்தி, விற்பனை செய்வதற்கு இந்த அங்காடி ஒரு தளமாக செயல்படுகிறது. வாடிக்கையாளர்கள் இப்பொருட்களை நேரில் பார்த்து, தயாரிப்பின் நுணுக்கங்களை அவர்களே உணர்ந்து, அதன் மூலம் அதிக விற்பனைக்கான ஆணையினை பெற்றிட வழிவகுக்கும் என்பதுடன், சுய உதவிக் குழு தொழில்

முனைவோருக்கான சந்தை வாய்ப்புகளையும் விரிவுபடுத்துகிறது.

2024-25 ஆம் ஆண்டில், தலைமை செயலகத்தில் மேலும் ஒரு அனுபவ அங்காடி அமைக்கப்பட்டு, சுய உதவிக் குழு தயாரிப்புகளுக்கான சந்தை எல்லை அதிகரித்துள்ளது. இரண்டு அங்காடிகளிலிருந்தும் மொத்தம் ரூ.0.89 கோடி மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சென்னை வாழ் மக்களிடையே இவ்விரு மதி அனுபவ அங்காடிகளுக்கு அதிக வரவேற்பு உள்ளதால், இன்னும் அதிக இடங்களில் இதுபோன்ற அங்காடிகளை அமைப்பதற்கு நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும்.

### 5.5.3.7 வாங்குபவர் விற்பனையாளர் சந்திப்பு

வாங்குபவர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் இடையே நேரடி வணிக வாய்ப்புகளை எளிதாக்குவதற்கு வாங்குபவர் மற்றும் விற்பனையாளர் சந்திப்பு ஒரு கட்டமைக்கப்பட்ட தளமாக செயல்படுகிறது. இந்த சந்திப்புகள் சுய உதவிக் குழுவால் நடத்தப்படும் நிறுவனங்கள் சந்தை எல்லையினை விரிவுபடுத்தவும், அவர்களின் தயாரிப்புகளை காட்சிப்படுத்தவும், ஒப்பந்தங்களை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளவும், நீண்டகால வணிக உறவுகளை உருவாக்கவும் தொடர்புகள் மூலம் விற்பனை வாய்ப்புகளை மேம்படுத்தவும் உதவுகின்றன. 2024–25 ஆம் ஆண்டில் 551 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி, ரூ.5.84 கோடி மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2025-26 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுவின் தயாரிப்புகளை அதிகளவில் விற்பனை செய்வதற்கு இதுபோன்ற முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்படும்.

### 5.5.3.8. சிறுதானிய உணவகங்கள்

சிறுதானியங்களின் பயன்பாட்டினை அதிகரிக்கவும், ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்களில் சிறுதானியங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட உணவு மற்றும் சிற்றுண்டிகளை விநியோகம் செய்வதற்காக சிறுதானிய உணவகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த உணவகங்கள் மூலம் பொதுமக்களுக்கு மதிப்பு கூட்டப்பட்ட சிறுதானிய பொருட்களும் சமைத்த உணவு வகைகளும் எளிதில் கிடைப்பதோடு, சத்துமிகுந்த

உணவுக்கான தேர்வுகளுக்கு பெரிதும் உதவுகின்றன.

2024–25 ஆம் ஆண்டில், சிறுதானிய உணவகங்கள் மூலம் ரூ.3.13 கோடி மதிப்புள்ள சிறுதானியங்கள் சார்ந்த உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2024–25 ஆம் ஆண்டில் சிறுதானிய உணவகங்களுக்கு கிடைத்துள்ள வெற்றியின் அடிப்படையில், 2025–26 ஆம் ஆண்டில் கூடுதலான சிறுதானிய உணவகங்களை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தொடர்ந்து மேற்கொள்ளும்.

**5.5.3.9 அடுக்குமாடி குடியிருப்பு சந்தை**

மகளிர் சுய உதவிக் குழு தயாரிப்புகளின் சந்தை எல்லையினை அதிகரிப்பதற்காக, சென்னை போன்ற பெருநகரங்களில் விற்பனையை எளிதாக்க ஒவ்வொரு

மாவட்டத்திலும் ஐந்து சமுதாய வளப் பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சியாளர்கள் அடுக்குமாடி குடியிருப்பு சந்தைகள் மூலம் வாடிக்கையாளர்களிடையே சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகளை ஆர்வத்துடன் ஊக்குவித்து, நேரடி விற்பனை வாய்ப்புகளை உருவாக்குகின்றனர்.

2024–25 ஆம் ஆண்டில், 20 அடுக்குமாடி குடியிருப்பு சந்தைகள் நடத்தப்பட்டு, ரூ.0.56 கோடி மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

2025–26 ஆம் ஆண்டில், பல்வேறு நகரங்களில் அடுக்குமாடி குடியிருப்பு சந்தைகள் நடத்தப்படும்.

## 5.6 விருதுகள்

### 5.6.1 ஊரகம் மற்றும் நகர்ப்புர பகுதிகளில் உள்ள சிறந்த சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகள்,

சிறந்த சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள், பகுதி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர அளவிலான கூட்டமைப்புகளின் சமூக பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளின் பங்களிப்புகளை அங்கீகரித்து அவைகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களை பாராட்டும் விதமாக மணிமேகலை விருதுகள் வழங்கப்படுகின்றன.

மாநில அளவில் ஊரகப் பகுதிகளில் 10 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ஒரு இலட்சம்

ரூபாயும், 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், 5 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு வட்டார அளவிலான கூட்டமைப்புக்கு ஐந்து இலட்சம் ரூபாயும், நகர்ப்புர பகுதிகளில் 10 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், 3 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும் ஒரு நகர அளவிலான கூட்டமைப்புக்கு ஐந்து இலட்சம் ரூபாயும், சான்றிதழ்களுடன் கூடிய விருதுகளும் வழங்கப்படுகின்றன.

மாவட்ட அளவில், தலா ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஊரகப்பகுதிகளில் சிறப்பாக செயல்படும் 3 சுய உதவிக் குழுக்களுக்கு தலா இருபத்தைந்தாயிரம் ரூபாயும், ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு

தலா ஐம்பதாயிரம் ரூபாயும், நகர்ப்புரப் பகுதிகளில் சிறப்பாக செயல்படும் 3 சுய உதவிக் குழுக்களுக்கு தலா இருபத்தைந்தாயிரம் ரூபாயும், ஒரு பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு ஒரு இலட்சம் ரூபாயும், சான்றிதழ்களுடன் கூடிய விருதுகளும் வழங்கப்படுகின்றன.

### 5.6.2 சிறப்பாக செயல்படும் வங்கிகளுக்கான விருதுகள்

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குவதில் வங்கிகளின் குறிப்பிடத்தக்க பங்கினை கருத்தில் கொண்டு சிறப்பாக செயல்படும் வங்கிகள் மற்றும் வங்கி கிளைகளை கௌரவிக்கும் விதமாக சிறந்த வங்கிகள் மற்றும் வங்கி கிளைகளுக்கான விருதுகள் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த விருதானது சிறப்பாக செயல்படும் வங்கிகளை ஊக்குவிப்பதோடு வங்கிகளிடையே ஆரோக்கியமான போட்டியை உருவாக்கியுள்ளது.

2023–24–ஆம் ஆண்டில், இந்தியன் வங்கி, HDFC மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி ஆகியவை சிறந்த வங்கிகளுக்கான விருதையும், வேலூர் இந்தியன் வங்கி (மைக்ரோசேட்) & லண்டன்பேட்டை தமிழ்நாடு கிராம வங்கி ஆகியவை சிறந்த வங்கி கிளைகளுக்கான விருதையும் வென்றுள்ளன.

# 6. திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு

## 6.1 திறன்மிக்க பணியாளர்களை உருவாக்குதல்

உலகம் முழுவதும் தொழிலாளர் பற்றாக்குறை நிலவி வரும் சூழ்நிலையில், மக்கள் தொகை உபரியை இளைஞர்கள் வளம் சார்ந்த காலமாக மாற்றுவதற்கு திறன் மேம்பாட்டு பயிற்சி தமிழ்நாட்டிற்கு ஒரு சிறந்த வாய்ப்பாகும். கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப்பெரிய தொழில்துறை வளர்ச்சியினால், குறிப்பாக, உற்பத்தி மற்றும் சேவை துறைகளில் அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ளன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சியிலும் மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதிலும் எப்பொழுதும் முதன்மையாக விளங்குகிறது. மேலும், தமிழ்நாட்டின் உற்பத்தி திறனை மேம்படுத்த கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளில் இளைஞர் திறன் மேம்பாடு முக்கியமான ஒன்றாகும். இத்தொழில்துறை வளர்ச்சி அளிக்கும்

வாய்ப்புகளைப் பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கும், திறன் இல்லாத மற்றும் பகுதி திறன் பெற்ற இளைஞர்களை தொழில்துறை வேலைக்கு தகுந்தவர்களாக மாற்றுவதற்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி அவசியமாகிறது. தமிழ்நாட்டின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் இளைஞர் திறன் மேம்பாடு முக்கியமான ஒன்றாகும்.

இந்தியாவின் மிக அதிகமாக தொழில்துறை வளர்ச்சியடைந்த மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். மாநில அரசின் சாதகமான முதலீட்டுச் சூழ்நிலை, வலுவான அடிப்படை வசதிகள் மற்றும் வளமான வள ஆதாரங்கள் ஆகியவை பல தேசிய, பன்னாட்டு நிறுவனங்களை நம் மாநிலத்தில் முதலீடு செய்ய ஈர்த்துள்ளன. வேலைவாய்ப்பிற்கான தேவை அதிகமாக இருந்தபோதும், திறமையான தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக மாநிலத்தின் கிராமப்புற

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறைவாக உள்ளன. திறமையான தொழிலாளர் தேவைக்கும், வழங்கலுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்கு, தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற இளைஞர்கள் திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY) ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தொடர்பான திறன் பயிற்சியை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs) சுயதொழில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் கவனம் செலுத்துகின்றன.

## 6.2 தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY)

இத்திட்டம் ஊரக வளர்ச்சி துறை அமைச்சகத்தின் கீழ் ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு இடையே 60:40 என்ற நிதிப் பகிர்வு அடிப்படையில் ஊரக ஏழை இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கும்

திட்டமாகும். 18–35 வயதுடைய இளைஞர்களுக்கு தேர்வு செய்யப்பட்ட நிறுவனங்கள் மூலம் திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடித்த இளைஞர்களில் குறைந்தது 70% இளைஞர்களுக்கு பணி நியமன உத்தரவாதம் வழங்குவது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

இத்திட்டம் 62% பட்டியல் இனத்தினர்க்கும் (SC), 3 % பழங்குடியினர்க்கும் (ST), 16% சிறுபான்மையினருக்கும் (Minorities) மற்றும் 33% பெண்களுக்கும் (அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கிய) என்ற கட்டாய சமூக உள்ளாக்கத்தை கொண்டுள்ளது. பயிற்சிக்குரிய பாடத்திட்டங்கள் தேசிய திறன் தகுதி குழுமத்துடன் (National Skill Qualification Framework) இணைந்ததாகவும், மிகவும் உயர்ந்த தரத்திலும் உள்ளது. இத்திட்டத்தில், துறை சார்ந்த பாடத்திட்டத்துடன் கட்டாய மென் திறன்களான

ஆங்கிலம் மற்றும் அடிப்படை கணினி அறிவு ஆகிய பாடத்திட்டங்களும் சேர்க்கப்பட்டுள்ளதால் இளைஞர்கள் மேம்பட்ட வேலைவாய்ப்புகளைப் பெற உதவுகிறது. பயிற்சியில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு திறன் பிரிவு குழுமங்கள் (Sector Skill Council) மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

2019–2025 ஆம் ஆண்டு வரை, 64,721 இளைஞர்களுக்கு பயற்சிகள் வழங்கப்பட்டு 38,425 இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். 2024–25 ஆம் நிதியாண்டில் ஊரக பகுதியை சார்ந்த 5,027 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு 3,743 இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

2019–25 தொகுப்பு ஆண்டில் துறை வாரியாக பயிற்சி பெற்ற இளைஞர்கள் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

## அட்டவணை–6.2.

## துறை வாரியான பயிற்சி விவரம்

| வ. எண். | துறை பெயர் | பயிற்சி பெற்ற இளைஞர்கள் |
|---|---|---|
| 1 | தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயக்க சேவைகள் | 7,878 |
| 2 | ஆடைத் தொழில், தயாரிப்பு மற்றும் & வீட்டு அலங்காரத் தொழில்கள் | 7,209 |
| 3 | மின்னணு சாதனங்கள் | 6,944 |
| 4 | சுகாதார பராமரிப்பு | 6,862 |
| 5 | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | 5,112 |
| 6 | சில்லறை விற்பனை | 4,877 |
| 7 | போக்குவரத்து மற்றும் விநியோகம் | 3,251 |
| 8 | தானியங்கி | 2,940 |
| 9 | வங்கி, நிதி சேவைகள் மற்றும் காப்பீடு | 2,787 |
| 10 | இதர துறைகள் | 16,861 |
| **கூடுதல்** | | **64,721** |

**தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் 2.0**

தீன் தயாள் உபாத்யாயா கிராமப்புற திறன் பயிற்சி திட்டமானது (DDU–GKY) தமிழ்நாட்டில் 2014 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது, தற்பொழுது இத்திட்டமானது மார்ச் 31, 2025 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஊரக மேம்பாட்டு அமைச்சகம் தற்போதைய DDU–GKY 1.0லிருந்து DDU–GKY 2.0க்கு மாற முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதில் தொகுதி (Batch) வாரியாக பணம் விடுவித்தல், உரிய வேலைவாய்ப்பு ஆதாரத்துடன் ஆறு மாதத்திற்கு குறையாமல் வேலைவாய்ப்பு, 20 விழுக்காடு பயிற்சியாளர்களுக்கு சுய வேலைவாய்ப்பை மேம்படுத்துதல், மின்னணு முறையில் பணம் விடுவித்தல் ஆகிய சிறப்புகளை கொண்டது. இதற்கென, தேசிய தகவல் மையம் (NIC) தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து "கிராமின் கௌசல்" எனும் ஒருங்கிணைந்த

கண்காணிப்பு தகவல் முறை (MIS) இணையதளம் உருவாக்கப்படும்.

**DDU–GKY 2.0–ன் முக்கிய அம்சங்கள்:**

- பிரத்யேக திறன் இடைவெளி ஆய்வு மேற்கொள்ளுதல்
- பணியில் தக்கவைப்பதற்கான ஊக்கத்தொகையை பயிற்சியாளர்களுக்கு நேரடி பலன் பரிமாற்றம் (DBT) முறையில் வழங்குதல்
- தொழில் வழிகாட்டு மையங்கள் உருவாக்குதல்
- வேலை வாய்ப்பு முகாம்கள் (Job Melas)
- பயிற்சி பெற்ற பழைய மாணவர்களுக்கு உதவுதல்
- திறன் பயிற்சி கடன்கள் வழங்குதல்

- தொழில் நிறுவனங்களையே பயிற்சி நிறுவனங்களாக தேர்வு செய்து, பயிற்சி வழங்கி வேலைவாய்ப்புகளை வழங்குதல்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு கூடுதல் ஊக்கத்தொகை வழங்குதல்.

2025–26 ஆண்டில் தமிழ்நாட்டில் DDU–GKY 2.0 திட்டத்தின் கீழ் மொத்தம் 10,390 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 6.3 ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs)

மாவட்டங்களில் உள்ள முன்னோடி வங்கிகளால் நிறுவப்பட்டுள்ள ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பிற்கான பயிற்சி அளிப்பதிலும், பயிற்சி பெற்றவர்கள் வங்கி இணைப்பு மூலம் தொழில் தொடங்கி தொழில்

முனைவோராக உருவாக்குவதிலும் ஈடுபட்டு வருகின்றன.

ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகம் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரூ 2.00 கோடி வரை ஒவ்வொரு ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்திற்கும் நிதி உதவி வழங்குகிறது. மேலும், கிராமப்புற வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள பயனாளிகளின் பயிற்சிக்கான பயிற்சி கட்டணத்தை ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களுக்கு மீள வழங்குகிறது. மாநில அரசு ஒவ்வொரு மாவட்ட பயிற்சி நிறுவனத்திற்கும், கட்டிடம் கட்டிட 0.5 முதல் 1.00 ஏக்கர் வரை நிலம் வழங்குகிறது.

பயிற்சிக்கு தேவையான இளைஞர்களை திரட்டுவதில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் தற்சமயம் 8 மாவட்டங்களில் RSETI

க்கு சொந்த பயிற்சி மைய கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 11 மாவட்டங்களில் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. வரும் 2025-26 ஆம் ஆண்டிற்குள் அனைத்து 37 மாவட்டங்களிலும் வங்கிகள் மூலம் பயிற்சி மைய கட்டிடங்களை கட்டி முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2024 -25 ஆம் ஆண்டில் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் மூலம் 35,050 பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 35,796 பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு 17,249 பயனாளிகள் நிரந்தர வாழ்வாதாரம் பெற்றுள்ளனர்.

ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனமும் (RSETIs) 2025-26 ஆம் ஆண்டு முதல் 2.0 பதிப்பிற்கு மாறவுள்ளது.

### 6.4 உன்னதி (UNNATI)

ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கீழ் செயல்படுத்தப்படும் நாடு தழுவிய திட்டமான உன்னதி திட்டம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் 100 நாட்கள் பணி முடித்த குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளிப்பதை நோக்கமாகக் கொண்டு DDU–GKY மற்றும் RSETI திட்டங்கள் மூலமாக திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் DDU–GKY திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றால் அதிகபட்சம் 100 நாட்களுக்கும் RSETI திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றால் அதிகபட்சம் 30 நாட்களுக்கும் MGNREGA, வேலை விகித கூலி உதவி தொகையாக பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும்.

உன்னதி திட்டம் தொடங்கியதில் இருந்து, 1,825 நபர்களுக்கு பயிற்சி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், TNSRLM இந்த இலக்கினை விட கூடுதலாக 2,186 நபர்களுக்கு பயிற்சி வழங்கியுள்ளது. 2024-25ஆம் ஆண்டிற்கு 1,000 நபர்களுக்கு பயிற்சி இலக்காக நிர்ணயிக்கப்பட்டதில், 717 நபர்கள் இதுவரை பயிற்சி பெற்றுள்ளனர்.

### 6.5 இளைஞர் திறன் திருவிழாக்கள் (Youth Skill Festivals) (YSF)

மாநிலத்தில் பல்வேறு துறைகளால் வழங்கப்படும் திறன் பயிற்சிகள், வேலைவாய்ப்புகள் மற்றும் வெளி சந்தையில் கிடைக்கும் வேலைகள் பற்றிய விழிப்புணர்வு தேவைப்படும் இளைஞர்கள் பெருமளவில் உள்ளனர். இளைஞர்கள் தங்களின் விருப்பத்திற்கேற்ப திறன் பெற்றால், இளைஞர்களின் வாழ்வாதாரத்தையும் வேலை

வாய்ப்புகளையும் பெரிதும் மேம்படுத்தும். ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திறன் பயிற்சி திட்டங்கள் குறித்து கிராமப்புற இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இளைஞர்கள் தங்களின் விருப்பங்கள் மற்றும் திறன்களின் அடிப்படையில் பொருத்தமான திறன் பயிற்சிகளை தேர்வு செய்ய உதவவும் இளைஞர் திறன் திருவிழாக்கள் நோக்கமாக உள்ளது.

2024–25ஆம் ஆண்டு மாநிலம் முழுவதும் 50 இளைஞர் திறன் திருவிழாக்களை நடத்த திட்டமிடப்பட்டதில் 50 திறன் திருவிழாக்கள், நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இதில் கலந்து கொண்ட 18,496 இளைஞர்களில் 7,901 இளைஞர்கள் பல்வேறு திறன் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, 3,723 இளைஞர்கள் DDU–GKY, RSETI, TNSDC போன்ற பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளில் சேர்ந்துள்ளனர்.

## 6.6 வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் நேரடி வேலைவாய்ப்பு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வேலை தேடும் இளைஞர்களையும் மற்றும் வேலை வழங்கும் நிறுவனங்களையும் ஒன்றிணைக்க மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நேரடியாக நடத்தப்படுகின்றன. வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்பவர்களுக்கு வேலைவாய்ப்பு விவரங்கள், சம்பளம் மற்றும் நிறுவனங்களின் பிற சலுகைகள் குறித்து விளக்கம் அளிக்கப்படுகிறது. இதனால் இளைஞர்கள் தங்கள் விருப்பங்கள் மற்றும் திறன்களின் அடிப்படையில் பொருத்தமான வேலையினை தேர்வு செய்ய ஏதுவாக அமைகிறது.

2024–25 ஆம் ஆண்டில், மாநிலம் முழுவதும் 50 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 1,07,118 இளைஞர்கள்

திரட்டப்பட்டுள்ளனர், அவர்களில் 22,416 இளைஞர்கள் பல்வேறு நிறுவனங்களில் வேலைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டனர், அவர்களில் 13,710 இளைஞர்கள் பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

## 6.7 சொந்த வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்கள் (Captive Employer)

சொந்த வேலைவாய்ப்பு நிறுவனங்கள் என்பது ஒரு தனித்துவமான முயற்சியாகும். இது தொழில் நிறுவனங்களின் திறன் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பல்துறை திறன் மேம்பாட்டு சூழலை உருவாக்கும் நோக்கத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பின்தங்கிய கிராமப்புற இளைஞர்களுக்கு நீண்டகால வேலைவாய்ப்பு உறுதிப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தொழில் நிறுவனங்கள் திறன் பயிற்சி

நிறுவனங்களாக தேர்வு செய்யப்பட்டு அந்நிறுவனங்கள் மூலம் தேவையான திறன் பயிற்சி வழங்கப்படுகிறது. தற்பொழுது 4 சொந்த வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்கள் திறன் பயிற்சி வழங்க தேர்வு செய்யப்பட்டு, 3,868 இளைஞர்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் சொந்த வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்க 6 நிறுவனங்களின் முன்மொழிவுகள் பரிசீலனையில் உள்ளன. மேலும் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்க தகுதி வாய்ந்த நிறுவனங்களில் DDU–GKY 2.0 திட்டத்தின் கீழ் திட்ட முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளது

# 7. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)

## 7. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமானது, நகர்ப்புர ஏழைகளிடையே சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, அவர்களின் வறுமையையும் நலிவு நிலையையும் குறைத்து, சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலைவாய்ப்புகளுக்கு வழி வகுத்து, அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்துவதும், நீடித்த நிலைத்த தன்மை அடையச் செய்வதாகும்.

நகர்ப்புர உறைவிடமற்றோருக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய உறைவிடத்தை ஏற்படுத்தித் தருதல், நகர்ப்புர தெருவோர வியாபாரிகளுக்கு அவர்களின் வியாபாரத்தினை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில்

பொருத்தமான இடம் ஒதுக்கீடு செய்தல், நிதி அமைப்புகள் மூலம் கடன் வசதி ஏற்படுத்துதல், சமூக பாதுகாப்பு அளித்தல் மற்றும் திறன் வளர்ப்பு மூலம் வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு, அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உதவுதல் போன்றவற்றை முக்கிய இலக்காகக் கொண்டு, இவ்வியக்கம் செயல்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM) ஆரம்ப கால கட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் செயல்படுத்தப்பட்டது, நகர்ப்புர மற்றும் ஊரகப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு திட்டங்களை செயல்படுத்துவதில் அதிகமான அனுபவம் இருப்பதால் 2016 – 17 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM) 1.0 திட்டம் செப்டம்பர் 2024 அன்று

முடிவுற்றது. நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (NULM) ஒரு புதிய திட்டம் முன்மொழியப்பட்டது மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை எதிர் நோக்கியுள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் திட்டக்கூறுகள்:**

## 7.1 சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID)

நகர்ப்புர ஏழைகள் மற்றும் நலிவுற்றோரை ஒருங்கிணைத்து சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்புக்குள் கொண்டு வருவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். மேற்கண்ட குடும்பங்களில் மகளிரை ஒன்று திரட்டி குறைந்தது 10 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், குறிப்பாக தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின மக்கள், சிறுபான்மையினர், மகளிரைத் தலைவியாகக் கொண்ட குடும்பங்கள். மாற்றுத்திறனாளிகள், விதவைப் பெண்கள், மிகவும் நலிவுற்றோர், தெருவோர வியாபாரிகள், குப்பை சேகரிப்பவர்கள், வீட்டுவேலை செய்பவர்கள் மற்றும் கட்டிடத்தொழிலாளர்கள் ஆகியோரை ஒன்றுதிரட்டி சுய உதவிக் குழுவிற்குள் கொண்டு வருவதில் தனிக்கவனம் செலுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுய உதவிக் குழுக்கள் நன்றாக செயல்படுவதற்கு பின்பற்றபட வேண்டிய தவிர்க்க இயலாத ஐந்து குறிக்கோள்கள். அவைகளாவன **அ)** முறையான கூட்டங்கள் **ஆ)** முறையான சேமிப்பு **இ)** முறையான உள்கடன் **ஈ)** முறையான கடன் திருப்பம் மற்றும் **உ)** நாளது தேதி வரை

கணக்குகளை பதிவேடுகளில் பதிவு செய்தல் போன்றவைகளாகும்.

சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாட்டின் கீழ் பின்வரும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 7.1.1 சுய உதவிக் குழு அமைத்தல் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்குதல்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்து பயிற்சி வழங்கப்பட்டு 3 மாதங்கள் முடிவடைந்த பின்பு சமூக மதிப்பீட்டின் அடிப்படையில், அக்குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்படுகிறது. இதன் மூலம், குழுவின் மூலதன நிதியை உயர்த்துவதற்கும், உறுப்பினர்களுக்கு உள்கடன் வழங்குவதை அதிகப்படுத்துவதற்கும் மற்றும்

வங்கிக் கடன் பெறுவதற்கும் ஒரு குழுவிற்கு ரூ 10,000/– வீதம் வழங்கப்படுகிறது.

2024 – 25 ஆம் ஆண்டில் 15,000 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, இதுவரை 5006 குழுக்களுக்கு மொத்தம் 5.00 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

### 7.1.2 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் அமைத்தல் மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு சுழல் நிதி வழங்குதல்

பகுதி அளவிலான கூட்டமைப்பு குறைந்தபட்சம் 10 சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து, வார்டு அளவில் ஏற்படுத்தப்படுகிறது. பகுதி அளவிலான கூட்டமைப்பின் கீழ் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் குறைந்த வட்டியில் வங்கி கடன் பெற்றுதருவது பல்வேறு வாழ்வாதார செயல்பாடுகளை மேற்கொள்ள

மற்றும் பல்வேறு திட்டங்களில் ஒருங்கிணைப்பு மற்றும் விழிப்புணர்வு செயல்பாடுகளில் பங்கு பெறுவதற்கும் வழிகாட்டுகிறது. ஒவ்வொரு பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு ஒருமுறை மட்டும் ஆதரவு நிதியாக ரூ. 50,000/- வீதம் சுழல் நிதி வழங்கப்படுகிறது.

2024 - 25 ஆம் ஆண்டில் 1,000 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை 263 பகுதி அளவிலான கூட்டமைப்புளுக்கு தலா ரூ. 50,000/- வீதம் 13.15 கோடி ரூபாய் சுழல்நிதி வழங்கப்பட்டுள்ளது.

**7.1.3 நகர அளவிலான கூட்டமைப்புகள் அமைத்தல்**

பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டு நகர அளவில் நகர அளவிலான கூட்டமைப்புகள்

ஏற்படுத்தப்படுகிறது. இக்கூட்டமைப்பானது, பகுதி அளவிலான கூட்டமைப்பு மற்றும் அதன் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பெரிய அளவிலான தேவைகளை முன்னெடுக்கும்.

### 7.1.4 நகர்ப்புர வாழ்வாதார மையங்கள்

"நகர்ப்புர ஏழைகளின் உற்பத்தி மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கு தேவையான ஒரு வலுவான தளத்தை ஏற்படுத்தி தருகிறது மற்றும் அனைத்து நகர்ப்புர மக்களுக்கு தேவையான முறைசார துறைகளின் சேவைகளை எளிதில் ஒரிடத்தில் கிடைக்க வழிவகை செய்வதன் மூலம் ஒரிட வணிக மையமாகவும் செயல்படுகிறது. நகர்ப்புர வாழ்வாதார மையங்கள் வேலைவாய்ப்பு மற்றும் திறன் வளர்ப்புகள் குறித்து உரிய தகவல்கள் தேடுபவர்களுக்கு உதவும் ஆதார வள மையமாகவும் திகழ்கிறது. இதுவரை 82 நகர

வாழ்வாதார மையங்கள் மாநிலம் முழுவதும் செயல்பாட்டில் உள்ளது.

## 7.2 திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி

வாழ்வாதார மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு, போன்ற திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவி வழங்க மாநிலம், மற்றும் மாவட்ட அலுவலர்கள், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு, கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு தேவையின் அடிப்படையில் ஒருங்கிணைந்த பயிற்சி வழங்கப்படுகிறது.

சுய உதவிக் குழுக்கள், அதன் கூட்டமைப்புகளுக்கு அவர்களின் கடமை மற்றும் பொறுப்புகள் புத்தகப்பராமரிப்பு மற்றும் கணக்குகள், வங்கி இணைப்பு, நுண்கடன் திட்டமிடல், நுண்நிதி முதலீட்டு முறை, போன்ற

பல்வேறு வகையான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

## 7.3 சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP)

இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டு நெறிமுறையின்படி குறைவான மற்றும் சரியான வட்டி விகிதத்தில் தேவைபடும் நேரம் மற்றும் அளவில் வங்கி கடன் பெறுவதை உறுதி செய்வதன் மூலம் மாநில அளவில் நகர்ப்புர மகளிரின் பொருளாதார மேம்பாடு உறுதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டமானது, நகர்ப்புர தனி நபர் ஏழை மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு அவரவர் திறன் மற்றும் உள்ளூர் நிலைமைக்கு ஏற்றார்போல் சுய வேலைவாய்ப்பு மற்றும் சிறு தொழில் தொடங்குவதற்கு நிதியுதவி அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தங்கள் தகுதிக்கு குறைவான வேலையிலுள்ளோர் மற்றும் வேலைவாய்ப்பில்லாதோர் அவரவர் உள்ளூர்

தேவைக்கு ஏற்ப உற்பத்தி, சேவை மற்றும் வியாபாரம் தொடர்பான சிறு நிறுவனங்கள் தொடங்க இத்திட்டமானது ஊக்கமளிக்கிறது.

### 7.3.1 நகர்ப்புர சுய உதவிக் குழு வங்கி இணைப்பு / சுய உதவிக் குழுக்களுக்கான சுய வேலைவாய்ப்பு திட்டம் – வங்கி இணைப்பு (SEP–BL)

நகர்ப்புர சுய உதவிக் குழுக்கள் வங்கியை எளிதில் அணுகி நிதி தொடர்பான சேவைகளை பெறுவதற்கு ஏதுவாக வழிவகை செய்து தருவதற்கு தேவையான முன்னெடுப்பாக சுய உதவிக் குழு வங்கி இணைப்பு திட்டம் செயல்பட்டு ஏழைகள் கடன் பெறும் உரிமையை உறுதிபடுத்துகிறது. சுய உதவிக் குழு வங்கி இணைப்புத் திட்டமானது, குழுக்கள் கடன் பெறும் உரிமை மற்றும் வங்கியை எளிதில் அணுகி நிதி தொடர்பான சேவைகள் பெறுவதை உறுதிபடுத்துவதற்கான முன்னெடுப்புகளை

எடுத்து வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு வங்கிகளுடன் வலுவான உறவை கட்டமைப்பதன் மூலம் தொடர்ந்து குறைந்த வட்டி விகிதத்தில் வங்கி கடன் இணைப்பை உறுதி செய்வதற்கும் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு தேவையான கூடுதல் நிதியை பெறுவதற்கும் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு வங்கியுடன் தொடர்புகொண்டு இந்திய ரிசர்வ் வங்கி வகுத்த வழிகாட்டு முறைகளின் படி, வட்டி மான்யத்துடன் கூடிய கடன் பெற வழி வகை செய்யப்படுகிறது.

2024-25 ஆம் ஆண்டில் மொத்தம் 1,67,199 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.10,684.71

கோடி வங்கி இணைப்பாக பெற்றுத் தரப்பட்டுள்ளது.

### 7.3.2 குழு சுய வேலைவாய்ப்பு திட்டம் (SEP–G)

சுய உதவிக் குழுவைச் சார்ந்த குறைந்தது இரண்டு உறுப்பினர்கள் அல்லது நகர்ப்புர ஏழைகள் குழுவாக இணைந்து சுய வேலைவாய்ப்பிற்கான சிறுதொழில் துவங்குவதற்கு, ரூ.10 இலட்சம் வரையில் வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெறுவதற்கு இத்திட்டம் வழிவகை செய்கிறது.

2024 – 25 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 3,782 தொழில் குழுக்களுக்கு 151.87 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

### 7.3.3 தனிநபர் சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP–I)

இத்திட்டத்தின் மூலம் நகர்ப்புர ஏழைகள், தனிநபராக சுய வேலைவாய்ப்பிற்காக நுண் நிறுவனத்தை நிறுவுவதற்கு ரூ.2 இலட்சம் வரையில் வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெறுவதற்கு வழிவகை செய்கிறது.

2024 – 25 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் கீழ் 6,642 தனிநபர்களுக்கு 42.95 கோடி ரூபாய் வங்கிக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 7.3.4 வட்டி மான்யம்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், நகர்ப்புர ஏழைகளுக்கு சரியான வட்டி விகிதத்தில் வங்கிக் கடன் வழங்குவதை ஊக்குவிக்கும் விதமாக சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மான்யத்துடன், வங்கிக்கடன் அளிக்க பைசா

(PAiSA) இணையதளம் வழியாக பெறுவதற்கு வழிவகை செய்கிறது. வட்டி மான்யம் என்பது ஒரு வங்கியின் நடைமுறையில் உள்ள வட்டி விகிதத்தில் 7 சதவீதத்திற்கும் மேலுள்ள வட்டி திரும்ப வழங்கப்படுவது. சுய உதவிக் குழுக்கள் பெறும் வங்கிக்கடனில் மேற்படி வித்தியாச தொகை திரும்ப வழங்கப்படுகிறது. மேலும், தங்களது கடன் தொகையினை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கூடுதலாக 3 சதவிகிதம் வட்டி மான்யம் வழங்கப்படுகிறது.

## 7.4 தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. சுய வேலைவாய்ப்பு திட்டத்தில் பயன்பெற்ற தனிநபர் மற்றும் குழு தொழில் முனைவோர்களுக்கு தொழில் முனைவோர்

மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில், தொழில் முனைவோர் பற்றிய விழிப்புணர்வு, தொழில் முனைவோர் திறன் மேம்பாடு, தொழில் திட்டம் தயாரித்தல், பிற அரசு துறை திட்டங்களிலிருந்து நிதி திரட்டுதல் மற்றும் சந்தைபடுத்துதல் தொடர்பாக பயிற்சி அளிக்கப்படுகிறது.

2024–25ஆம் ஆண்டில் தொழில் முனைவோர்க்கான பயிற்சிகள் நகர்ப்புரத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள 7,500 மகளிர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 7.5 கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் பிறதுறைகளுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் இயக்கத்தின் முக்கிய நோக்கமான வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாடு அடைவதற்கு பாடுபடுகிறது.

- பாரத பிரதமர் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களை மேம்படுத்தும் திட்டத்தில் (PMFME) உணவு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள நகர்ப்புர சுய உதவிக் குழு உறுப்பினர்கள் உணவு உற்பத்தி தொடர்பான நுண் நிறுவனங்களை நிறுவுவதற்கு தேவையான நிதியை பெறுவதில் முக்கிய பங்குதாரர்களாக விளங்குகின்றனர்.
- மக்களைத் தேடி மருத்துவத் திட்டம் தமிழ்நாட்டின் 649 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் தொற்றா நோய்களை கண்டறிதல் மற்றும் கண்காணித்தல் பணியினை சுய உதவிக் குழுவைச் சார்ந்த 2,256 மகளிர் சுகாதார தன்னார்வலர்களால் மேற்கொள்ளப்படுகிறது.
- தூய்மை பாரத இயக்கம் – 2.0 (நகர்ப்புரம்) திட்டத்தின் கீழ் குடியிருப்பு அளவில் திட

மற்றும் திரவ கழிவு மேலாண்மையினை, செயல்படுத்துவதற்கு வீடு வீடாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் நகர்ப்புர சுய உதவிக் குழு உறுப்பினர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர்.

- சென்னை பெருமாநகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள மறுகுடியமர்வு குடியிருப்புகளில் உள்ள மகளிர்களை ஒருங்கிணைத்து சமுதாய அமைப்புகளை உருவாக்கி அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.
- நகர்ப்புர சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பேரூராட்சி பகுதிகளில் உள்ள பள்ளிகளில் 'மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் மைய பொறுப்பாளராக செயல்பட்டு வருகின்றனர்.

கீழ்க்கண்ட திட்டங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் இத்திட்டங்களை ஒருங்கிணைத்து நிதியுதவி வழங்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- நகர்ப்புர தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரம் (**SUSV**)
- நகர்ப்புர வீடற்றோருக்கு உறைவிடம் (**SUH**)

# 8. தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP) @ வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP) 2.0

## 8. தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP) @ வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP) 2.0

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எனும் பெயரில், உலக வங்கியின் நிதி உதவியுடன் தமிழ்நாடு அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டமாகும். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதல் கட்டம் (Phase 1) மற்றும் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளின் மூலம் பெறப்பட்ட கற்றல்களின் அடிப்படையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. 2005–06 ஆம் நிதியாண்டில் ஏழைகளின் நிறுவனங்களை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்ட வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் (Phase – 1), மக்கள் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வின் (PIP) மூலம் ஏழை மக்கள் அடையாளம் காணப்பட்டனர். இந்த அணுகுமுறை

2013 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வட்டாரங்கள் மற்றும் மாவட்டங்களில் வெற்றிகரமாகப் பிரதிபலிக்கப்பட்டது. இது வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களுக்கான ஒரு வெற்றிகரமான மாதிரியாக மதிப்பிடப்பட்டு பாராட்டப்பட்டது. வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதல் கட்டம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட முயற்சிகளை மேம்படுத்தி தொழில் மேம்பாடு, நிதி இணைப்புகள் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான உயர்நிலை நிறுவனங்களை உருவாக்க 2018 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டம் கிராமபுறத் தொழில்களை ஊக்குவித்தல், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பொருளாதார நிலையை

மேம்படுத்துதல், மகளிர் தொழில்முனைவோர் மூலம் கிராமப்புறங்களில் நிலையான தொழில் நிறுவனங்களை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் 31 மாவட்டங்களிலுள்ள (சென்னை, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், தருமபுரி, கன்னியாகுமரி மற்றும் திருப்பத்தூர் தவிர) 120 வட்டாரங்களில் உள்ள 3,994 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது.

## 8.1 திட்ட மேம்பட்டு நோக்கங்கள்:

தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் ஊரகத் தொழில் முனைவுகளை உருவாக்குதல், நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலை வாய்ப்பினை உருவாக்குதல் ஆகியவை வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

### 8.2 நிதி முறை:

உலக வங்கி மற்றும் தமிழ்நாடு அரசு 70:30 என்ற விகிதத்தில் ரூ.919.73 கோடி (119.01 மில்லியன் அமெரிக்க டாலர்) மதிப்பிடப்பட்ட செலவினத்தில் இந்த திட்டத்திற்கு நிதியளிக்கிறது. உலக வங்கியின் கடன் உதவி ரூ.643.81 கோடி (83.31 மில்லியன் அமெரிக்க டாலர்) மற்றும் தமிழக அரசின் (GoTN) நிதியுதவி ரூ.275.92 கோடி (35.70 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும்.

### 8.3 திட்டத்தின் முக்கியக் கூறுகள்:

இந்த திட்டம் பின்வரும் நான்கு முக்கிய கூறுகளை உள்ளடக்கியது:

i) ஊரகத் தொழில் முனைவுக்கு ஏற்ற சூழல் மேம்பாடு

ii) தொழில் முனைவுக்கான திட்ட நிதி வழங்குதல்

iii) திறன் மற்றும் வேலை வாய்ப்புகள்

iv) திட்ட மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மைக் கட்டமைப்பு (ESMF), பாலின சமத்துவம், தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பம் (ICT), அறிவுசார் மேலாண்மை மற்றும் தகவல் தொடர்பு (KMC), கொள்முதல் மற்றும் ஒப்பந்தம் (P&C) ஆகியவை திட்டத்தின் அனைத்து கூறுகளுடனும் இணைந்து செயல்படும்.

**8.4 திட்டத்தின் முக்கிய செயல்பாட்டு நுணுக்கங்கள்**

இந்தத் திட்டம் பின்வரும் உத்திகளுடன் செயல்படுத்தப்படுகிறது

i) நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பம் மற்றும் நிதி சார்ந்த உதவிகள்
ii) சமுதாயத் திறன் மற்றும் பண்ணை பள்ளிகள்
iii) தொழில்முனைவோருக்கான திட்ட நிதி வழங்கல்

iv) வணிகப் புதுமைக் கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்

v) நிறுவனங்களை நிறுவுதல்.

vi) தொழில்முனைவோருக்குத் திறன் மேம்பாடு

vii) கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

viii) தகவல் மேலாண்மை அமைப்பு.

ix) அறிவு சார் மேலாண்மை மற்றும் தகவல் தொடர்பு

x) சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பு (ESMF)

**8.5 குழு நிறுவனங்கள்**.

குழு நிறுவனங்களுக்கு நிர்வாக மேலாண்மை, புத்தகப் பராமரிப்பு, நிதி மேலாண்மை, உற்பத்தி பொருள்களை ஒருங்கிணைத்தல் போன்ற தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படுகிறது. மேலும், உற்பத்தியாளர் குழுக்களுக்கு, சமுதாய பண்ணை

பள்ளிகள் மூலம் தொழில்நுட்ப ரீதியிலான உதவிகள் வழங்கப்படுகிறது.

ஒரே துறையில் கூட்டாகப் பணியாற்றத் தயாராக இருக்கும் நபர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு சமுதாய திறன் பள்ளிகள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பிறகு, பயிற்சி பெற்றவர்களை ஒன்றிணைக்கப்பட்டு, தொழிற்குழுவாக உருவாக்கப்படுகின்றது.

துவக்க நிதி வழங்குதல், வங்கிகடன் இணைப்பை ஏற்படுத்துதல், உற்பத்தி பொருள்களுக்கு சந்தை இணைப்பை ஏற்படுத்துதல் ஆகியவை குழு நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நிதி மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த உதவிகளாகும்.

### 8.5.1 குழு நிறுவனங்களுக்கு துவக்க நிதி

குழு நிறுவனங்களுக்கு உற்பத்தியை அதிகரிக்கவும், உள்ளீடு செலவைக் குறைக்கவும், தரத்தை மேம்படுத்தவும், நிறுவனங்களின் வருமானம் மற்றும் இலாபத்தை அதிகரிக்கவும் குழு நிறுவனங்களுக்கு துவக்க நிதி வழங்கப்படுகிறது.

**8.5.1.1 தொழிற்குழுக்கள்** – 10 முதல் 30 உறுப்பினர்கள் கூட்டு உரிமை மற்றும் வணிக நடவடிக்கைகளின் மீது பகிரப்பட்ட வளங்கள் மற்றும் இலாபத்துடன் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளனர். பொருளாதார மேம்பாட்டிற்காகவும், உற்பத்தி செலவைக் குறைக்கவும், தரத்தை மேம்படுத்தவும் மற்றும் வருவாயை அதிகரிக்கவும் ஒன்றுபடுகின்றனர். தொழிற்குழுக்கள் உரிய தகுதியை அடைந்ததின் அடிப்படையில் ரூ.75,000 துவக்க நிதி வழங்கப்படுகின்றன.

2024–25 ஆம் நிதியாண்டு வரை, 1000 தொழிற்குழுக்களுக்கு துவக்க நிதியாக ரூ. 9.30 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**8.5.1.2. உற்பத்தியாளர் குழுக்கள்** – 30 முதல் 150 உற்பத்தியாளர்ளை குழுவாக ஒன்றிணைத்து உற்பத்தி திறனை அதிகரித்தல், விளை பொருட்களை ஒன்று திரட்டுதல் மற்றும் இதர கூட்டு நடவடிக்கைகளுக்காக அமைக்கப்படுகின்ற ஒரு குழுவாகும். முக்கிய தகுதிகளை அடைந்ததின் அடிப்படையில் உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.75,000 துவக்க நிதி வழங்கப்படுகிறது.

2024–25 நிதியாண்டு வரை, 5,000 உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.50.73 கோடி துவக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

**8.5.1.3 உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் –** உற்பத்தியாளர் கூட்டமைப்பு என்பது உற்பத்தியாளர் குழு உறுப்பினர்கள் மற்றும்

அவர்களது விளைபொருட்களை ஒருங்கிணைத்தல், மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் உறுப்பினர்களுக்கு சேவையை வழங்குதல் ஆகியவற்றிற்காக முறையான உயர்நிலை ஒருங்கிணைப்பு ஆகும். உரிய தகுதிகளை எய்தியதற்குப் பின் இக்கூட்டமைப்புகளுக்கு ரூ.30.00 இலட்சம் வரை துவக்க நிதி வழங்கப்படுகிறது. 300 முதல் 3,000 உற்பத்தியாளர்கள் வரை ஒருங்கிணைத்து உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் உருவாக்கப்படுகிறது. தற்போது செயல்பாட்டில் உள்ள 19 உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் மற்றும் 34 புதிய உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் இத்திட்டத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளன. இக்கூட்டமைப்புகள் அனைத்தும் இந்திய நிறுவனங்கள் சட்டம், 2013-ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2024–25 ஆம் நிதியாண்டு வரை, 53 உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கு ரூ.14.50 கோடி துவக்க நிதி உதவி அளிக்கப்பட்டது.

**8.6 தனிநபர் தொழில் நிறுவனம்**:

தனிநபர் நிறுவனமானது ஒரு தனிநபர் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட தனிநபர்களுக்குச் சொந்தமான நிறுவனமாகும். தனிப்பட்ட நிறுவனங்கள், நுண், குறு மற்றும் சிறு தொழில்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. ரூ.5 இலட்சம் வரை முதலீடு செய்யும் நிறுவனங்களை நுண் நிறுவனங்கள் என்றும், ரூ.5 முதல் 15 இலட்சம் வரையிலான முதலீடு செய்யும் நிறுவனங்களை குறு நிறுவனங்கள் என்றும், ரூ.15 முதல் 30 இலட்சம் வரையிலான முதலீடுகள் செய்யும் நிறுவனங்களை சிறு நிறுவனங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இந்த நிறுவனங்கள் திட்டத்தின் இணை மானிய திட்டத்துடன் உதவப்படுகின்றன.

**8.7 சமுதாயத் திறன் மற்றும் பண்ணைப் பள்ளிகள்**

ஏழை எளிய மக்களின் திறமையை மேம்படுத்துவதற்கும் வாழ்வாதார மேம்பாட்டிற்கும், வருமானத்தை உயர்த்துவதற்கும் தொழில் திறன்மேம்பாடு என்பது இன்றியமையாததாகும். ஊரகப் பகுதியில் உள்ள மக்களுக்கு அவர்களின் பகுதியிலேயே பயிற்சி அளிக்க, அப்பகுதியிலேயே உள்ள திறன் வாய்ந்த தொழில் வல்லுநர்கள் மூலம் சமுதாயத் திறன் பள்ளிகள் மற்றும் சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்படுகின்றன. பாரம்பரிய மற்றும் அதிக வருமானம் ஈட்டக்கூடிய கைவினைத் தொழில்களைச் செய்பவர்கள் மற்றும் வல்லுநர்களைத் தேர்வு செய்து, குறைந்தபட்ச உட்கட்டமைப்புகளுடன் ஊராட்சி / ஒன்றிய அளவில் சமுதாயத் திறன் பள்ளிகளை அமைத்து,

ஊரகப் பகுதிகளில் திறன் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### 8.7.1 சமுதாயத் திறன் பள்ளிகள் (CSS)

உள்ளூர் மற்றும் பாரம்பரிய வருமானம் ஈட்டக்கூடிய திறன்களின் அடிப்படையில், தேவையான உள்கட்டமைப்புடன் தொழில் செய்யக்கூடிய உள்ளூர் செயல் வல்லுநர்கள்/ நிபுணர்கள் அல்லது தொழில்முனைவோர்களை முதன்மை பயிற்சியாளர்களாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் (PLF) மூலம் தேர்வு செய்யப்படுகிறார்கள். இந்தப் பயிற்சியாளர்கள், அதே கிராமத்தில்/வட்டாரத்தில் சமுதாயத் திறன் பள்ளிகளை அமைத்து, ஊதியம் மற்றும் சுயதொழில் தொடங்குவதற்கு, ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகளை அளிக்கின்றனர். சமுதாயத் திறன் பள்ளிகள் அமைக்க ஏதுவாக இத்திட்டத்தின் மூலம் ரூ.70,000 முதல் ரூ.1.00 இலட்சம் வரை

வழங்கப்படுகிறது. இதில் பயிற்றுநரின் ஊதியம், பயிற்சிக் கருவிகள், சீருடைகள் போன்றவைகள் அடங்கும்.

2024-25 ஆம் நிதியாண்டு வரை, 2,526 சமுதாயத் திறன் பள்ளிகள் அமைக்கப்பட்டு, 51,193 கிராமப்புற இளைஞர்களுக்கு ரூ.19.30 கோடியில் திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது, இதில் 324 கொத்தனார் பயிற்சி, 259 தையல் பயிற்சி, 233 எலக்ட்ரீசியன் பயிற்சி, 140 இரு சக்கர வாகன பழுது நீக்கப்பயிற்சி, 115 வெல்டிங் பயிற்சி, 53 பிளம்பிங் பயிற்சி, 45 செல்போன் பழுது பார்ப்பு பயிற்சி, 9 படகு பழுது பார்க்கும் பயிற்சிப் பள்ளிகள் மற்றும் பிற அடங்கும்.

### 8.7.2 சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் (CFS)

சமுதாயப் பண்ணைப் பள்ளிகள், பயிர்களின் உற்பத்தி, உற்பத்தித்திறன், பயிர் பல்வகைப்படுத்துதல், கால்நடை மற்றும் கோழிவளர்ப்புகளை மேம்படுத்தும் பொருட்டு அமைக்கப்படுகின்றன. இப்பள்ளிகள், பலவருட அனுபவத்தின் மூலம் நிபுணத்துவம் பெற்ற, புதிய யுக்திகள், தொழில்நுட்ப அறிவு மற்றும் பிற விவசாயிகளுக்கு கற்றுக்கொடுக்கும் திறன் கொண்ட முன்னோடி விவசாயிகளால் வழிநடத்தப்படுகிறது.

வல்லுநர்கள் மற்றும் முன்னோடி விவசாயிகள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் (TNAU) / வேளாண் அறிவியல் மையம் (KVK) / தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS) மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. இவர்கள் மற்ற

விவசாயிகளுக்கு தொடர்ச்சியான வழிகாட்டுதல்களை வழங்குகின்றனர். சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்க ஏதுவாக ரூ. 70,000 முதல் ரூ. 1.00 இலட்சம் வரை நிதி இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. இதில் பயிற்றுநரின் ஊதியம், பயிற்சிக் கருவிகள், செயல் விளக்கப் பண்ணைகளை நிறுவுதல் போன்றவைகள் அடங்கும்.

2024–25 ஆம் நிதியாண்டு வரை, 6000 சமுதாயப் பண்ணை பள்ளிகள் அமைக்கப்பட்டு, 1,82,337 உற்பத்தியாளர்குழு உறுப்பினர்களுக்கு ரூ.51.01 கோடி செலவில் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த நடவடிக்கைகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 3075 பயிர்சாகுபடி, 1920 கறவைமாடு பராமரிப்பு, 547 ஆடு வளர்ப்பு, 458 புறக்கடை கோழி வளர்ப்பு போன்ற பயிற்சிகள் அடங்கும்.

### 8.7.3 புலம்பெயர்ந்தோர் ஆதரவு மையம் (MSC):

புலம்பெயர்ந்தோர் ஆதரவு மையமானது, புலம் பெயர்ந்தோருக்கு தங்குமிட வசதி, வேலைவாய்ப்புகள் உட்பட, அவர்களின் வளர்ச்சிக்கு தேவையான சேவைகளைப் பெற உதவுகிறது. செங்கல்பட்டு மாவட்டம், சிங்கப் பெருமாள் கோவிலில் 40 பேர் (20 ஆண்கள் + 20 பெண்கள்) தங்கக்கூடிய வகையில் புலம்பெயர்ந்தோர் ஆதரவு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரை, 462 நபர்கள் இம்மையத்தின் சேவைகளைப் பயன்படுத்தியுள்ளனர். இரண்டாவது புலம்பெயர்ந்தோர் ஆதரவு மையமானது, 20 பேர் தங்கக்கூடிய வகையில் கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையமானது முழுக்க முழுக்க பெண்களுக்காகவே பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை

(31.01.2025), 117 பெண் புலம்பெயர்த்தோர்கள் இம்மையத்தினை பயன்படுத்தியுள்ளார்கள்.

**8.8 தொழில் முனைவுக்கான நிதியை முறைப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களின் மூலம் வழங்குதல்**

தனிநபர் மற்றும் குறுநிறுவனங்களின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்த முறைப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களின் மூலம் கடனுதவி அளிக்கப்படுகிறது. நிதி நிறுவனங்களுடனான இணைப்புகள் மூலம் வணிகத் திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்காக, இணை மானிய நிதி திட்டம் (MGP) என்ற திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**8.8.1 இணை மானிய நிதி திட்டம் (MGP)**

இணை மானிய நிதி திட்டம் (MGP) என்பது தமிழ்நாட்டின் கிராமப்புற வளர்ச்சியை உள்ளடக்கியதும், பொருளாதார வளர்ச்சியை

மேம்படுத்துவதை நோக்கமாகவும் கொண்டுள்ளது. இணை மானிய நிதி திட்டம் (MGP) என்பது நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதில் தேவை மற்றும் விநியோக இடைவெளியை நிரப்ப உருவாக்கப்பட்ட ஒரு நிதியாகும். இது கிராமப்புற தொழில்முனைவோருக்கு முறையான வங்கியிணைப்பினைப் பெறுவதை எளிதாக்குகிறது. நிதி நிறுவனங்களிடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தும் தொழில்முனைவோரை இணை மானிய நிதி திட்டம் (MGP) ஊக்குவிக்கும். இத்திட்டம் முறையான ஆவணங்களை உறுதி செய்தல், வணிகத் திட்டம் தயாரித்தல், உரிய நேரத்தில் கடனை வழங்குதல், அதனைப் பயன்படுத்துதல் மற்றும் திருப்பிச் செலுத்துதல் ஆகியவற்றில் தேவையான வழிகாட்டுதல்களைப் பயனாளிகளுக்கு வழங்குவதன் மூலம் கடன்

பெறுவோரின் நேரத்தையும், சிரமத்தையும் குறைக்கிறது.

இணை மானிய நிதித் திட்டம் (MGP) முதல் தலைமுறை தொழில்முனைவோர், பெண்கள் தலைமையிலான வணிகங்கள்/ நிறுவனங்கள் தொழிற் குழுக்கள், உற்பத்தியாளர் கூட்டமைப்பு, மாற்றுத்திறனாளிகள் தலைமையிலான நிறுவனங்கள் மற்றும் நிதித்துறைகளில் சவாலாகக் கருதப்படும் பிற வகை நிறுவனங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இணை மானிய நிதித் திட்டத்தின் (MGP) கீழ், 10,790 நிறுவனங்களுக்கு ஆதரவாக ரூ.126.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இது விகிதாசாரப்படி ரூ.375.00 கோடி வரை கடன் இணைப்புகளை அதிகரிக்கும். கடன் தொகையில் 70% முறையாக திருப்பிச் செலுத்தினால், கடன் வாங்கியவர் 30% மானியத்திற்கு தகுதிபெறுவார்.

இணை மானிய நிதி திட்டமானது 10,010 நுண், 500 குறு, 120 சிறு தனிநபர் நிறுவனங்கள், 150 தொழிற் குழுக்கள் மற்றும் 10 உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் ஆகியவற்றிற்கு வழங்கப்படும். நுண், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு சராசரியாக ரூ.1.00 இலட்சம், ரூ.3.00 இலட்சம் மற்றும் ரூ.5.00 இலட்சம் மானியப் பகுதியாக முறையே அனுமதிக்கப்படும். தொழிற் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் முறையே ரூ.1.50 இலட்சம் மற்றும் ரூ.40.00 இலட்சம் மானியப் பகுதியாக அனுமதிக்கப்படும்.

2024-25 ஆம் நிதியாண்டு வரை, 9,421 தனிநபர் நிறுவனங்களுக்கு இணை மானிய நிதி ரூ.94 கோடியும், 152 தொழிற் குழுக்களுக்கு ரூ.1.5 கோடியும், 6 உற்பத்தியாளர் கூட்டமைப்புக்கு ரூ. 2.0 கோடி. மொத்தத்தில், 10,044 நிறுவனங்களுக்கு ரூ.108.76 கோடி

ஆதரவு அளிக்கப்பட்டு, முறைப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களிடமிருந்து ரூ.325 கோடி கடன்களைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**8.8.2 நுண் தொழில் நிறுவன நிதி:**

- நுண் தொழில் நிறுவன நிதி (Nano Enterprise Financing Fund – NEFF) என்பது புதிய மற்றும் ஏற்கனவே உள்ள தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக மகளிர் சுய உதவி குழுக்களின் பெண்களுக்காக உருவாக்கப்பட்ட பிரத்தியேகமான கடன் உதவி திட்டமாகும்.
- கிராமப்புறங்களில் உள்ள நுண் தொழில் நிறுவனங்கள், செயல்பாட்டு மூலதனப் பற்றாக்குறை மற்றும் மாறிவரும் வணிகச் சூழல் ஆகியவற்றால் சிரமங்களை எதிர்கொள்கின்றன. கோவிட் தொற்றுநோய் மற்றும் தொடர்ச்சியான

ஊரடங்கின் காரணமாக கிராமப்புற நிறுவனங்கள் அதிகமாக பாதிப்படைந்தன. இந்த சூழலில், வாழ்ந்து காட்டுவோம் திட்டமானது, 3994 கிராமத்தில் உள்ள 88,974 சுய உதவிக் குழு பெண்கள் மற்றும் அவர்களின் குடும்ப பயனாளிகளுக்கு ரூ.259.80 கோடி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (PLF) மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் (VPRC) மூலம் நுண் தொழில்கள் நசிந்து விடாமல் காக்க நுண் நிறுவன நிதியை மென் கடனாக (Soft Loans) வழங்கியது. இந்த கடன் தொகையானது பயனாளர்களால் திருப்பிச் செலுத்தப்பட்டு வருகின்றது. ஜனவரி 2025 நிலவரப்படி, ரூ.235.30 கோடி பயனாளர்களால் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது.

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (PLF) மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திடம் (VPRC) திருப்பிச் செலுத்தப்படும் தொகையானது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் (PLF) ஒன்றாகத் தொகுக்கப்பட்டு, **நுண் தொழில் நிறுவன நிதி(NEFF)** எனப் பெயரிடப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28 ஜூன் 2023 அன்று இத்திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்கள். நுண் தொழில் நிறுவன நிதியானது ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளால் (PLF) நிர்வகிக்கப்படுகிறது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது தொழில்முனைவோர் தேர்வு, கடன் மதிப்பீடு, ஆவணங்கள் சரிபார்த்தல் மற்றும் கடன் வழங்குதல் போன்ற அனைத்து நெறிமுறைகளைப்

பின்பற்றி புதிய மற்றும் ஏற்கனவே உள்ள நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக நுண் தொழில் நிறுவன நிதி கடன் வழங்குகிறது. ஜனவரி 2025 நிலவரப்படி, 18,251 தொழில்முனைவோருக்கு நுண் நிறுவனங்களைத் தொடங்க அல்லது மேம்படுத்துவதற்காக ரூ.97.89 கோடி நுண் தொழில் நிறுவன நிதி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**8.9 வணிகப் புதிய முயற்சிகளை ஊக்குவித்தல்.**

வணிக புதிய முயற்சிகள் (Business Innovation) என்பது எந்தவொரு தொழில் அல்லது நிறுவனமும் புதிய யோசனைகள், பணிப்பாய்வுகள், சேவைகள், தயாரிப்புகள் மற்றும் வழிமுறைகளை அறிமுகப்படுத்தும் ஒரு செயல்முறையாகும். வணிக புதிய முயற்சிகள் பொதுவாக தொழில் நிறுவனங்களின் சிக்கல்களைத் தீர்த்து,

ஏற்கனவே உள்ள தயாரிப்பு மற்றும் தொழில் உத்திகளை ஊக்குவித்து, வணிகத்தை மேம்படுத்தி புதிய வாடிக்கையாளர்களை சென்றடைவதை வழிவகை செய்வதாகும். வணிக புதிய முயற்சிகள் ஊக்குவிப்பு என்பது மாநிலத்தின் தொழில் சூழல் அமைப்பில் உள்ள சவால்களை சமாளிக்கும் வகையில் மாற்று யோசனைகளை வடிவமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியனவாகும்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட தனிநபர் மற்றும் குழு தொழில் நிறுவனங்களுடன் புதிய தொழில் நிறுவனங்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில்துறை மாணவர்கள் இணைந்து வணிகப் புதுமைத் தொழில் திட்டங்களை செயல்படுத்த இத்திட்டம் வழிவகை செய்கிறது. இதுவரை, 14 புதுமையான வணிக திட்டங்கள் வாழ்ந்து

காட்டுவோம் திட்டத்தின் கீழ் ரூ. 1.05 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**8.10 நிறுவனங்களை நிறுவுதல்:**

**8.10.1 மதி சிறகுகள் தொழில் மையம் (MSTM)**

வணிக மேம்பாட்டு சேவைகளை வழங்குதல், வணிகத் திட்டம் தயாரித்தல், மதிப்பீடு செய்தல், மற்றும் வணிகத்தைத் தொடங்குவதற்கான ஆதரவு சேவைகளை ஊரக நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு வழங்க "மதி சிறகுகள் தொழில் மையம்" நிறுவப்பட்டுள்ளது.

31 திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் 42 மதி சிறகுகள் தொழில் மையங்கள் நிறுவப்பட்டுள்ளது. மதி சிறகுகள் தொழில் மையம் மூலம், தொழில்முனைவோருக்கு பின்வரும் சேவைகள் வழங்கப்பபட்டுள்ளன.

**அட்டவணை – 8.10**

**மதி சிறகுகள் தொழில் மையம் (MSTM)**

| வ எ ண் | சேவைகள் | வழங்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சட்ட ஆலோசனை மற்றும் பதிவுகள் – சேவைகள் | 49,575 |
| 2 | தொழில் சார்ந்த வழிகாட்டுதல்கள் போன்ற சேவைகள் | 491 |
| 3 | தொழில் வல்லுனர்களிடம் ஆலோசனை சேவைகள் | 473 |
| 4 | தொழில் திட்டம் தயாரித்தல் (MGP) | 18,498 |
| 5 | தொழில் திட்டம் தயாரித்தல் (இதர திட்டங்கள் / துறைகள் மூலம்) | 5,752 |
| 6 | e–சேவை | 4,887 |
| 7 | இதர சேவைகள் | 166 |

01.01.2023 முதல் பல்வேறு சேவைகளை வழங்குவதற்கான கட்டண அட்டைகள் செயல்படுத்தப்பட்டது. இதுவரை மதி சிறகுகள் தொழில் மையம் மூலம் சேவைக் கட்டணமாக ரூ.1.86 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

## 8.10.2 தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மையம் மற்றும் புதிய தொழில் உருவாக்க மையம் (TN–RISE)

பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு தொழில்முனைவு ஒரு சக்திவாய்ந்த கருவியாக உள்ளது. பெண் தொழில்முனைவோர் நிதி, சந்தை இணைப்பு, தொழில் கூட்டமைப்புகள் மற்றும் தொழில்நுட்பத்தை அணுகுவதில் தொடர்ந்து சிரமங்களை எதிர்கொள்கின்றனர், மேலும் பாலினம் சார்ந்த பிரச்சனைகள் அவர்களின் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் நிலைத்த தன்மையைத் பாதிக்கின்றது. கிராமப்புற பெண் தொழில்முனைவோர் கிராமப்புர மற்றும் நகர்ப்புர வேறுபாடு காரணமாக மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

பெண்கள் எதிர்கொள்ளும் இத்தகைய சவால்களுக்கு தீர்வு காணும் வகையில், பெண்களுக்கான பிரத்யேக புதிய தொழில் இயக்கம் அமைக்கப்படும் என தமிழக அரசு சட்டசபை அரங்கில் அறிவித்தது. இந்த அறிவிப்பை நிறைவேற்ற, வாழ்ந்துகாட்டுவோம் திட்டம், **தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மையம் மற்றும் புதிய தொழில் உருவாக்க மையம் (Tamil Nadu Rural Incubator and Startup Enabler – TN–RISE)** என்ற பெயரில் புதிய நிறுவனத்தை உருவாக்கியுள்ளது. இந்த நிறுவனம்,

- ஆர்வமுள்ள பெண் தொழில்முனைவோரை மேம்படுத்துதல்
- பெண் தொழில்முனைவோருக்கு உயர்தர ஆதரவு சேவைகளை வழங்குதல்
- அவர்களின் வணிக எல்லைகளை விரிவுபடுத்துதல்.
- மகளிர் தொழில் நிறுவனங்களின்

வளர்ச்சிக்கு தேவையான உள்கட்டமைப்பு மற்றும் தொழில்முறை நிபுனத்துவம் ஆகியவற்றை வழங்குதல்.

- ❖ தனிப்பயனாக்கப்பட்ட சந்தை இணைப்புகள், நிதியளித்தல் மற்றும் செயல்பாட்டு ஆலோசனைகளை வழங்குதல்
- ❖ உயர்தர வணிக அடைகாக்கும் சேவைகளை வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

## 8.11 தனிநபர் தொழில்முனைவோருக்கு திறன் வளர்ப்பு:

### 8.11.1 தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி:

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டப் (Entrepreneurship Development Program – EDP) பயிற்சியானது நிதி, சந்தைப்படுத்தல், வணிகத் திட்டம் தயாரித்தல், பிற திட்டங்களுடன் ஒன்றிணைதல், சட்டப்

பூர்வ இணைக்கங்கள் போன்ற பல்வேறு அம்சங்களில் ரூ.2.28 கோடி செலவில் 9,106 தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**8.11.2 முன்னோடி விவசாயிகளுக்குப் பயிற்சி:**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் (TNAU), வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (FCRI), ஆவின் திறன் மேம்பாட்டு மையம் (Aavin Skill Development Centre) மற்றும் ஆந்திரபிரதேச சமூக இயற்கை விவசாயம் (Andhra Pradesh Community Managed Natural Farming – APCNF) மூலம் 113 முன்னோடி விவசாயிகளுக்கு (SPARKs) பயிர், இயற்கை வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு நடைமுறைகள் குறித்த இரண்டாம் நிலை சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், திட்ட ஊழியர்களுக்கு தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (HCRI), பெரியகுளம்

மூலம் வேளாண் நடைமுறைகள் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

**8.11.3 சான்றிதழ்:**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், 715 சமுதாயத் திறன் பள்ளி பயிற்சியாளர்களுக்கு (கொத்தனார், தையல், எலக்ட்ரீசியன் மற்றும் இரு சக்கர வாகன பழுது பார்த்தல் போன்ற நான்கு தொழில்களின்) முன் கற்றல் அங்கீகாரத்தின் (Recognition of Prior Learning – RPL) கீழ் மதிப்பீடு செய்து சான்றிதழ் பெற்றுள்ளனர்.

**8.11.4 கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கான திறன் மேம்பாடு:**

- திட்ட விளக்கம், நிர்வாகம், கையேடு பராமரித்தல், நிதி மேலாண்மை, வணிகத் திட்டம் தயாரித்தல் ஆகிய பயிற்சியானது, திட்டத்தின் அனைத்து புதிய மற்றும் ஏற்கனவே உள்ள உற்பத்தியாளர்

கூட்டமைப்புகளின் முதன்மை செயல் அலுவலர் (CEO) மற்றும் இயக்குநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, அனைத்து உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கும் அந்தந்த விளைப்பொருட்கள் குறித்த பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

- பேக்கேஜிங் மற்றும் பிராண்டிங்கின் முக்கியத்துவம் குறித்த நான்கு நாட்கள் பயிற்சி இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் பேக்கேஜிங் (IIP), சென்னை மூலம் உற்பத்தியாளர் கூட்டமைப்புகளின் இயக்குநர்கள் மற்றும் முதன்மை செயல் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.
- உற்பத்தியாளர் கூட்டமைப்பின் தலைமை செயல் அலுவலர்கள், மாவட்ட செயல் அலுவலர்கள், செயல் அலுவலர்கள் (தொழில் மேம்பாடு) மற்றும் இளம் வல்லுநர்கள் ஆகிய

அனைவருக்கும் உண்டு, உறைவிட உற்பத்தியாளர் கூட்டமைப்பிற்கான மேலாண்மை மேம்பாட்டுப் பயிற்சி (MDP) ஊரக மேலாண்மை நிறுவனம் ஆனந்த் (IRMA) மூலமாக வழங்கப்பட்டது.

- மதுரை வேளாண் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு மையம் (MABIF) மூலம் 34 புதிய உற்பத்தியாளர் கூட்டமைப்புகளின் இயக்குநர்கள் மற்றும் முதன்மை செயல் அலுவலர்களுக்கு நிதி மேலாண்மை பயிற்சி நடத்தப்பட்டது.
- அனைத்து இயக்குநர்கள் மற்றும் புதிய உற்பத்தியாளர் கூட்டமைப்புகளின் முதன்மை செயல் அலுவலர்கள், வேளாண் வணிகத் துறையால் உருவாக்கப்பட்ட ஐந்து செயல்திறன் கொண்ட உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

- உற்பத்தியாளர் கூட்டமைப்பின் சிறந்த நடைமுறைகளைக் கற்பதற்காக திட்ட ஊழியர்கள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்புகளின் முதன்மை செயல் அலுவலர்கள் நாசிக்கிலுள்ள சகாயத்ரி உழவர் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

**8.11.5 திட்ட பணியாளர்களுக்கான திறன் மேம்பாடு:**

- சர்வதேச நிதி நிறுவனத்தின் மூலம் இத்திட்டப் பணியாளர்களுக்கு சிறு, குறு நிறுவனங்களுக்கான கடன் உதவி வழங்கிட முறையான நிதி நிறுவனங்கள் மூலம் மூன்று முறை பயிற்சி நடத்தப்பட்டது. இதில் 150 முதன்மை பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றனர். தொடர் பயிற்சி முறை மூலம் மாவட்ட ஊழியர்கள், வட்டார ஊழியர்கள் மற்றும் தொழிற்சார்

சமூக வல்லுநர்கள் பயிற்சி பெற்றனர்.

- உற்பத்தியாளர் கூட்டமைப்பிற்கான நிதியுதவி பயிற்சி அனைத்து இளம் வல்லுனர்களுக்கும், தொழில் வல்லுநர்களுக்கும், நிறுவன மேம்பாட்டு அலுவலர் / நிறுவன நிதி அலுவலர் / செயல் அலுவலர்கள், நிறுவன நிதி வல்லுநர்கள் & உற்பத்தியாளர் கூட்டமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரிகளுக்கும் இந்திய மேலாண்மைக் கழகம் திருச்சிராப்பள்ளியில் (IIM, Tiruchirappalli) பயிற்சி வழங்கப்பட்டது.
- 35 திட்டப் பணியாளர்கள் (செயல் அலுவலர்கள் – நிதி நிறுவன மேம்பாடு, நிறுவன நிதி வல்லுநர்கள்) ஊரக மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனம் (IRMA) ஆனந்த் மூலம் பயிற்சி வழங்கப்பட்டது.

**8.12 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு**

கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (M&E) என்பது திட்டத்தில் ஏதேனும் குறைபாடுகளோ அல்லது திட்ட இலக்கில் இருந்து விலகலோ இருப்பின் அதனைக் கண்டறிந்து குறிப்பிட்ட காலத்திற்குள் சரி செய்ய திட்ட மேலாளர்களுக்கு உதவி செய்யவும், திட்ட செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்த விபரங்களை தயார் செய்வதற்கும் தொடர்ந்து இயங்கும் ஒரு செயல் முறையாகும். இது திட்டச் செயலாக்கத்தின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய யதார்த்தமான, நிகழ்நேர மற்றும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய தகவல்களை வழங்கும்.

**8.12.1 கொரோனா** சிறப்பு **நிதி (CAP) தாக்கம் குறித்த** மதிப்பீடு **– நிதி மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (IFMR):**

தமிழ்நாட்டின் 31 மாவட்டங்கள் மற்றும் 120 வட்டாரங்கள் முழுவதும் கொரோனா சிறப்பு

நிதி மூலம் ஏற்படுத்தப்பட்ட தாக்கத்தை மதிப்பிடுவதற்கான அடிப்படை, இறுதிகட்ட மற்றும் நிறுவனங்கள் விவரக்குறிப்பு கணக்கெடுப்பை நடத்தும் நோக்கத்திற்காக IFMR நிறுவனம் ஈடுபடுத்தப்பட்டது.

கேள்வித்தாள்கள் மூலம் அளவு மற்றும் தரமான அம்சங்களை சேகரிப்பதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்காணல்களை பின்பற்றி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**8.12.2 குறைகளை தீர்க்கும் செயல்முறை:**

தொழில் முனைவோராக உள்ள சுய உதவிக்குழு குடும்ப உறுப்பினர்களுக்கு பணியிடத்தில் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. திட்ட செயல்பாட்டாளர்கள் மற்றும் பயனாளிகள் திட்ட மாவட்டங்களில் இருந்து குறை தீர்க்கும் செயல்முறை (GRM) புகார்களை பதிவு செய்ய இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு

செய்யப்பட்ட புகார்களுக்கு அந்தந்த மாவட்ட திட்ட மேலாண்மை அலகினால் (DPMU) தீர்வு காணப்படுகிறது. இதுவரை, 317 புகார்கள் இணையத்தளத்தில் பதிவு செய்யப்பட்டு, அவற்றில் 292 தீர்க்கப்பட்டுள்ளன.

**8.13 தகவல் மேலாண்மை அமைப்பு.**

தகவல், தொடர்பு மற்றும் தொழில்நுட்பம் (ICT) என்பது திட்டத்தின் செயல்பாடுகளை நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் அவற்றின் திறமையான செயல்பாட்டிற்கான இணையதளத்தை நிறுவுவது இன்றியமையாததாகும். இந்த திட்டத்திற்கான ஒருங்கிணைந்த இணையதளம் (IDP) உருவாக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது.

ஒருங்கிணைந்த இணையதளத்தில் (www.idp.tnrtp.org), கோவிட் நிதி உதவித் தொகுப்பு (CAP), மாவட்ட பகுப்பாய்வு அறிக்கைகள் (DDS), மதிப்புத் தொடர் ஆய்வு அறிக்கைகள் (VCA),

குறை தீர்க்கும் செயல்முறை (GRM), இளைஞர்கள் விபரங்கள் குறித்த தரவுத்தளம் (YDB), பண்ணை விபரங்கள் குறித்த தரவுத்தளம் (FDB), இணை மானிய நிதி திட்டம் (MGP), சமுதாயத் திறன் பள்ளிகள் (CSS), சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் (CFS), நுண் தொழில் நிறுவனங்களுக்கான நிதி (NEFF), அறிவு சார் மேலாண்மை தகவல் களஞ்சியம் (KMR), தொழில் நிறுவன மேம்பாடு (EPM) மற்றும் மதி சிறகுகள் தொழில் மையம் (MSTM) ஆகிய திட்ட கூறுகள் செயல்பாட்டில் உள்ளன.

இந்த ஒருங்கிணைந்த மின்னணு தளத்தின் பயன்பாடு, இத்திட்டத்தின் தகவல் மேலாண்மை அமைப்பை (MIS) பலப்படுத்துகிறது. மேலும், திட்டம் குறித்த அனைத்து தரவுகளையும் உடனுக்குடன் பெறும் வகையிலும் செயல்படுகிறது.

### 8.13.1. அறிவு சார் மேலாண்மை, தகவல் தொடர்பு மற்றும் கற்றல் முறைகள்

இந்த கூறுகளின் நோக்கம், செயல்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட அறிவு தகவலினை திறம்பட இயக்குவதற்கான வழிமுறைகள் மற்றும் செயல்முறைகளை உருவாக்குவதுடன் முதன்மை, இரண்டாம்–நிலை பங்குதாரர்கள் மற்றும் வெளிப்புற பார்வையாளர்களுக்கு தொடர்பு தொகுப்பு மூலம் பரப்பப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் அறிவு தகவல்கள், திட்ட செயலாக்கம் தொடர்பான கற்றல் மற்றும் திறன் மேம்பாட்டிற்கு திறம்பட பயன்படுத்தப்படும்.

தகவல் கல்வி தொடர்பு (IEC), சமூக ஊடக மேலாண்மை, வலை தள மேலாண்மை, காணொளி, வெற்றிக் கதைகள் மற்றும் புகைப்படத்தின் ஆவணங்கள், மக்கள் மற்றும் ஊடக தொடர்பு, திட்ட படைப்பாளிகளுக்கான

உள்ளடக்க உருவாக்கம், வடிவமைப்பு, மற்றும் நிகழ்வு (ம) கண்காட்சி மேலாண்மை ஆகியவை இந்தக்கூறுகளால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் ஆகும்.

**8.13.2 சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பு (ESMF)**

சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பின் (ESMF) முதன்மை நோக்கம், திட்டத் தலையீடுகளின் நீண்டகால சுற்றுச்சூழல் மற்றும் சமூக நிலைத்தன்மைக்கு உத்தரவாதம் அளிப்பதாகும். நிறுவனங்களால் ஏற்படும் எதிர்மறையான சுற்றுச்சூழல் மற்றும் சமூக விளைவுகளை முன்கூட்டியே நிவர்த்தி செய்வதும் குறைப்பதும், அதே நேரத்தில் அவற்றின் நேர்மறையான சுற்றுச்சூழல் மற்றும் சமூக பங்களிப்புகளை அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும். கூடுதலாக, கட்டமைப்பு சூழல் நட்பு நிறுவனங்களின் வளர்ச்சியை

ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் மதிப்புச் சங்கிலிகளின் நீடித்த சுற்றுச்சூழல் மற்றும் சமூக நிலைத்தன்மையைப் பாதுகாத்து வருகிறது.

- 31 மாவட்டங்களில் உள்ள 1218 குழு நிறுவனங்களுக்கு ஒரு விரிவான கண்காணிப்பு செயல்முறை நடத்தப்பட்டுள்ளது. இந்தக் குழுக்கள் 524 உற்பத்தி குழுக்கள், 591 நிறுவனக் குழுக்கள், 50 MGPகள் மற்றும் 53 உற்பத்தி நிறுவனங்களை கொண்டுள்ளது. இந்தக் கண்காணிப்பின் விளைவாக, சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைப்பதற்கும் அவர்களின் வணிகச் செயல்பாடுகளில் ஆற்றல் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் இலக்காகக் கொண்ட தீர்வு நடவடிக்கைகளைச் செயல்படுத்த பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

- பசுமைத் தணிக்கைகள் முடிந்ததைத் தொடர்ந்து, பண்ணை மற்றும் பண்ணை சாரா 280 வணிகங்களின் கார்பன் உமிழ்வைக் கண்டறிய மதிப்பீடு செய்யப்பட்டதில் சுமார் 4.6 டன் CO2 உமிழ்வுகள் 2022 க்கும் 2023க்கும் இடையில் குறைவடைந்துள்ளதை தணிக்கை மூலம் கண்டறியப்பட்டது.
- வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தால் ஆதரிக்கப்படும் நிறுவனங்களில் சுமார் 5% ஆகும். இந்த பசுமை முயற்சிகளின் விளைவாக, பயனாளிகள் எதிர்காலத்தில் கார்பன் வரவுகளைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெறலாம்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த நடவடிக்கைகள் மற்றும் வணிக நடைமுறைகளை செயல்படுத்துவதன் அடிப்படையில், பசுமை மதிப்பீடுகளை வழங்குவதற்காக

(ESMF) சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மைக் கட்டமைப்பு 53 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு மதிப்பீடுகளை நடத்தியது.

- மதிப்பீடு செய்யப்பட்ட 53 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு, 50 கூட்டமைப்புகள் புதுமையான பசுமை நடைமுறைகளை மேற்கொள்வதற்காக பசுமை ஊக்க நிதியைப் பெற தகுதியானவையாகும். 2022 ஆம் ஆண்டில், 14 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு பசுமை மதிப்பீடுகளுடன் அங்கீகரிக்கப்பட்டன, இது மொத்த பசுமை மானிய நிதியான ரூ. 23 இலட்சம். 2024 ஆம் ஆண்டில், பசுமை முயற்சிகளை மேலும் மேம்படுத்துவதற்காக 38 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு 1.55 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- பங்கேற்பு உத்திரவாத அமைப்பு (PGS) சான்றிதழின் கட்டமைப்பிற்குள், 133 விவசாயிகளுக்குச் சொந்தமான மொத்தம் 160.42 ஏக்கர் இயற்கை வேளாண்மைக்கான மண்டல குழுமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# 9. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் உள்ள சங்கங்கள்

## 9. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் உள்ள சங்கங்கள்

### 9.1 தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC)

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) 2001 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்நிறுவனம், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975–ன் கீழ் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ், ஒரு அங்கமாக செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாவன திட்டப் பணியாளர்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மற்றும் மாநில / மாவட்ட / வட்டார அளவிலான முதன்மைப் பயிற்றுநர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி வழங்குதல், திட்டத்திற்கான பயிற்சி

உபகரணங்கள் / கையேடுகள், விளக்க அட்டைகள் மற்றும் பயிற்சி சார்ந்த பிற புத்தகங்கள் உருவாக்குதல், சமூக, பொருளாதார மேம்பாட்டு தொடர்பான சமுதாயம் சார்ந்த திட்டங்களுக்கு தேவையான சேவைகளை வழங்குவதாகும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பல்வேறு கூறுகளுக்கான மாநில வளப் பயிற்றுநர்கள், மற்றும் மாவட்ட வளப்பயிற்றுநர்களை தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் தேர்வு செய்துள்ளது. இந்நிறுவமானது, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூறுகளான நிறுவன கட்டமைப்பு மற்றும் திறன் மேம்பாடு, நிதி உள்ளாக்கம், கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு போன்ற துறைகளின் உதவியுடன், சுய உதவிக் குழுக்களுக்கான

வழிகாட்டி கையேடு, மின்னணு பரிவர்த்தனை குறித்த கையேடு, நிதி கல்வியறிவு குறித்த பிரசுரம், உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் (தொகுதி 1 மற்றும் தொகுதி 2), பாலினம் மற்றும் பாலின பாகுபாடு, நிறங்கள் (மாதவிடாய் சுகாதார மேலாண்மை), மன நலம் (மன நலத் திட்டம்) குறித்த பயிற்சிக் கையேடுகளையும் மற்றும் உணவு ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் (FNHW), பாலினம் மற்றும் பாலின பாகுபாடு கையேட்டிற்கான விளக்க படங்களை உள்ளடக்கிய புத்தகத்தை உருவாக்கி உள்ளது.

2025–2026 ஆம் ஆண்டில், இம்மையமானது (TNVRC), மக்கள் கற்றல் மையம் / சமுதாயத்தால் நிர்வகிக்கும் பயிற்சி மையம் (CMTC) அனைத்து நிர்வாகிகளுக்கும், நிர்வாகம் மற்றும் நிதிமேலாண்மை குறித்த பயிற்சி வழங்குவதன் மூலம் வலுப்படுத்திடவும், மேலும்,

இந்நிறுவனங்களின் நிறுவன மற்றும் நிதி ஒழுக்கத்தை மதிப்பிடுவதற்காக தர மதிப்பீடு செய்து இதன் மூலம் அவற்றின் முன்னேற்றத்திற்கான தலையீட்டை எளிதாக்குவதற்கும் முன்மொழிந்துள்ளது.

## 9.2 முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் பெண்கள் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு மகளிர் செயல்பாடுகள் மற்றும் திட்டங்களுக்கு தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு கருவியாக செயல்பட ஒரு மாத இதழ் இன்றியமையாததாக கண்டறியப்பட்டது. அதன் விளைவாக முற்றம் சங்கம், தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975–ன் 27வது பிரிவின் கீழ் தோற்றுவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. 1998ஆம் ஆண்டு முதல் முற்றம் மாத இதழ் 25 ஆண்டுகளுக்கும் மேலாக

மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. முற்றம் மாத இதழின் முதல் பதிப்பு 10,500 பிரதிகளுடன் வெளியிடப்பட்டது. தற்போது, முற்றம் மாத இதழ், தமிழ்நாடு முழுவதும் சந்தா செலுத்திய 1,30,000 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு இதன் மூலம் 22 இலட்சம் உறுப்பினர்களைச் சென்றடைகிறது.

சுய உதவிக் குழு மகளிரை மட்டுமே வாசகராகக் கொண்டுள்ள முற்றம் இதழானது, தற்போது அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் இதழாக வெளியிட வேண்டும் என்ற நோக்கத்தில், முற்றம் இதழானது புதிய பொலிவுடனும், சிறந்த வடிவமைப்புடனும், அனைத்துத் தரப்பினரும் விரும்பும் பயனுள்ள செய்திகளை உள்ளடக்கிய இதழாக வெளிவருகிறது.

இச்சிறப்புமிகு முற்றம் மாத இதழில், மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் போன்றவற்றின் வெற்றிக் கதைகள், மகளிர் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு துறைகளின் திட்டங்கள், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் பெண்களுக்கான உரிமைகள், பெண் கல்வி, பெண்கள் பாதுகாப்பு சட்டங்கள், வறுமை ஒழிப்பு செயல்பாடுகள், பெண் தொழில் முனைவோர் முன்னேற்ற செயல்பாடுகள், கூட்டுத் தொழில் நடவடிக்கைகள், இயற்கை வேளாண்மை, உடல் நலம் மற்றும் மருத்துவக் குறிப்புகள், உணவு, ஊட்டச்சத்து, சுகாதாரம், பாலின சமத்துவம், தன்

சுத்தம் குறித்த ஆலோசனைகள், மாற்றுத் திறனாளிகளின் செயல்பாடுகள் மற்றும் மனநலம் சார்ந்த பயிற்சிகள் போன்ற தகவல்கள் இடம் பெற்று மிளிர்கின்றன.

## 9.3 தமிழ்நாடு மாநில வழுங்கல் மற்றும் விற்பனை சங்கம் – (TNSSMS)

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை மேம்படுத்தவும், சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பல்வேறு நிறுவனங்களில் மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கமும் ஒன்றாகும். இச்சங்கம் மகளிர் சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்த தேவையான முந்தைய மற்றும் பிந்தைய தொழில் உதவிகளை செய்து வருகிறது.

தேசிய கண்காட்சி மற்றும் பிற துறை கண்காட்சிகளுக்கு சுய உதவிக் குழு

உறுப்பினர்களை பங்கேற்க செய்தல் மற்றும் மாநில அளவில் கண்காட்சிகள் நடத்துதல் போன்ற பணிகளை செய்கிறது. இச்சங்கத்தின் கீழ் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கமானது சந்தைப்படுத்துதலுக்காக உருவாக்கப்பட்ட சந்தை வாய்ப்புகளை கண்காணித்து வருகிறது.

மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் சுய உதவிக் குழுக்களுக்கு தங்களது பொருட்களை மதிப்பு கூட்டுதல் மற்றும் பேக்கேஜிங் போன்ற செயல்பாடுகளுக்கு உறுதுணையாக உள்ளது. இது தவிர விலை நிர்ணயம், தரத்தை உறுதி செய்தல், இணைய கட்டணம் மற்றும் இணைய பரிவர்த்தனையில் உள்ள முறைகேடுகள் போன்றவற்றுக்கு அறிவுரைகள் வழங்குதல் போன்ற பணிகளோடு மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை மேம்படுத்தி விற்பனை செய்யும் பணியினை மேற்கொள்கிறது.

# 10. முடிவுரை

## 10. முடிவுரை

தமிழ்நாடு அரசு மகளிரின் ஒட்டு மொத்த முன்னேற்றத்திற்கு முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது. இதில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மகளிரின் ஒட்டு மொத்த வளர்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, ஏழை மற்றும் விளிம்பு நிலையில் உள்ள மகளிருக்கு திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதார திட்டங்களின் மூலம் அவர்களின் சமூக பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரமளிப்பு முன்னேற்றத்தை உறுதி செய்வதில் மிக முக்கிய பங்காற்றி வருகிறது.

ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளில் விளிம்பு நிலையில் உள்ள இலக்கு மக்களின் சமூக மேம்பாட்டிற்கு வாழ்வாதார இயக்கமானது உறுதியளிக்கிறது. விடுபட்ட அனைத்து மகளிரையும் குழுக்களில் இணைத்து, பயிற்சிகள் மூலம் திறனை மேம்படுத்தி, அவர்களை சமுதாயம்

சார்ந்த அமைப்புகளோடு இணைப்பதற்கு இந்நிறுவனம் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் உள்ள சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் திறனை மேம்படுத்தி சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, பல்வேறு அரசு திட்டங்களின் நன்மைகளை கொண்டு செல்வதை உறுதி செய்கிறது.

தமிழ்நாடு அரசு, பொருளாதார மேம்பாட்டையும், சமுதாயத்தில் பாலின சமத்துவத்தை அடைந்திட பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளின் மூலம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு பாலினம் மற்றும் சமத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மகளிர் தங்கள் உரிமைகளைப் பெற்றிடவும், தேவைப்படும்போது சட்ட ஆதரவு அமைப்புகளை அணுகவும் தொடர்ந்து உதவி புரிந்து வருகிறது. மேலும், சமூக மற்றும் பொருளாதார ரீதியாக, விளிம்பு நிலை

மற்றும் பின்தங்கிய ஏழை குடும்ப மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் நலத்திட்டங்கள் சென்றடைவதை உறுதி செய்வதற்கு சிறப்பு உத்வேகம் அளிக்கப்படுகிறது.

பண்ணை சார் மற்றும் பண்ணை சாரா வாழ்வாதார நடவடிக்கைகளை மேலும் வலிமைப்படுத்துவதற்கான தொகுப்பு நடவடிக்கைகள், மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் வணிக அடையாளக் குறியீடு ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகிய திட்டங்கள் இணைந்து செயல்படுகிறது. ஒருங்கிணைந்த வளங்களின் மூலம் சிறப்பான செயல்பாடுகளை வெளிக்கொணர்தல் மற்றும் சமுதாயத்திற்கு மதிப்பளிக்கும் முன்மாதிரிகள் போன்றவற்றின்

மூலம் இந்த இயக்கங்களுக்கிடையே வலிமையான பிணைப்பு ஏற்படுகிறது.

அரசு திட்டங்களின் பயன்கள், ஏழை எளிய மக்களைச் சென்றடைவதை உறுதி செய்வதே அரசின் நோக்கமாகும். இத்திட்டங்கள் மற்றும் சேவைகளை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கூட்டமைப்பின் வாயிலாக மிகவும் பின்தங்கிய கடைக்கோடி குடும்பங்களையும் சென்றடைவதை உறுதி செய்து, சுய உதவிக் குழுக்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களின் வாழ்க்கையும் வாழ்வாதாரமும் மேம்படுவதற்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அனைத்து துறைகளுடனும் இணைந்து, ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்** அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையின் கீழ் அனைத்து விதமான வளர்ச்சிகளை உள்ளடக்கிய வறுமையற்ற தமிழ்நாட்டை உருவாக்க வேண்டுமென்ற தொலைநோக்கு பார்வையினை நிறைவேற்றும் வகையில் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து செயல்படுத்தி வருகிறது.

**உதயநிதி ஸ்டாலின்**
**துணை முதலமைச்சர்**
**தமிழ்நாடு அரசு**

# உலக மகளிர் தின விழா – சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குதல்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டது.

# உலக மகளிர் தின விழா – சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குதல்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது.


## மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் சென்னையில் உணவுத் திருவிழா துவக்கி வைக்கப்பட்டது




# மாநில அளவில் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்கும் விழா




## மாவட்ட வாரியாக ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை–28.02.2025 வரை



# மாவட்ட வாரியாக அனைத்து சுய உதவிக் குழுக்களின் வங்கிக் கடன் இணைப்பு (2024–2025)



## சுய உதவிக் குழுக்களின் வங்கிக் கடன் இணைப்பு ஆண்டு வாரியான சாதனை
## (2001 முதல் 2024–25 வரை)



## மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகள் வழங்கப்பட்டது



## மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகள் வழங்கப்பட்டது



# மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் சரஸ் மேளா கண்காட்சி துவக்கி வைக்கப்பட்டது



## வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள்











## சந்தைப்படுத்துதல் முயற்சிகள்



புதுக்கோட்டையில் வாங்குபவர் மற்றும் விற்பனையாளர் சந்திப்பு -



செங்கல்பட்டு, மஹிந்திரா உலக நகரத்தில் பெருநிறுவன சந்தை




சென்னையில் மண்டல மின்னணு வர்த்தக சேவை முகாம்



செங்கல்பட்டில் அடுக்குமாடி குடியிருப்பு சந்தை

## மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் புதிதாக வடிவமைக்கப்பட்ட முற்றம் மாத இதழ் மற்றும் மின்மதி 2.0 கைபேசி செயலியை அறிமுகப்படுத்துதல்





# ஒருங்கிணைப்பு மூலம் சமூக உள்ளீடுகள்



பாலின வள மையங்கள் (GRCs)



பாலின அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான பிரச்சாரம் (GBV 3.0)



உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் (FNHW)



மாதவிடாய் சுகாதார மேலாண்மை பயிற்சி



சட்ட விழிப்புணர்வு பயிற்சி

# வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் தொழில் நடவடிக்கைகள்



தொழிற் குழு
கைவினைப்பொருட்கள் உற்பத்தி



சமுதாயப் பண்ணை பள்ளி
இயற்கை விவசாயம்



இணை மானிய நிதி திட்டம்
நூல் நூற்பு உற்பத்தி நிறுவனம்



மதி சிறகுகள் தொழில் மையம்



உற்பத்தியாளர் குழு



தொழிற் குழு
தோடா பழங்குடி நெசவு நிறுவனம்